விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2047 மார்கழி 12 செவ்வாய்க்கிழமை (27.12.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 008

## 3 1/2 கிலோ கஞ்சாவுடன் நபரொருவர் கைது

(கரணவாய் )

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு கடத்தப்படவிருந்த 3 1/2 கிலோக்கிராம் கஞ்சாவுடன் நபர் ஒருவரை தாம் கைது செய்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் கஞ்சா கடத்தப்படுவதாக வவுனியா பொலிஸாருக்கு தகவலொன்று தெரிவிக்கப்பட்டு

23ஆம் பக்கம் பார்க்க....

## சுனாமியால் காவுகொள்ளப்பட்டோரின் கல்லறைகளை கட்டியணைத்து கதறியழுது உறவுகள் அஞ்சலி!



(யாழ்ப்பாணம் )

சுனாமி பேரலையின் கோரப்பிடியில் சிக்கி உயிரிழந்தவர்களின் 12 ஆவது நினைவு தின நிகழ்வு நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. வடக்கு-கிழக்கு உட்பட நாட்டின் பல பாகங்களிலும் அஞ்சலி நிகழ்வுகள் விசேட வழிபாடுகள் என்பன இடம்பெற்றன.

இதில் உயிரிழந்தவர்களின் உறவுகள் கண்ணீர் மல்க கதறியழுது தமது அஞ்சலிகளை செலுத்தியிருந்தமை காணக்கூடியதாக இருந்தது.

(மேலும் படங்கள் செய்திகள் உள்ளே...)

✷ வட-கிழக்கு இணைப்பு ✷ சமஷ்டி ✷ சுயநிர்ணய உரிமை

# மக்களிடம் கூறியதை மறந்து விட்டோமா?

## கூட்டத்தை கூட்டி தெளிவுபடுத்துங்கள்; இரா.சம்பந்தனுக்கு ஆனந்தன் எம்.பி அவசரக் கடிதம்



(குருமன்காடு)

இனப்பிரச்சினைக்கு தீர்வுபெற்றுத்தருவதாக கூறி தேர்தலில் வென்று மக்களின் ஆணையைப் பெற்றுள்ள நாம் கொடுத்த உறுதிமொழிகளின்படி தற்போது என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்று புரியவில்லை என கருத்து வெளியிட்டுள்ள த.தே.கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், இது தொடர்பில் ஆராய்வதற்கு த.தே.கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன் உடன் கூட்டவேண்டும் எனவும் அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். (23-ம் பக்.)

## குளத்து நீரில் மூழ்கி சிறுவன் பலி

(யாழ்ப்பாணம் )

குளத்தில் குளிக்க சென்ற சிறுவனொருவன் நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் ஒன்று நேற்றைய தினம் யாழ்.அளவெட்டி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

அளவெட்டி அலுக்கையை சேர்ந்த பரமேஸ்வரன் சாருஜன் (வயது 09) என்ற சிறுவனே இதில் உயிரிழந்துள்ளார்.

24ஆம் பக்கம் பார்க்க....

## பொலிஸ்மா அதிபர் தடை விதிக்கவில்லை

பொலிஸ் ஊடகம்



(கொழும்பு)

தனியார் ஊடகங்களுக்கு பொலிஸ் செய்திகளை பின்னூஞ்

23ஆம் பக்கம் பார்க்க....

## சு.க பொதுச் செயலாளர் பதவி சமலுக்கு வழங்கப்பட வேண்டும்

### மைத்திரியிடம் சிரேஷ்ட உறுப்பினர்கள் கோரிக்கை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் பதவியை மகிந்த ராஜபக்ஷவின் சகோதரரான முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவுக்கு வழங்குமாறு கட்சியிலுள்ள சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடம் கோரிக்கை விடுத்துள்ளதாக அரசியல் வட்டாரங்களிலிருந்து தகவல்கள் கசிந்துள்ளன.

மகிந்த ராஜபக்ஷ அணிக்கும், மைத்திரிபால சிறிசேன தரப்புக்கும் இடையிலான முறுகலுக்கு முடிவு கட்டி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பலப்படுத்தும் நோக்கிலேயே இத்தகையதொரு யோசனை முன்வை

23ஆம் பக்கம் பார்க்க....

## கீரிமலைக் கடலில் சுழியில் அகப்பட்ட ஆசிரியர் மரணம்

(யாழ்ப்பாணம் )

கீரிமலை கடற்பரப்பில் உருவான சுழியில் அகப்பட்டு பாடசாலை ஆசிரியர் ஒருவர் நேற்றையதினம் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

சங்கானையை சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையும் இளவாலை கென்றி அரசர் வித்தியாலய ஆசிரியருமான வேலாயுதம் நகுலன்

23ஆம் பக்கம் பார்க்க....

## மகிந்த விட்ட அதே தவறை மைத்திரி அரசும் செய்கிறது

### அமைச்சர் றிசாத் குற்றச்சாட்டு

(கொழும்பு)

முஸ்லிம் மக்களுக்கு எதிராக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விட்ட அதே தவறை மைத்திரி-ரணில் நல்லாட்சி அரசாங்கமும் செய்கிறது என கைத்தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளை கடந்த அரசாங்கம் அடக்கியிருந்தால் மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக கிளர்ந்தெழும்ப வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது எனவும் அவர் தெரிவித்தார்.

புத்தளம் தாருல் உலூம் அல் அஸ்

23ஆம் பக்கம் பார்க்க....

## தாஜுடீன் கொலை: மறியல் நீடிப்பு!

(கொழும்பு)

றக்பி வீரர் வஸீம் தாஜுடீன் கொலை தொடர்பில் கைது செய்யப்பட்ட முன்னாள் மேல் மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அநுர சேனாநாயக்க மற்றும் நாரஹேன்பிட்டி பொலிஸ் குற்றப் பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரி சுமித் பெரேரா ஆகியோர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

23ஆம் பக்கம் பார்க்க....

## யாழ்.பண்ணைப் பகுதியில் நிறுவப்பட்டிருந்த தொலைத்தொடர்பு கோபுரம் சரிந்து வீழ்ந்தது



(யாழ்ப்பாணம்)

யாழ்.பண்ணை பகுதியில் நிறுவப்பட்டிருந்த இலங்கையிலே மிக உயரமான தொலைத்தொடர்பு கோபுரம் நேற்று திடீரென சரிந்து விழுந்துள்ளது.

இதனால் அப்பகுதியில் நேற்றையதினம் பெரும்

23ஆம் பக்கம் பார்க்க....



## மருத்துவ பீடத்துக்கு யாழ்.போதனாவில் 8 மாடிக்கட்டடம்

(யாழ்ப்பாணம் )

உயர் கல்வி அமைச்சின் 720 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் யாழ்ப்பாண மருத்துவ பீட கற்கைநெறிக்கான 8 மாடிகளை கொண்ட கட்டடத் தொகுதி யாழ் போதனா வைத்தியசாலையில் அமைக்கப்படவுள்ளதாக யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் எஸ்.சத்திய

23ஆம் பக்கம் பார்க்க....

# டிக்கெட் இன்றி பயணிப்பவர்களுக்கு அபராதத்தை அதிகரிக்க யோசனை

(கொழும்பு)

அனுமதிச் சீட்டு (டிக்கெட்) இன்றி இலங்கை போக்கு வரத்துச் சபை பேருந்துகளில் பயணிப்பவர்களுக்கு விதிக்கப்படும் அபராதத்தை 1000 ரூபா வரை உய ர்த்துவதற்கான யோசனை ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, போக்கு வரத்து அமைச்சிடம் குறித்த யோசனை வழங்கப்பட்டுள்ளதாக, இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர், ரமால் சிறிவர்த்தன தெரிவித்தார்.

தற்போது அரச பேருந்துகளில் டிக்கெட் இன்றி பயணிப்பவர்களுக்கு 250 ரூபா மற்றும் இரட்டிப்பு பேருந்து கட்டணம் என்பன அபராதமாக விதிக்கப்படுகின்றது.

மேலும், கடந்த 10 வருடங்களாக குறித்த அபராதத் தொகை அதிகரிக்கப்படவில்லை என ரமால் சிறிவர்த்தன தெரிவித்தார்.

எது எவ்வாறு இருப்பினும, சில தூரப் பயணங்களுக்கான பேருந்து கட்டணம் தற்போது 500 ரூபாயை விட அதிகமாக காணப்படுவதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-10)

# 3700 கோடி ரூபா கடனை செலுத்துமாறு இலங்கை அரசிடம் ஈரான் கோரிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஈரானுக்கான விஜயத்தை முன்னெடுக்கவுள்ள நிலையில் எண்ணெய் இறக்குமதி செய்தமைக்கான தனது நாட்டிற்கு செலுத்த வேண்டிய 3700 கோடி ரூபாயிற்கும் அதிகமான கட்டணத்தை செலுத்துமாறு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் ஈரான் கோரியுள்ளது.

அடுத்த மாதத்தில் இடம் பெறவுள்ள ஜனாதிபதியின் விஜயம் தொடர்பாக கலந்துரையாடுவதற்காக ஈரானிய அதிகாரிகள் விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள நிலையில், கடந்த வியாழக்கிழமையன்று வெளிவிவகார அமைச்சிற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகள் அழைக்கப்பட்டு நண்டகாலமாக நிலுவையிலுள்ள கட்டணத்தை செலுத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

ஈரானிய அதிகாரிகள் இந்த விஜயத்தின் போது நிலுவையிலுள்ள கட்டணத்தைத் திருப்பிச்செலுத்தும் வழிமுறைகள் பற்றியும் இலங்கைத் தரப்பினருடன் விவாதிக்கவுள்ளனர்.

ஈரானிய அரசாங்கத்துடன் கொடுக்கல் வாங்கல்களை மேற் கொள்வதற்கு எதிராக அமெரிக்கா விதித்திருந்த தடைகாரணமாக கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக ஈரானிலிருந்து இறக்குமதி செய்த எண்ணெய்க்கான கொடுப்பனவுகள் நிலுவையிலிருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அடுத்த மாதம் 21ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஈரானுக்கான விஜயத்தை முன்னெடுக்கவுள்ளதாக இலங்கைக்கான ஈரானியத்தூதுவர் மொஹமட் ஸெய்ரி அமரானி அண்மையில் தெரிவித்திருந் தமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

# ஆட்டோ விபத்து சாரதி படுகாயம்

(கிளிநொச்சி )

வீதிக்கு குறுக்கே மாடு பாய்ந்ததில் கட்டுப்பாட்டை இழந்த முச்சக்கரவண்டி வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் முச்சக்கரவண்டி சாரதி ஒருவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று இரவு 7.00 மணியளவில் இரணைமடு கனகாம்பிகை ஆலய வீதியில் இடம்பெற்றுள்ளது இதில் அதேபகுதியினை சேர்ந்த முனுசாமி சுபாஸ்கரன் (வயது (28) என்பவரே படுகாயமடைந்தவராவார்

கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகரித்து வரும் கட்டாக்காலி மாடுகளினாலேயே மேற்படி விபத்து ஏற்பட்டதாக அப்பகுதி பொதுமக்கள் பலர் விசனம் தெரிவித்தனர்.(செ -271)

# யுத்த பாதிப்பால் பெண்களும் கடின வேலையை ஆற்றுகின்றனர்

## உதவி வழங்கும் நிகழ்வில் முதலமைச்சர் கருத்து

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்ட கொடிய யுத்தத்தால் பெண்கள் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்த ஆண்கள் செய்யும் வேலைகளை அவர்களும் வலிந்து செய்ய வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள் என தெரிவித்த வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் உதவிகளை பெறுபவர்கள் தத்தமது குடும்ப வருமானங்களை உயர்த்துவதற்கு ஊக்கமாக முயற்சி செய்ய வேண்டும் எனவும் காரைநகர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் வாழும் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட பெண்தலைமைத்துவ குடும்பங்களில் இறால் பிடிப்பு தொழிலில் அனுபவமுடைய 22 குடும்பங்களுக்கு "கனு" என்ற துடுப்பினால் இயக்கப்படும் மிதவைகள் வள்ளங்கள் கையளிக்கும் நிகழ்வு நேற்றைய தினம் காரைநகர் பிரதேச சபை அலுவலகத்தில் நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே முதலமைச்சா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், முன்னைய காலங்களில் மீன்பிடித்தொழில், றால் கூடு கட்டுதல், நண்டு கூடு கட்டுதல் போன்ற தொழில்கள் ஆண்களினாலேயே மேற்கொள்ளப்பட்டு வந்தது.

நாட்டில் ஏற்பட்ட கொடிய யுத்தம் அடிப்படை நிலைகளிலேயே ஆட்டம் காண செய்தது. அதில் தமது குடும்பதலைவர்கள், பிள்ளைகள், சகோதரர்களை இழந்த பெண்கள் தமது குடும்பத்தை தலைமை தாங்கி வாழ்வாதார தேடல்களை மேற்கொள்வதற்கு வலிந்து ஈடுபட வேண்டி வந்தது.

பெண்கள் பொதுவாகவே மென்மையானவர்கள், காலத்தின் கட்டாயத்தில் தமது பிள்ளைகளை வளர்க்க வேண்டும் என்ற முனைப்பில் தோட்ட வேலை, மீன்பிடி வேலை என மழை வெயில் பனி பாராது எல்லா குடும்பங்களுக்கும் ஈடு கொடுக்க கூடிய தொழில்களை செய்து வருகிறார்கள். அவர்களின் தொழில்களை சற்று இலகுவாக்குவதற்கே இவ்வாறான உதவிகள் வழங்கப்படுகின்றன.

பயனாளிகள் தெரிவில் தவறுகள் ஏற்படக் கூடாது. அதாவது அனைத்து உதவிகளும் எல்லோருக்கும் பயனுடையதாக இருக்க வேண்டும். எல்லாம் எமது குடும்பத்தினருக்கு வர வேண்டும் என்று நினைத்து செயற்படும் எண்ணத்தை பயனாளிகள் தவிர்க்க வேண்டும்.

வழங்கப்படும் உதவிகள் அவரவர் செய்யும் வேலைகளை ஊக்குவிப்பதற்காக தரப்படுகிறது. எனவே பெற்றுக்கொள்ளும் உபகரணங்களை உரியவாறு பாதுகாத்து பயன்படுத்த வேண்டும் தங்கள் தங்கள் குடும்ப வருமானங்களை உயர்த்துவதற்கு முயற்சி செய்ய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த உதவிகள் மகளிர் விவகார அமைச்சு மற்றும் வடமாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரனின் சிபாரிசில் காரைநகர் பிரதேச சபை மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் பயனாளிகள் தெரிவு இடம்பெற்று தெரிவுசெய்யப்பட்ட 22 பயனாளிகளுக்கும். அவர்களுக்கு தேவையான வள்ளங்கள் மற்றும் மிதவைகள் வழங்கப்பட்டது. அதில் மிதவைகள் ஒவ்வொன்றும் தலா ஒரு லட்சத்து 7 ஆயிரத்து 500 ரூபாயும், வள்ளங்கள் ஒவ்வொன்றும் தலா 74 ஆயிரத்து 25 ரூபாய் செலவில் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (செ-9)

# அழுகிய நிலையில் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு கடற்கரையில் ஆண் ஒருவரின் சடலம் அழுகிய நிலையில் கரை ஒதுங்கியுள்ளது.

நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் மீனவர் ஒருவரே சடலத்தை இனங்கண்டு ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு தகவல் தெரிவித்துள்ளார். சடலமானது முழுமையாக அழுகிய நிலையில் காணப்பட்டுவதனால் யார் என்பதனை நேற்று நள்ளிரவுக்குள் இனங்காண முடியவில்லை.

இந்நிலையில் மீட்கப்பட்ட சடலமானது நேற்று இரவு பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (செ-4)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 27 - 03 - 1938

உதிர்வு 08 - 01 - 2016



**அமரர் திரு.சுப்பிரமணியம் கந்தசாமி (J.P., U.M)**

(சட்டத்தரணியும் நொத்தாரிசும் பதில் நீதவான்)

திதி-27.12.2016 அபரபக்க சதுர்த்தசி

ஊர் போற்ற உலகு போற்ற உறவுகள் தலைவணங்க தாலனத் தலைவனாய், கலைமகளும் திருமகளும் வழிநடத்த குறையாத வீரத்துடன் எளிமையாய், வாழ்விற்கு இலக்கணமாய் வாழ்ந்து காட்டிய எம் தந்தையே! ஆண்டொன்று சென்றாலும் ஆறவில்லை எம்மனம் உங்கள் இடம் வெற்றிடமாகவே இருக்க, அதை நிரம்ப முடியாது தாய்மரமற்ற விழுதுகளாய் தவிக்கின்றோம். எம்மை விட்டு பிரிந்தாலும் உங்கள் ஆத்மாவின் ஆசீர்வாதம் எமை வழிநடத்தும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையில் உங்கள் ஆத்மா பரமனின் பாதங்களில் முக்தி பெற பிரார்த்திக்கின்றோம்.

35/10, 5ஆம் ஒழுங்கை, பலாலி வீதி, கந்தர்மடம்.
021 222 7079

இல 1, தேவாலய வீதி, சாவகச்சேரி.
021 227 0054

-குடும்பத்தினர்

(7174)

# சைவ வித்தியா விருத்திச் சங்கம் பதவி வெற்றிடம்

**1.உபவிடுதிக் காப்பாளர் (ஆண், பெண்)**

தகைமை:-

- க.பொ.த சாதாரண தரத்திற்குக் குறையாத கல்வித் தகைமை.
- விடுதியில் தங்கியிருப்பது கட்டாயம், உணவும் தங்குமிட வசதியும் இலவசம்.
- விண்ணப்பதாரர் தேகாரோக்கியம் உடையவராகவும், இல்லப்பிள்ளைகளைப் பரிவோடு கவனிப்பதிலும், சைவாசாரம் பேணுவதிலும், வழிகாட்டுவதிலும் அர்ப்பணிப்போடு ஈடுபடுவராகவும் இருத்தல் வேண்டும்.
- வயதெல்லை:- 25-50
- ஊதியத் திட்டம்:-ரூபா 9240 - 6 X 250 + 15 X 280 - 14, 940/-

**2.கணினி ஆசிரியர்**

தகைமை:-அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து பட்டம்/ பயிற்சி பெற்றதற்கான சான்றிதழ் Micro Soft office, CorelDraw, Photoshop, GIT (உயர்தர மாணவர்களுக்கு) கற்பிக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

வயதெல்லை:-25-50 சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்

**3.தையற் போதனாசிரியர்**

எமது இல்லப் பிள்ளைகளுக்குத் தையல் கற்பிப்பதற்குத் தகுதி வாய்ந்த ஆண், பெண் ஆகிய இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமை:-அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து தையற் பயிற்சி பெற்றதற்கான சான்றிதழ். பூவேலை, பின்னல் ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றிருத்தல் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

வயதெல்லை:- 25-50 சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**4.பாதுகாப்பு அலுவலர் (பகல்-பெண்)**

- க.பொ.த சாதாரண தரத்திற்குக் குறையாத கல்வித் தகைமை.
- வயதெல்லை:-25-50
- ஊதியத் திட்டம்:-ரூபா 8, 720 - 6 X 250 +15 X 280-14, 420/-

மேற்படி பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் 14.01.2017இற்கு முன்னர் **சைவ வித்தியா விருத்திச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**சைவ வித்தியா விருத்திச் சங்கம்**
**கலாசாலை வீதி, திருநெல்வேலி.**

**தி.செல்வமனோகரன்**
**செயலாளர்**

(அ-7018)

# அரசாங்கம் சர்வதேசத்திற்கு வழங்கிய வாக்குறுதி என்ன?

## கம்மன்பில கேள்வி

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் சர்வதேசத்திற்கும் அரசாங்கம் வழங்கிய உறுதிமொழிகள் என்னவென்பதை அறிவிக்க வேண்டுமென மகிந்த சார்பு கூட்டு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில கோரிக்கை விடுத்துள்ளார்.



கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர், இந்த உறுதி மொழிகள் தொடர்பில் நாட்டின் பிரதமரும், வெளிவிவகார அமைச்சரும் அறிந்திருப்பதாகவும் தெரிவித்தார்.

"நாடாளுமன்றில் கடந்த 10ஆம் திகதி உரையாற்றிய எம். ஏ.சுமந்திரன் தேர்தலுக்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டுமென வலியுறுத்தியிருந்தார். அந்த வாக்குறுதிகள் என்னவென நான் அவரிடம் கேள்வி எழுப்பினேன. எனினும் அவர அதனை கூறவில்லை.

அதேவேளை கடந்த 19 ஆம் திகதி வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அரசாங்கம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் சர்வதேசத்திற்கும் வழங்கிய வாக்குறுதிகளை கட்டாயம் நிறைவேற்ற வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளார். எனினும் இவை தொடர்பில் அரசாங்கம் இதுவரை தெளிவுபடுத்தவில்லை. இவர்கள் வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு கூறுகிறார்களே தவிர அந்த வாக்குறுதிகள் என்னவென கூறுகிறார்கள் இல்லை.

அரசாங்கம் வழங்கிய அந்த வாக்குறுதிகள் என்னவென தெரிந்துகொள்வதற்கான உரிமை மக்களுக்கு காணப்படுகின்றது. சர்வதேசம், இந்தியா மற்றும் தமிழ்க் கூட்டமைப்பிற்கு வழங்கிய வாக்குறுதிகள் என்னவென ஜனாதிபதிக்கு தெரியாமல் இருக்க வாய்ப்பிருக்கின்றது. எனினும் புலம்பெயர் தமிழ் பிரிவினைவாதிகளுடன் தொடர்புகளைப் பேணும் பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோருக்கு இந்த வாக்குறுதிகள் என்னவென கட்டாயம் தெரிந்திருக்கும். ஆகவே அதனை புது வருடத்திற்கு முன்னர் வெளிப்படுத்துமாறு பிரதமரிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## அனர்த்தப் பாதிப்புக்களைக் கட்டுப்படுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தேவை

### யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு



இயற்கை அனர்த்தங்களால் ஏற்படும் இழப்புக்கள், சேதங்களைக் கட்டுப்படுத்தக்கூடிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அதிகளவில் மேற்கொள்ளப்பட வேண்டும் என யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற தேசிய பாதுகாப்பு தினத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தினால் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. இலட்சக் கணக்கானோரின் உடமைகள் சேதமாக்கப்பட்டன.

அந்தவகையில் இன்றைய நாளை (நேற்று) தேசிய பாதுகாப்பு தினமாக அரசாங்கம் பிரகடனப்படுத்தி இருக்கிறது. ஆழிப்பேரலையினாலே எமது மாவட்டத்திலும் பலர் பாதிக்கப்பட்டிருந்தனர்.

இன்றைய தினத்தில் (நேற்று) சுனாமியால் நாடு முழுவதும் இறந்த உறவுகளுக்காக அஞ்சலி செலுத்தியுள்ளோம். அவர்களுடைய ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திப்போம். இந்த சுனாமியின் பின்னரே எமது நாட்டில் விழிப்புணர்வு ஏற்பட்டது. அதன் பின்னரே தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையமும் ஸ்தாபிக்கப்பட்டது.

தற்போது அனைத்து மாவட்டங்களிலும் அனர்த்த முகாமைத்துவ பிரிவுகள் இயங்கிக் கொண்டு வருகின்றன. எமது மாவட்டத்தை பொறுத்தவரையில் சுனாமியை விட வெள்ளம், வரட்சி, மின்னல், புயல போன்ற இயற்கை அனர்த்தங்களினாலேயே பொது மக்கள் இழப்பு அதிகமாக ஏற்படுகிறது. இயற்கை அனர்த்தங்களால் ஏற்படும் ஆபத்துகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இயற்கை அனர்த்தங்களால் அநாவசியமான உயிரிழப்புக்கள் ஏற்படுவதையும் உடைமைச் சேதம் ஏற்படுவதை தவிர்ப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். எமது மாவட்டத்தில் உயிர் இழப்புகள், உடைமைகள் அழிவதையும் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

எமது மாவட்டத்தில் சிறிதளவான மழைவீழ்ச்சிக்கு கூட பெரும்பாலானோர் இடம்பெயர வேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுகிறது. பின்னர் நிவாரணத்திற்காக அரசாங்கம் பெருமளவான நிதியினை செலவு செய்ய வேண்டியுள்ளது. எமது மாவட்டத்தில் கடற்றொழிலுக்கு செல்பவர்களின் இழப்பே அதிகமாக உள்ளது. இந்த வருடத்தில் நான்கு மீனவர்கள் இறந்திருக்கிறார்கள்.

இவ்வாறான உயிரிழப்புக்களை தவிர்ப்பதற்கு அவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## துப்பாக்கியை பறித்து பொலிஸார் மீதே சூடு

(கொழும்பு)

கநதான.யடியல பொலிஸ நிலையத்திற்குட்பட்ட பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவுநேர ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் கைத்துப்பாக்கியைப் பறித்து அவர் மீதும், அவருடன் சென்ற இன்னுமொரு பொலிஸ் உத்தியோகத்தர் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ள சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

பொலிஸ் உத்தியோகத்தர்களின் துப்பாக்கியைப் பறித்து பொலிஸார் மீதே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு விட்டு இரு சந்தேகநபர்கள் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

காயமடைந்த இரு பொலிஸ உத்தியோகத்தர்களும் நீர் கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் தகவல்கள் தெரிவித்துள்ளன. (இ-10)

## சீனாவுக்கு எதிராக நாமல் தலைமையில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

அம்பாந்தோட்டையில் சீனாவின் திட்டங்களுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் ஒன்றை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தலைமை தாங்கி நடத்தியுள்ளார்.

கைத்தொழில் வலயம் ஒன்றை அமைப்பதற்கு சீனாவுக்கு 15 ஆயிரம் ஏக்கர் காணிகளை அம்பாந்தோட்டையில் வழங்கும் திட்டத்துக்கு எதிராகவே கடந்த சனிக்கிழமை இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

கடந்த சனிக்கிழமை காலையில் சீனத் திட்டங்களுக்கு எதிராக ஜே.வி.பி. ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியிருந்தது.

இதன்போது, ராஜபக்ஷக்கள் கூட அம்பாந்தோட்டை காணிகளை சீனாவுக்கு வழங்கத் திட்டமிட்டிருந்தனர் என்றும், கடந்த ஜனாதிபதி தேர்தலுக்குள் அவர்களால் அதனைச் செய்ய முடியாது போனதாகவும் ஜே.வி.பியினர் குற்றம் சாட்டியிருந்தனர்.

இதனையடுத்தே நாமல் ராஜபக்ஷ தலைமையில் மற்றொரு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது. மகிந்த ராஜபக்ஷ ஏற்கனவே 15 ஆயிரம் ஏக்கர் காணிகளை சீனாவுக்கு வழங்கும் திட்டத்துக்கு எதிர்ப்பை வெளியிட்டிருந்தார்.

எனினும், முதல் முறையாக சீனாவின் திட்டத்துக்கு எதிராக ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் பகிரங்கமாக போராட்டத்தில் இறங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

## சுனாமி நினைவு தினம்; கடலூர் கடலில் பால் ஊற்றி மீனவர்கள் கண்ணீர் அஞ்சலி



சுனாமி நினைவு தினமான நேற்று கடலூர் கடலில் பால் ஊற்றி மீனவர்கள் அஞ்சலி செலுத்தினர். கடற்கரையோரங்களில் உள்ள பல்வேறு பகுதிகளிலும் மீனவர்கள், பொதுமக்கள் கடலில் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

கடந்த 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி இந்தோனேசியாவில் உள்ள சுமாதரா தீவில் கடலுக்கு அடியில் பூகம்பம் ஏற்பட்டது.

இதனால் சுனாமி எனும் ஆழிப்பேரலை எழுந்து கடற்கரையோர பகுதிகளை சூறையாடியது. இந்தோனேசியா, இலங்கை, இந்தியா உட்பட பல்வேறு நாடுகளில் கடற்கரையோரம் வசித்து வந்த 2 இலட்சத்து 30 ஆயிரம் பேர் பலியானார்கள்.

தமிழகத்திலும் சுனாமியின் கோரப்பசிக்கு பலர் இறந்தனர். கடலூர் மாவட்டத்தில் தேவனாம்பட்டினம், தாழங்குடா, சோனாங்குப்பம், சொத்திக்குப்பம், அக்கரைக்கோரி, எம்.ஜி.ஆர்.திட்டு, பில்லுமேடு உள்ளிட்ட பல்வேறு மீனவ கிராமங்களை சுனாமி காவு வாங்கியது.

தேவனாம்பட்டினத்தில் நடைப்பயிற்சிக்கு வந்தவர்களை கடல் அலை இழுத்து சென்றது. சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை ஏராளமானோர் மண்ணோடு மண்ணாக புதைந்தனர்.

இதேபோல் கடலூர் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் சுனாமியின் கோரத் தாண்டவத்தில் 610 பேர் உயிரிழந்தனர். எங்கும் சோகமயமாக காட்சியளித்த சுனாமி பேரலை தாக்கி 12 ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில் தமிழக கடலோரங்களில் அதன் சோக நினைவுகள் இன்றும் அகலவில்லை.

டிசெம்பர் 26 ஆம் திகதி சுனாமியால் பலியானவர்களுக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

கடலூர் தேவனாம்பட்டினத்தில் அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்று நடந்தது. (இ-10)

# இந்திய அணிக்கு எது தேவையானதோ அதற்காக வீரர்களை உருவாக்குகின்றோம்

## இந்திய ஏ அணி பயிற்சியாளர் டிராவிட்



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும் இந்திய 'ஏ', ஜூனியர் அணிகளின் பயிற்சியாளருமான ராகுல் டிராவிட் இணையத்தளத்துக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது.

இந்திய 'ஏ' அணியின் வார்ப்பில் இருந்து கருண் நாயர், ஜெயந்த் யாதவ் போன்ற இளம் வீரர்கள் இந்திய அணிக்குள் நுழைந்து சிறப்பாக ஆடுவதை பார்க்க மகிழ்ச்சி அளிக்கிறது. தேசிய அணிக்கு வந்த உடனே இவர்கள் வெற்றிகரமாக செயற்படுவதற்கு, தலைவர் விராட் கோலியும், தலைமை பயிற்சியாளர் அனில் கும்ப்ளேவும் உருவாக்கித் தந்த சாதகமான சூழலே காரணம் ஆகும். சௌகரியமான உணர்வுடன் ஆடும் வகையில் தேசிய மட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட சூழலுக்கு இவர்கள் செலுத்தும் காணிக்கையாக இதை கருதுகிறேன். அதன் முடிவுகளை இன்று நாம் பார்த்து வருகிறோம். இளம் வீரர்களை முன்னெடுத்து செல்லும் இந்த பயணத்தில் நானும் பங்கெடுத்து இருப்பது பெருமை அளிக்கிறது.

இங்கிலாந்துக்கு எதிரான கடைசி டெஸ்டில், கருண் நாயர் முதலில் சதம் அடித்து பிறகு அதையே முச்சதமாக மாற்றிய விதம் அற்புதமானது. இந்த ஓட்டக் குவிப்பு அவரது திறமையை மட்டும் பேசவில்லை. அவரது வேட்கையையும், ஆர்வத்தையும் காட்டுகிறது. அது தான் மிகவும் முக்கியமான விடயமாகும். இந்திய கிரிக்கெட் அணியின் தற்போதைய நிலையும், தொடர்ந்து இளம் வீரர்கள் வருவதையும் பார்க்க மகிழ்ச்சியாக உள்ளது. கருண் நாயரிடம் அபாரமான திறமை உள்ளது. இங்கிருந்து அவர் பெரிய நிலைக்கு செல்ல வேண்டும்.

நாங்கள் எப்போதும் தேசிய அணிக்கு எதிர்காலத்தில் என்ன தேவையாக இருக்கும் என்பதை கேட்டறிந்தே செயற்படுகிறோம். அவர்களுக்கு சகலதுறை வீரர்கள் தேவை என்றால், ஜூனியர் மட்டத்தில் சகலதுறை வீரர்களை தயார்படுத்துகிறோம்

# நாட்டுக்காகவே நான் விளையாடுகின்றேன் ஓய்வுபெறும் எண்ணம் எனக்கு இல்லை

## சஹீட் அப்ரிடி அதிரடி




பிரிவு உபசார போட்டியில் விளையாட வாய்ப்பு தரும்படி பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்தை சகல துறை வீரர் 36 வயதான அப்ரிடி வலியுறுத்தி வருவதாக தகவல்கள் வெளியாகின.

இது குறித்து விளக்கம் அளித்துள்ள அப்ரிடி, 'பாகிஸ்தான் அணிக்காக 20 ஆண்டுகள் சர்வதேச கிரிக்கெட்டில் விளையாடி வருகிறேனே தவிர, பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்துக்காக அல்ல. வழியனுப்பும் வகையிலான போட்டிக்காக நான் யாரையும் கேட்கவில்லை.

ரசிகர்களின் அன்பும், ஆதரவுமே எனக்கு கிடைத்த உன்னதமான பரிசாகும். எனது கிரிக்கெட் வாழ்க்கை முடிந்து விட்டதாக நினைக்கவில்லை. கிரிக்கெட் ஆடுவதில் இன்னும் உற்சாகமாகவே இருக்கிறேன். தொடர்ந்து சர்வதேச போட்டியில் ஆடுவேன். எனக்கு வாய்ப்பு அளிப்பது தேர்வு குழுவின் முடிவை பொறுத்தது' என்றார்.

# இலங்கைக்கு எதிரான டெஸ்டில் தென்னாபிரிக்கா சிறப்பாட்டம்



இலங்கைக்கு எதிரான முதல் டெஸ்டின் முதல நாள் முடிவில் தென்னாபிரிக்கா 267 ஓட்டங்கள் பெற்றுள்ளது.

இலங்கை மற்றும் தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான முதல் டெஸ்ட் போட்டி தென்னாபிரிக்காவின் போர்ட் எலிசபத்தில் நேற்று ஆரம்பமாகியது.

இந்த போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இந்நிலையில் முதலில் துடுப்பெடுத்தாடி வரும் தென்னாபிரிக்க அணி 90 ஓவர் நிறைவில் 5 விக்கெட் இழப்புக்கு 267 ஓட்டங்களை பெற்றுள்ளது.

துடுப்பாட்டத்தில் டுமினி 63 ஓட்டமும் குக் 59 ஓட்டமும் பெற்றனர். பந்து வீச்சில் அங்மல் 4 விக்கெட்டினையும் ஹேரத் 2 விக்கெட்டினையும் கைப்பற்றினார். போட்டியின் இரண்டாம் நாள் இன்றாகும். (க)

# மனைவியின் புகைப்படத்தால் சர்ச்சையில் சிக்கினார் ஷமி



இந்திய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் முகமது ஷமி தனது மனைவியுடன் பேஸ்புக்கில் பதிவிட்ட புகைப்படம் ஒன்று சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

நேற்று முன்தினம் முகமது ஷமி தனது மனைவியுடன் எடுத்துக்கொண்ட புகைப்படம் ஒன்றை தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவிட்டார்.

இந்த புகைப்படத்தில் அவரது மனைவி ஸ்லீவ்லெஸ் ஆடை அணிந்திருந்தார். இந்த புகைப்படத்திற்கு சிலர் எதிர்ப்பு தெரிவித்து கருத்து தெரிவிக்க ஆரம்பித்தனர்.

இஸ்லாமிய மதக்கொள்கைபடி மனைவியின் புகைப்படத்தை இது போல பொதுவெளியில் வெளியிடுவது தவறு என்று சில மதவாத இணையவாசிகள் சர்ச்சையை உருவாக்கினர். அதே சமயம் ஏராளமானவர்கள் ஷமி மற்றும் அவரது மனைவிக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

# நமக்குள் ஆயிரம் இருக்கட்டும் மனைவியை வம்பிழுக்காதீர்கள்

## அஸ்வின் ரசிகர்களிடம் வேண்டுகோள்



இந்திய அணியின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளரான அஸ்வின் ரசிகர்களுக்கு சிறப்பு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்திய அணிக்கு பல முறை வெற்றிகளைத் தேடித் தந்தவர் ரவிச்சந்திரன் அஸ்வின்.

2016 ஆம் ஆண்டுக்கான சிறந்த கிரிக்கெட் வீரர் என்ற விருதை அஸ்வின் தட்டிச் செல்கிறார் என்று ஐசிசி அறிவித்தது.

இது குறித்து அவர் கூறுகையில், இந்த விருது தனக்கு கிடைப்பது மகிழ்ச்சி என்றும் இந்த விருதை தனது குடும்பத்தார், இந்திய அணியின் தலைவர் விராட் கோலி மற்றும் சக வீரர்கள் அனைவருக்கும் சமர்ப்பிக்கிறேன் என்று கூறியிருந்தார்.

இதில் ரவிச்சந்திரன் அஸ்வினுக்கு பெரிதும் உதவியாக இருந்த டோனியின் பெயரை குறிப்பிடாதது சர்ச்சையை எழுப்பியது.

இந்நிலையில் அஸ்வின் தனனுடைய டுவிட்டர் பக்கத்தில் ரசிகர்களுக்கு உங்களுடைய வேடிக்கையான டுவிட்டர்களை, தன்னுடைய மனைவிக்கு டாக் செய்ய வேண்டாம் என்றும் அதை விட நல்ல விடயங்கள் எல்லாம் உள்ளது என கண்ணீருடன் டுவிட் செய்துள்ளார்.

# தென்னாபிரிக்காவில் கிறிஸ்மஸ் விழா கொண்டாடிய இலங்கை வீரர்கள்



தென்னாபிரிக்கா சென்றுள்ள இலங்கை வீரர்கள் அங்கு கிறிஸ்மஸ் தினம் கொண்டாடிய புகைப்படத்தை தாங்களுடைய டுவிட்டர் பக்கத்தில் பதிவேற்றம் செய்துள்ளனர்.

இலங்கை அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 டெஸ்ட் போட்டிகள், 5 ஒரு நாள் போட்டிகள், 3 இருபது-20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது.

இவ்விரு அணிகளுக்கிடையேயான முதல் டெஸ்ட் போட்டி நேற்று போர்ட் எலிசபெத்தில் உள்ள எஸ்டி ஜார்ஜ் பார்க் மைதானத்தில் தொடங்கியது.

இந்நிலையில் இலங்கை அணி வீரர்கள் தென்னாபிரிக்காவில் உள்ள போர்ட் எலிசபெத்தில் கிறிஸ்மஸ் தின பார்ட்டியை கொண்டாடியுள்ளனர்.

அது தொடர்பான புகைப்படத்தை உபுல் தரங்க தன்னுடைய டுவிட்டர் பக்கத்தில் பதிவேற்றம் செய்துள்ளார்.

இலங்கை அணியின் தலைவரான மத்யூஸ் அனைவருக்கும் கிறிஸ்மஸ் தின வாழ்த்துக்கள் தெரிவித்துள்ளார்.





2005ஆம் ஆண்டு நத்தார் தினத்தின் அதிகாலைப் பிரார்த்தனையின் போது மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தினுள் வைத்து சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் 11ஆம் ஆண்டு நினைவு வணக்க நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் இடம்பெற்றது. இந்நினைவு நிகழ்வில் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உட்பட பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியிருந்தனர்.(படங்கள்: உ. சாளின். பொ.சோபிகா)



நத்தார் தினத்தை முன்னிட்டு உரும்பிராய் புனித மிக்கல் ஆலயத்தில் இளைஞர்களால் அமைக்கப்பட்ட நத்தார் மரமொன்று கலைநயத்துடன் இருப்பதுடன் மக்கள் மத்தியில் அவர்களுக்கு பாராட்டுக்களையும் பெற்றுத் தந்துள்ளது. பலகைச் சட்டங்களில் அமைக்கப்பட்ட இந் நத்தார் மரம் இரவு வேளையில் வண்ணமயமாக மின்னுவது கண்கொள்ளாக் காட்சியாகும்.


## தேவை

லான்சர் 90 ஜப்பான் மோட்டார்சைக்கிள் ஒன்று தேவை.

தொடர்புகளுக்கு: 077 618 3885

(7155)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### திரு.சிவசரவணபவன் சுந்தரேஸ்வரன்

ஹற்றன் நெஷனல் வங்கி யாழ். மெற்றோ கிளையில் முகாமையாளராக கடமையாற்றி 27.12.2016 இன்றிலிருந்து வடபிராந்திய முகாமையாளராக பதவி உயர்வு பெற்றமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு இன்னும் பல உயர்வுகளைப் பெற இறை ஆசி வேண்டி நிற்கின்றோம்.



147, 149 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்
உரிமையாளரும் ஊழியர்களும்
கஜமுகன் ஹாட்வெயார்.

(7171)

தொண்டர் நாள்தொறும் துதிசெயவருள்செய் கேதீச்சரமதுதானே

திருக்கேதீச்சர ஆலயத்திருப்பணிச் சபை!

## நிர்வாக அலுவலர் தேவை

திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபைக்கு கொழும்பில் இருந்து பணியாற்றக்கூடிய சேவை மனப்பான்மையுள்ள,நிதி நிர்வாகத்தில் அனுபவமுடைய ஒரு நிர்வாக அலுவர் தேவை. விண்ணப்பதாரர் கடமையுணர்வுடன் பணிபுரியக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும். தேவையேற்படின் திருக்கேதீச்சர ஆலயத்திலும் தங்கியிருந்து சேவையாற்ற தயாராகவிருக்கவேண்டும். சுயவிபரக்கோவையுடன் விண்ணப்பிக்கவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

விண்ணப்பங்களை 02/01/2017ம் திகதிக்கு முன் பின்வரும் முகவரிக்கு/மின்னஞ்சலுக்கு/தொலைநகலுக்கு அனுப்பவும்.

தலைவர்
அறங்காவலர் சபை
திருக்கேதீச்சர ஆலயத்திருப்பணிச் சபை
சரஸ்வதி மண்டபம், இல 75, லோரன்ஸ் வீதி, கொழும்பு 4.

மின்னஞ்சல்:<careerscmb3@gmail.com>
தொலைநகல்: 011 2371111

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### திரு.நடராஜா நாகராஜா

(ஓய்வு நிலை கிராம அதிகாரியும் சமாதான நீதிபதியும்)



அவர்கள் 23.12.2016 வெள்ளிக்கிழமையன்று "கலாபூஷணம்" விருது பெற்றதையிட்டு அகமகிழ்ந்து மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
திரு.க.கை.விக்னேஸ்வரன் குடும்பம்
(ஓய்வு நிலை வங்கி அதிகாரியும் சமூகத் திலகமும்)
நீராவியடி, யாழ்ப்பாணம்.

(7182)


# இராசி பலன்

27.12.2016

(மார்கழி 12, செவ்வாய்க்கிழமை)

சூரிய உதயம் காலை 6.20 மணிக்கு
திரியோதசி முற்பகல் 9.40 மணிவரை
அனுசம் காலை 7.52 மணிவரை
சுபநேரம் 10.57-12.27 மணிவரை
இராகுகாலம் 3.27-4.57 மணிவரை

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது செவ் | கிரகநிலை | | |
| சுக் | சந்திராஷ்டமம் கார்த்திகை | | ராகு |
| | சனி சூ புத | | குரு |

வளவன்

**மீனம்:** திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பூர்வீக சொத்துக்கள் நன்மை உண்டு, புதிய திட்டங்கள் எளிதில் கைகூடும்.

**மேடம்:** கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், மற்றவர்களுக்காக பொறுப்புச் சொல்வதைத் தவிர்ப்பது நல்லது, விரயங்கள் கூடும் நாள்.

**இடபம்:** பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், வழிபாட்டால் முன்னேற்றம் காண வேண்டிய நாள், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள்.

**மிதுனம்:** உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கடனில் ஒரு பகுதியைக் கொடுத்து தீர்க்கும் வாய்ப்புண்டு.

**கும்பம்:** அன்பு நண்பர்கள் ஆதரவு தர முன்வருவர், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**கடகம்:** நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும் நாள், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், பூர்வீக சொத்துக்களால் நன்மை உண்டு.

**மகரம்:** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**சிம்மம்:** பெண்கள் வழியில் பெருமைப்படும் வகையில் உதவிகள் கிடைக்கலாம், வியாபார விருத்தி உண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**தனுசு:** உறவினர்களின் நலன்கருதி செலவுகள் ஏற்படலாம், தொழில் வளர்ச்சி கருதி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள்.

**விருச்சிகம்:** உறவினர் பகை அகலும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள்.

**துலாம்:** புத்தி சாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், ரோக பயமுண்டு, பொது வாழ்வில் புகழ் கூடும் நாள்.

**கன்னி:** உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும், மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம், எப்படி நடக்குமோ என நினைத்த காரியம் நல்ல விதமாக நடைபெறலாம்.

# சுனாமியால் காவுகொள்ளப்பட்டோரின் கல்லறைகளை கட்டியணைத்து கதறியழுது உறவுகள் அஞ்சலி!














(யாழ்ப்பாணம்)

சுனாமி பேரலை அழிவின் பன்னிரெண்டாம் ஆண்டு நினைவு தினம் நேற்றைய தினம் உடுப்பிட்டியில் அமைக்கப்பட்டுள்ள சுனாமி நினைவாலயத்தில் இடம்பெற்றது. ஆயிரக்கணக்கானோர் வருகை தந்து தமது உறவுகள் நினைவாக சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.

கல்லறைகள் மேல் மலர் தூவி மாலைகள் அணிவித்தும் வணக்கம் செலுத்தினர். கல்லறைகளை கட்டி அணைத்து உறவுகள் புரண்டு அழுதமை அனைவரையும் துயரத்தில் ஆழ்த்தியது.

இந்நிகழ்வில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சி தலைவர் சி.தவராசா, உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், கே.சயந்தன், இ.ஆனோல்ட், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

(படங்கள்: உதயன்)


## ஆழிப்பேரலையில் உயிரிழந்த மக்களுக்கு மலையகத்தில் நேற்று அஞ்சலி




ஆழிப்பேரலையினால் உயிரிழந்த மக்களுக்கு மலையகத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது. கடந்த 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட ஆழிப்பேரலையில் உயிரிழந்த மக்களுக்கு நேற்றுக் காலை அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

இந்த அஞ்சலி நிகழ்வு ஹற்றன் பொலிஸார், நகர வர்த்தகர்களின் ஏற்பாட்டில் ஹற்றன் புத்தர் சிலைக்கு முன்னால் இடம்பெற்றுள்ளது.

அஞ்சலி செலுத்தும் நிகழ்வில் ஹற்றன் நகரில் உள்ள வங்கி ஊழியர்கள், நகர வர்த்தகர்கள், சாரதிகள் சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள், பொது மக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (இ-10)






சுனாமி ஆழிப்பேரலை ஏற்பட்டு பன்னிரெண்டாம் ஆண்டு நினைவு நிகழ்வு நேற்று இடம்பெற்றது. புலோலி சூசையப்பர் தேவாலயத்தில் காலை 6.30 மணிக்கு யாவீஸ் அடிகளார் தலைமையில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டதுடன் உயிரிழந்தோரின் உறவுகள் அஞ்சலி செலுத்தினர். இங்கு வடமாகாண சபை உறுப்பினர்களான வி.சிவயோகன், கே.தர்மலிங்கம் ஆகியோரும் அஞ்சலி செலுத்தினர். இதேவேளை காலை 7 மணியளவில் மணற்காடு தேவாலயத்தில் ஜேம்ஸ்நாதன் தலைமையில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. பின்னர் அங்கு அமைக்கப்பட்டிருந்த சுனாமி நினைவாலயத்தில் பங்குத்தந்தையால் பொதுச் சுடர் ஏற்றி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கிருந்த சுடர்களை உறவினர்கள் ஏற்றி வைத்து சுனாமி நினைவாலயத்தில் மலர்கள் தூவி அஞ்சலி செலுத்தினர். 72 உடல்கள் ஒன்றாக அடக்கம் செய்யப்பட்ட இடமான சவக்காலப்பிட்டியில் உறவுகள் தனது உறவுகள் விரும்பி உண்ணும் உணவுகளைப் படைத்தனர். உணவைப் படைத்துவிட்டு உறவுகளை நினைத்து கண்ணீர்விட்டு கதறியழுத்தனர். (படங்கள்: மகாலிங்கம்)

# மயிலிட்டியை விடக்கூடாது

## முன்னாள் படை அதிகாரிகள் ஜனாதிபதியிடம் வலியுறுத்து



(கொழும்பு)

**எந்தவொரு சூழ்நிலையிலும் வலி.வடக்கில் உள்ள மயிலிட்டிப் பகுதியை இராணுவத்தினர் விட்டுக் கொடுக்கவோ, அங்கு மீள்குடியேற்றம் செய்யவோ அனுமதிக்கக் கூடாது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் தேசிய போர் வீரர்கள் முன்னணி என்ற முன்னாள் படை அதிகாரிகளின் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.**

கடந்த புதன்கிழமை இந்த அமைப்பைச் சேர்ந்த முன்னாள் படை அதிகாரிகள் குழுவொன்று, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்து இரண்டு மணிநேரம் கலந்துரையாடியது.

இலங்கை கடற்படையின் முன்னாள் தலைமை அதிகாரியும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான றியர் அட்மிரல் சரத் வீரசேகர தலைமையிலான முன்னாள் படை அதிகாரிகள் குழுவே ஜனாதிபதியைச் சந்தித்தது.

இந்தக் குழுவில் மேஜர் ஜெனரல் குமார் ஹேரத், கேணல் ரித்திகஹபொல, மேஜர் அர்ஜுன டி சில்வா உள்ளிட்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பின் போது, புதிய அரசியலமைப்பினால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதற்கு இடமளிக்கக் கூடாது என்றும் தேசிய பாதுகாப்பு விடயங்களில் விட்டுக்கொடுப்பின்றிச் செயற்படுமாறும் ஜனாதிபதியிடம் தேசிய போர் வீரர்கள் முன்னணி வலியுறுத்தியுள்ளது.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக தகவல் வெளியிட்டுள்ள றியர் அட்மிரல் சரத் வீரசேகர,

தீவிரவாதிகளுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு அளித்துள்ள நிலையில், மிருசுவிலில் 2000ஆம் ஆண்டு 8 பொதுமக்களைப் படுகொலை செய்தார் என்ற குற்றச்சாட்டில் மரண தண்டனை விதிக்கப்பட்ட இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த ஸ்ராவ் சார்ஜன்ட் சுனில் ரத்நாயக்கவுக்கும் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பு அளிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளோம்.

ஜெனிவாவின் வழி நடத்தலில், காணாமற்போனோர் செயலகத்தை உருவாக்குவது ஆபத்தானது. இதற்கான செயல்முறைகளை தடுத்து நிறுத்தி, இலங்கைக்கு எதிரான நிகழ்ச்சி நிரலை முறியடிக்க வேண்டும் என்றும் கோரியுள்ளோம்.

விடுதலைப் புலிகளின் போராளிகளை நினைவுகூர அனுமதிக்கப்பட்டுள்ள அதேவேளை, போர் வெற்றி நாள் அணிவகுப்பை நிறுத்தியுள்ளது குறித்தும் முறைப்பாடு செய்தோம். தீவிரவாதிகளை நினைவுகூர எந்த நாடும் அனுமதிப்பதில்லை என்றும், வெற்றியை நினைவுகூரும் உரிமை இராணுவத்துக்கு உள்ளது என்றும் ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளோம்.

புலம்பெயர் தமிழர்களுக்கும் புலிகளின் செயற்பாட்டாளர்களுக்கும் இரட்டைக் குடியுரிமை வழங்குவது இலங்கைக்கு மிக மோசமான ஆபத்தை ஏற்படுத்தும். இவர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்கும் போது, கடுமையான கண்காணிப்பை மேற்கொள்ள வேண்டும். இவர்களால் மேற்கொள்ளப்படும் முதலீடுகள் ஆபத்தை ஏற்படுத்தும் என்றும் எடுத்துக் கூறியுள்ளோம்.

புலம்பெயர் தமிழ் அமைப்புகளுக்கு எதிராக விதிக்கப்பட்டிருந்த தடைகள் நீக்கப்பட்டிருப்பதற்கும் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளோம்.

மயிலிட்டியில் இருந்து இலங்கை இராணுவத்தை வெளியேற்றுவதற்கு தமிழ் அரசியல்வாதிகள் அழுத்தம் கொடுத்து வருகின்றனர். ஆயுதக் கிடங்குகள் உள்ளிட்ட மிக முக்கியமான இராணுவ நிலைகள் மயிலிட்டியில் அமைந்துள்ளன. இங்கு மீள்குடியேற்றம் மேற்கொள்வதற்கு, இராணுவத்தை அகற்றுமாறு கூட்டமைப்பினர் அழுத்தம் கொடுப்பதுடன், இடம்பெயர்ந்த மக்களை வேறு இடங்களில் குடியமர்த்துவதற்கும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

எந்தச் சூழ்நிலையிலும் மயிலிட்டியை விட்டுக் கொடுக்கக் கூடாது. இலங்கை இராணுவம் அங்கு நிலை கொண்டிருக்க வேண்டும். மயிலிட்டியை விட்டு வெளியேற்றப்பட்டால் இராணுவத்தினரின் மனநிலை பாதிக்கப்படும் என்றும் ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளோம்.

வடக்கில் இருந்து திட்டமிட்ட அடிப்படையில், எல்லா சிங்கள பொதுச் சேவை அதிகாரிகளும் இடமாற்றம் செய்யப்பட்டு தமிழ் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். இது தேசிய பாதுகாப்புக்கு மிகவும் அச்சுறுத்தலானது என்பதையும் எடுத்துக் கூறியுள்ளோம்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளோம். வடக்கு, கிழக்கிற்கு வெளியிலேயே 50 விதமான தமிழர்கள் வாழ்கின்ற நிலையில், அதிகாரப் பகிர்வினால் அவர்களுக்கு எந்த நன்மையும் கிடைக்காது என்றும் ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார். (இ-10)

## அரிசி, தேங்காய், மீன் விலைகள் எகிறின

## பண்டிகைக் காலத்தில் மக்கள் அதிர்ச்சி!

மீன், தேங்காய் மற்றும் அரிசி போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் திடீரென அதிகரித்துள்ளன. பண்டிகைக் காலத்தில் மீனவர்கள் படகுக்கு மீன்பிடிக்கச் செல்லாத காரணத்தினால், மீன் விலை உயர்ந்துள்ளதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர். பெரிய வகை மீன்கள் கிலோ ஒன்று 1100 முதல் 1200 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுவதாகவும் இதனால் நுகர்வோர் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, தேங்காயின் விலையும் உயர்வடைந்துள்ளது. தேங்காயின் விலை 60 மற்றும் 65 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. அரிசியின் விலையும் அண்மைக் காலமாக தொடர்ச்சியாக உயர்வடைந்து செல்கின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

SILVER SHIELD SOCKS

கடந்த 30 வருடங்களாக மக்களின் நன்மதிப்பைப் பெற்ற ஒரே ஒரு தயாரிப்பு

SILVER SHIELD SOCKS காலுறைகள்

☆ தரமானவை, நீடித்த பாவனை, மலிவு விலை
☆ பாடசாலை மாணவர்களுக்கும் அலுவலக உத்தியோகத்தர்களுக்கும் மாபெரும் விலைக்கழிவு.
☆ மொத்தமாக கொள்வனவு செய்யும் பாடசாலைகளுக்கு மேலும் விசேட கழிவு வழங்கப்படும். விரையுங்கள்.

ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 222 5392

கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா.:28 செவ் 8 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L மலேசியா
தொ.இ: B/6676

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 28
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: B.COM, HNDA/ அரசதொழில
தொ.இ: B/6677

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 15
உயரம்: 5'
தகைமை/தொழில்: MBBS/வைத்தியர்
தொ.இ: B/6679

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: கேட்டை
சூரிசெவ் 4 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L/சாரதி
தொ.இ: B/6681

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: ரோகிணி
கி.பா: 35 செவ் 1 இல
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/3203

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: 29
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில
தொ.இ: G/3232

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 44
உயரம்: 5'
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/3233

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 40
உயரம்: 5'
தகைமை/தொழில்: DIPLOMA/ ஆசிரியர்
தொ.இ: G/3235

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை

# சுனாமி நினைவேந்தல்கள்

## பூந்தோட்டம்





வவுனியா, பூந்தோட்டம் ஆலய பரிபாலன சபையால் சுனாமி நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத் தூபியில் நேற்று அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

பூந்தோட்டம் நரசிங்கர் ஆலய பரிபாலன சபையின் ஏற்பாட்டில் முன்னதாக சுனாமி அனர்த்தத்தில் மரணித்த மக்களுக்கான ஆத்மசாந்திப் பிரார்த்தனை நரசிங்கர் ஆலயத்தில் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து பூந்தோட்டம் சுனாமி நினைவுத் தூபியில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், கே.கே.மஸதான், வடக்குமாகாண சபை உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், செ.மயூரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம், வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வியமுனி சோமரட்ண, பிரதேச செயலாளர் கா.உதயராசா, நகரசபைச செயலாளர் தயாபரன், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள், மதகுருமார் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, இத்தூபியே சுனாமி தொடர்பில் இலங்கையில் அமைக்கப்பட்ட முதலாவது நினைவுத்தூபியும் ஆகும்.(2-250)

# முல்லைத்தீவு நகரில் நிர்மாணிக்கப்பட்டு வந்த மகாத்மா காந்தி சிலை விஷமிகளால் உடைப்பு



(குருமன்காடு)

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி சிவமோகனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் முல்லை. மாவட்டத்தில் அமைக்கப்பட்டு வந்த சிலைகளில் ஒன்றான முல்லை. நகரின் மத்தியில் உள்ள மகாத்மாகாந்தி சிலை நேற்று முன்தினம் இரவு விஷமிகளால் உடைக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம்முதல் இந்த சிலை நிர்மாணிக்கும் பணிகள் இடம்பெற்றுவந்த நிலையில் கடந்த முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் இந்த சிலை அமைப்பது தொடர்பில் பல்வேறு விவாதங்கள் இடம்பெற்ற நிலையில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சிலை உடைப்பு தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சிவமோகனினால் முறையிடப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விதிசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

முல்லை. நகரில் இந்த சிலை அமைக்க வேண்டாம் என சமூகவலைத்தளங்களில் பல்வேறு விவாதங்களும் முன்வைப்பட்டு வந்தமையும குறிப்பிடத்தக்கது. (2-281)




# சுனாமி நினைவேந்தல்கள்

## மன்னார்



மன்னாரில் ஆழிப்பேரலையினால் உயிர் நீத்த உறவுகளின் 12 ஆவது ஆண்டு நினைவு தினத்தையொட்டி நேற்று திங்கட்கிழமை அதிகாலை முதல் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய அலுவலகத்தில் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

மன்னார் மாவட்ட கலை, இலக்கிய பண்பாட்டு கழகத்தின் ஏற்பாட்டில் அதன் இயக்குநர் ஏ.ரி.மோகன்ராஜ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வின் போது உயிர் நீத்த உறவுகளுக்காக ஒளி ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் நினைவுப் பேருரைகளும் இடம்பெற்றன.

குறித்த நிகழ்வில் இந்து மத குரு சிவசிறி மஹா தர்ம குமார குருக்கள், மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் வி.எஸ்.சிவகரன், ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆர்.குமரேஸ், மன்னார் சமாதான அமைப்பின் தலைவர் பி.ஏ.அந்தோனிமார்க் மற்றும் மன்னார் நகர சபையின் முன்னாள் உப தவிசாளர் ஜேம்ஸ் ஜேசுதாஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர். (2-9-15)

## வவுனியா



( குருமன்காடு )

வவுனியா அந்தனர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வவுனியா குருமன்காடு பிள்ளையார் ஆலயத்தில்நேற்று சுனாமி நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது. இந்நிகழ்வின் போது சுனாமி பேரலையல் சிக்குண்டு உயிர நீத்தவாகளுக்கான மோட்ச அர்ச்சனை செய்யப்பட்டது.

இந் நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் செ.மயூரன், வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் ரோகன புஸ்பகுமார, மேலதிக அரசாங்க அதிபர் திரேஸ்குமார், கலாசார உத்தியோகத்தர் நித்தியானந்த, தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார், செயலாளர் மாணிக்கம் ஜெகன், அந்தனர் ஒன்றிய தலைவர், செயலாளர் மற்றும் பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

# ஆழிப்பேரலை நினைவுத் தூபி திறப்பு





ஒட்டுசுட்டான் புதுக்குடியிருப்பு வீதியின் சுனாமி நினைவாலயம் அமைந்திருந்த இடத்தில் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் காவுகொள்ளப்பட்ட மக்களின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத்தூபியும் நினைவு மண்டபமும் திறந்து வைக்கப்பட்டு காவுகொள்ளப்பட்ட மக்களுக்கான அஞ்சலி நிகழ்வும் நேற்றுக் காலை 8.45 மணிக்கு இடம்பெற்றது.

2004 ஆம் ஆண்டு இடம பெற்ற ஆழிப்பேரலை அனர்த்தத்தில் உயிரிழந்த முல்லைத்தீவு மாவட்ட உறவுகளில் ஒரு தொகுதியினர் புதைக்கப்பட்ட ஒட்டுசுட்டான் புதுக்குடியிருப்பு வீதியின் அமைக்கப்பட்டிருந்த நினைவாலயம் இறுதி யுத்தத்தில் மாவீரர் துயிலுமில்லங்கள் அழிக்கப்பட்டதை போன்று அழிக்கப்பட்டது.

இதன் பின்னர் அந்த இடத்தில் நினைவுத் தூபியும் நினைவு மண்டபமும் அமைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவமோகன்,வடக்கு மாகாண சபை உறுப்பினர் புவனேஸ்வரன், புதுக்குடியிருப்பு கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர்கள், மாவட்ட பிரதம கணக்காளர், உறவுகள், நலன்விரும்பிகளென பலரும் கலந்து கொண்டனர். (2-281)

## முல்லைத்தீவு





(பனிக்கன்குளம்)

2004 ஆம் ஆண்டு இதே நாளில் ஆழிப்பேரலையில் சிக்கி உயிரிழந்தவர்களை நினைவுகூரும் நிகழ்வுகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் அனுஷ்டிக்கப்பட்டன.

அந்த வகையில் முல்லைத்தீவு கடற்கரை வீதியில் அமைந்துள்ள சுனாமிநினைவாலயத்தில் உயிரிழந்தவர்களின் உறவுகள் பல்லாயிரக் கணக்கில் ஒன்றுகூடி அஞ்சலி செலுத்தி சர்வமத ஆத்மசாந்தி பிரார்த்தனைகளில் ஈடுபட்டனர்.

கடல்கோள் ஏற்பட்டு நேற்றுடன் 12 வருடங்கள் பூர்த்தியானாலும் அதன் நினைவலைகள் இன்றும் அந்த உறவுகளை விட்டு அகன்றதாக தெரியவில்லை.

இதேவேளை, முல்லைத்தீவு கடற்கரையை அண்டிய பிரதேசத்தில் அதிகளவான மக்கள் சுனாமியால் காவுகொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-15-281)

# தொழிற்பயிற்சி நெறிகள் ஜனவரியில் ஆரம்பம்

(முல்லைத்தீவு)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையானது முல்லைத்தீவு மாவட்டத்தில் (NVQ) மட்டத்திலான முழுநேர மற்றும் பகுதிநேர தொழிற்பயிற்சி கற்கை நெறிகளை நடத்தி வருகின்றது.

அந்த வகையில் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுவதோடு இவற்றுக்கான பதிவுகள் தற்போதுநடைபெற்று வருகின்றன.

இக்கற்கை நெறிகளாவன தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர்,இரு சக்கர மற்றும் முச்சக்கர வண்டி திருத்துநர், வீட்டுமின்னிணைப்பாளர், தையல்,வெதுப்புநர், அழகுக்கலையும்சிகையலங்காரமும், அலுமினியம் பொருத்துநர், கணனி வன்பொருள் திருத்துநர், நீர்க்குழாய் பொருத்துநர், மோட்டார் வாகனம் திருத்துநர் ஆகும்.

இக் கற்கை நெறிகள் முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான், பாலிநகர், புதுக்குடியிருப்பு ஆகிய தொழிற்பயிற்சி நிலையங்களில் நடைபெறுகின்றன.

இக் கற்கை நெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழுக்கான பயிற்சிகளாகும்.

இக் கற்கை நெறிகளைக் கற்க விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம், நீதிமன்ற வீதி, மாங்குளம் பிரதான வீதி, முல்லைத்தீவு அல்லது பாலிநகர் தொழிற்பயிற்சி நிலையம், மாந்தை கிழக்கு, முல்லைத்தீவு அல்லது ஒட்டுசுட்டான் தொழிற்பயிற்சி நிலையம்,14 ஆம் கட்டை, மாங்குளம் வீதி, முல்லைத்தீவு என்னும் முகவரிகளில் பதிவுசெய்ய முடியும். பயிற்சி நெறிகள் யாவும் ஜனவரி மாதம் ஆரம்பமாகவுள்ளன. அனைத்து பயிற்சி நெறிகளுக்குமான கட்டணம் இலவசமாகும்.

தொடர்புகளுக்கு 071031 8989(முல்லைத்தீவு), 071 0318991(ஒட்டுசுட்டான்), 071 0318990 பாலிநகர்). (2)

# புதுக்காட்டில் அனுமதிப்பத்திரமின்றி கடத்தப்பட்ட அரச முத்திரை பதித்த மதுபானங்கள் கைப்பற்று

## சம்பவ இடத்தில் சந்தேகத்தின் பேரில் மூவர் கைது



கிளிநொச்சி, முல்லைத் தீவு ஆகிய மாவட்டங்களுக் கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கீழ் உள்ள விசேட முறியடிப்பு பொலிஸ் படைப் பிரிவினால் பளைப் பொலிஸ் நிலையப்பிரிவில் உள்ள புதுக்காடு பகுதியில் உள்ள மருதங்கேணி வீதியில் வைத்து அதி சொகுசு வாகனத்தில் அனுமதிப்பத்திரம் இன்றி கடத்தப்பட்ட அரச முத்திரை பதித்த மதுபானங்கள கைப்பற்றப்பட்டுள்ளதுடன சம்பவ இடத்தில் வைத்து சந்தேக நபர்கள் மூவரைக் கைது செய்துள்ளதாக கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் காரியாலயத்தகவலில் தெரிவிக்கப் பட்டுள்ளது.


இச்சம்பவம் நேற்று திங் கட்கிழமை அதிகாலை 2 மணியளவில் இடம் பெற் றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது,

கிளிநொச்சி, முல்லைத் தீவு ஆகிய மாவட்டங்களுக் கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்னவின் விசேட உத்தரவுக்கு அமைய செயற்பட்டு வருகின்ற விசேட முறியடிப்பு பொலிஸ் படைப்பிரிவின் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் கருணாரட்னம் ஜெசிந்தன் தலைமையிலான, பொலிஸ் கொஸ்தாபல்களான சேனாரத்னா (9968), நந்தன (60192), குலதீபன் (8640), ஜதீசாந் (37477), ஆகியோரடங்கிய பொலிஸ் அணியினரின் திடீர் முற்றுகையின் போதே அனுமதிப் பத்திரம் இன்றி கடத்தப்பட்ட 750 மீல்லி லீற்றர் சாராயம் 75 போத்தல்கள் மற்றும் 180 மில்லி லீற்றர் சாராயம் 348போத்தல்கள் ஆகிய அரசாங்க முத்திரை பதித்த மதுபானங்கள் கைப்பற்றப் பட்டுள்ளன.

இச்சம்பவத்தில் கைப் பற்றப்பட்டுள்ள தடயப்பொருட்களும், கைதானசந்தேக நபர்களும் மேலதிக விசாரணைகளுக்காக பளைப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் காரியாலயத் தகவலில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (2-15)

# மழை வேண்டி பிரார்த்தனையும் கொடும்பாவி கட்டி இழுத்து எரிப்பும்



(மல்லாவி)

துணுக்காய், பாண்டியன் குளம் ஆகிய கமநல சேவை நிலையங்களின் கீழ் 2016-2017 ஆம் ஆண்டுக்கான காலபோக நெற்செய்கையை மேற்கொண்டுள்ள, விவசாயிகளின் 12,198.5 ஏக்கர் நெற்செய்கை இவ்வருடம் மழைவீழ்ச்சியின்மை, குளங்களில நீர வற்றிப் போனமை ஆகிய காரணங்களினால் அழிவடையும் இறுதி நிலையை எட்டியுள்ளதால் பாதிக்கப் பட்ட விவசாயிகள் மழையை வேண்டிஆலயங்களில் விசேட பிரார்த்தனை வழிபாடுகளில் ஈடுபட்டு வருவதுடன் கொடும்பாவி கட்டி இழுத்து எரிதது வருகின்றனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

துணுக்காய், பாண்டியன் குளம் ஆகிய கமநல சேவை நிலையங்களின் கீழ் உள்ள சிறிய குளக் காணிகளிலும், மற்றும் வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்திற் குட்பட்ட குளக் காணிகளிலும் காலபோக நெற்செய்கையை மேற்கொண்டுள்ள விவசாயிகளின் நெற் செய்கையே அழிவடையும் இறுதி நிலையை எட்டியுள்ளதால் நுண்நிதி கடன் நிறுவனங்கள் மற்றும் வங்கிகள் உட்பட தனிப்பட்டவர்களிடம் வட்டிக்கு பணம் பெற்று நெல் பயிரிட்டுள்ள விவசாயிகள் அதனை மீளச் செலுத்த வழிதெரியாது நிர்க்கதி நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளார்கள்.

இந் நிலையில், துணுக் காய் கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள குளக் காணிகளில் -895, ஏக்கரிலும், மானாவாரியாக -247 ஏக்கரிலும் மற்றும் வவுனிக்குளம் வலது கரை வாய்க்காலின் கீழ்-2018, ஏக்கரிலும் வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்திற் குட்பட்ட நடுத்தர குளங்களில் -3562,ஏக்கரிலுமாக மொத்தம் -6736 ஏக்கரிலும் 'நெல் பயிரிட்டுள்ளன.

இதேபோல், பாண்டியன் குளம் கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள குளக் காணிகளில் 1827, ஏக்கரிலும், மானாவாரியாக -259. 25, ஏக்கரிலும் வவுனிக் குளம் இடதுகரை வாய்க் கால் உட்பட நடுத்தர குளக் காணிகளில் -3389.5 ஏக்கரிலுமாக மொத்தம் -5476.5 ஏக்கரில் நெல் பயிரிட் டுள்ளது.

ஒட்டு மொத்தமாக -12,198.5 ஏக்கரில் மேற் கொண்ட நெற்செய்கை அழிவடையயும் இறுதி நிலையில் உள்ளது.

அரசாங்கத்தின் புள்ளிவிபரத் திணைக்களத்தின் தகவலில்முல்லைத்தீவு மாவட்டம் வறுமை நிலையில் முதலிடத்தில் உள்ளதாகவும் மாவட்ட ரீதியாக துணுக் காய், பாண்டியன் குளம் ஆகிய பிரதேசங்களில் அதிகளவான மக்கள் வறுமையில் வாழ்வதாகவும் கூறப்பட்டுள் ளது.

இந்த நிலையில் இயற்கை மழையும் ஏமாற்றி விட்டதால் வழிபாடுகளில் ஈடுபட்டு வருவதுடன், கொடும் பாவியை ஊர் முழுவதும் இழுத்து அதனை எரித்து வருகின்றனர். (2-15)

# வ(ளி)ழி தேடும் புல்லாங்குழல் நூல் வெளியீடு நாளை மறுதினம்

செ.கஜானனின் "வ(ளி)ழி தேடும் புல்லாங்குழல்" கவிதை நூல்வெளியீடு நாளை மறு தினம் வியாழக்கிழமை பிற் பகல் 3.30 மணிக்கு பளை பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வவுனியா தமிழ்ச் சங்கத் தின் அமைப்பாளர், தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் முதன்மை விருந் தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரனும் சிறப்பு விருந் தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனும் கௌரவ விருந்தினர்களாக பளை அறத்தி அம்பாள் திருக்கோவில் ஆதீன கர்த்தர் சிவஸ்ரீ.நா.பிரபாகரக்குருக்கள், புலோப்பளை தூய இராயப்பர்ஆலயப்பங்குத் தந்தை அருட்திரு அ.சில்வஸ்ரர்தாஸ், வடக்கு மாகாண சபை உறுப்பினர் ப.அரியரத் தினம், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் திருமதி. அ.ஜெயராணி, கிளிநொச்சி மாவட்டச் செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன், பளை பிரதேச வைத்திய அதிகாரி சி. சிவரூபன், கிளிநொச்சி வலயக் கல்வித் திணைக்கள உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி.பி.மதுரநாயகம், கிளிநொச்சி தமிழ்ச்சங்கத் தின் தலைவர் வே.இறைபிள்ளை, கவிஞர் சுப.சிந்துதாசன், பளை பொலிஸ் அதி காரி எஸ்.உபாலிமினிப்புர ஆகியோர் கலந்துகொள்வர்.

நிகழ்வொழுங்கில் விருந் தினர் வரவேற்பு, மங்கல விளக்கேற்றல், அகவணக் கம், செல்விகள். ப.மதுசா, இ.விதுசா ஆகியோரின் வரவேற்பு நடனம், வரவேற்புரை, ஆசியுரை, தலைமையுரை, நூல் வெளியீடு, முதல், சிறப் புப் பிரதிகள் வழங்கல், நூல் ஆய்வுரை, நவீன கண்ணம்மா நடனம், பிரதம,சிறப்பு விருந் தினர்களின் உரைகள், நூலாசிரியரின் ஏற்புரை என்பன இடம்பெறும். (2)




# வவுனியா பேருந்து நிலையத்தில் 3 கிலோ கேரளக்கஞ்சா சிக்கியது

## ஒருவர் மாட்டினார்



(மல்லாவி)

வவுனியா நகரப் பகுதியில் உள்ள பேருந்து நிலையத்தில் வவுனியா மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பிரிவு பொலிஸாரால் கேரள கஞ்சா 3 ஆயிரத்து 550 கிலோ கிராம் கைப்பற்றப்பட் டுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் அதனை தனது உடைமையில் வைத்திருந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸ் நிலையத் தகவலில் தெரி விக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது,

யாழ்ப்பாணத்தில் இருந்து ஒருவர் கொழும்பிற்கு கேரள கஞ்சா பொதிகள் பேருந்து மூலம் கொண்டு செல்வதாக கிடைத்த இரகசியத் தகவலையடுத்து பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போதே கேரள கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த அதிரடி நடவடிக்கையில் வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி விஜயமுனி சோமரட்ணவின் வழிகாட்டலில் உப பொலிஸ் பரிசோதகர் கலாவினோதன் தலைமையிலான பொலிஸ் அணியினரே கேரளக் கஞ்சா பொதிகளைக் கைப்பற்றியுள் ளனர்.

இச் சம்பவத்தில் கைப் பற்றப்பட்டுள்ள தடயப்பொருளையும் கைதான சந்தேக நபரையும் வவுனியா மாவட்ட நீதிமன்றில்ஆஜர்படுத்தநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவவுனியாபொலிஸ் நிலையத்தகவலில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளது. (2-15-250)

# ஆறாயிரத்து 363.8 மில்லியன் நிதியில் 5 ஆயிரத்து 243 திட்டங்கள் நடைமுறையில் கிளிநொச்சியில் முன்னெடுப்பு

கிளிநொச்சி மாவட்டத்தல ஆறாயிரத்து 363.8 மில்லியன்ரூபா நிதிஐயாயிரத்து 243 திட்டங்களுக்கு 2016 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்றுள்ளதாக மாவட்டச் செயலக புள்ளி விபரத்தில் தெரிவிக்கப்பட் டுள்ளது. இது தொடர்பில் தெரிய வருவதாவது,

கிளிநொச்சி மாவட்டத் தில் 2016 ஆம் ஆண்டின் பல்வேறு அபிவிருத்திவேலைத் திட்டங்களுக்கு ஆறாயிரத்து 363.8 மில்லியன் ரூபா நிதி கிடைக்கப்பெற்று அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப் பட்டு வருவதாகத் தெரி விக்கப்படுகின்றது.

சிறைச்சாலைகள் புனரமைப்பு புனர்வாழ்வு அமைச்சு, தேசிய கொள்கைகள் பொருளாதார அமைச்சு, மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதி, தெங்கு பயிர் செய்கை கமநல அபிவிருத்தித்திணைக்களம், கல்வி அமைச்சு உள்ளிட்ட அமைச்சுக்களினூடாக கிடைக் கப்பெற்ற நிதியுதவியுடன் 5243 திட்டங்கள் நடைமுறை ப்படுத்தப்பட்டு வருகின்றன. இதில் இரணைமடுக்குளம் புனரமைப்பு மற்றும் நீர்ப்பாசன கட்டமைப்பு வசதிகளுக்கு அதிக நிதியொதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

வீடமைப்பு சுகாதாரம் நீர் விநியோகம் உட்கட்டமைப்பு கல்வி கடற்றொழில் உள்ளிட்ட விடயங்களுக்காக குறித்த நிதி கிடைக்கப்பெற்று அபிவிருத்தி வேலைகள் முன் னெடுக்கப்பட்டு வருகின் றன.

கடந்த இரண்டு ஆண்டு களுடன் ஒப்பிடுகையில் 2014, 2015 ஆம் ஆண்டுகளை விட 2016 ஆம் ஆண்டில் மிகக் கூடுதலான நிதி கிளி நொச்சி மாவட்டத்திற்கு ஒதுக் கீடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-15)

# 2016 இல் இந்திய-இலங்கை உறவு; வலிகளுக்கு மத்தியில் முன்னேற்றம்

பல்வேறு விவகாரங்களிலும், அதிருப்திகள் காணப்பட்டாலும், இந்தியாவுடனான இலங்கையின் உறவானது 2016 ஆம் ஆண்டில் மேலும் முன்னேற்றமடைந்துள்ளது எனறு பிரிஜ செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ள செய்தி ஆய்வில் கூறப்பட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து அந்த ஆய்வில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பரிந்துரைக்கப்பட்டுள்ள பொருளாதார மற்றும் தொழில்நுட்ப உடன்படிக்கை தொடர்பான முரண்பாடு, இரு நாடுகளின் கடலிலும் மீனவர்கள் சட்ட ரீதியற்ற மீன்பிடியில் ஈடுபடுதல், இலங்கைத் தீவில் சீனா செல்வாக்குச் செலுத்துகின்றமை போன்ற விடயங்கள் இலங்கை - இந்தியா ஆகிய நாடுகளுக்கு இடையில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ள போதிலும், உயர்மட்ட பரிமாற்றங்கள் மற்றும் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டதன் மூலம் இந்தியாவுடனான இலங்கையின் உறவானது 2016 ஆம் ஆண்டில் மேலும் முன்னேற்றமடைந்துள்ளது.

வரலாற்று ரீதியாக நோக்கும்போது, இரு நாடுகளுக்கும் இடையிலான உறவானது சில விடயங்களில் முரண்பாட்டை ஏற்படுத்தியுள்ளது. 1980களில் ஈழத்தமிழர் விவகாரமானது இவ்விரு நாடுகளின் உறவில் விரிசலை ஏற்படுத்தியது.

அதேபோன்று இரு நாட்டு மீனவர்களும் சட்டரீதியற்ற வகையில் மீன்பிடியில் ஈடுபடுதல் மற்றும் முதலீட்டைக் காரணமாகக் கொண்டு சீனா மீது இலங்கை அதிகம் தங்கியிருத்தல் போன்ற சில விடயங்களே இலங்கை- இந்திய உறவில் விரிசலை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த ஆண்டு இலங்கை மற்றும் இந்திய ஆட்சிகளில் மாற்றங்கள் ஏற்பட்ட பின்னர், 2016இல் இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் முதிர்ச்சித்தன்மை ஏற்பட்டுள்ளதற்கான அறிகுறி தென்படுகின்றது.

ஜம்மு - காஷ்மீரில் நிலை கொண்டுள்ள இந்திய இராணுவம் மீது பாகிஸ்தானிய தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து பாகிஸ்தானில் நவம்பர் மாதம் நடைபெறத் தீர்மானிக்கப்பட்ட தெற்காசியப் பிராந்திய ஒத்துழைப்புச் சங்கத்தின் (சார்க்) மாநாட்டை இந்தியா புறக்கணிப்பதாக அறிவித்த போது இலங்கை இந்த மாநாட்டை நிறுத்தியதானது மிக முக்கிய நிகழ்வுகளில் ஒன்றாகும்.

காலியில் கடந்த மாதம் இடம்பெற்ற பாதுகாப்பு சார் கலந்துரையாடலில் இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் சுனில லன்பா கலந்து கொண்டிருந்தார். இந்திய கடல் பிராந்தியத்தில் அதிகரித்து வரும் சீனாவின் செல்வாக்கை நிறுத்துவதற்கான ஒருங்கிணைந்த இருதரப்பு கடல் சார் பாதுகாப்பு உறவுகளைக் கட்டியெழுப்புவதே, இந்தியக் கடற்படைத் தளபதி காலி கலந்துரையாடலில் கலந்து கொண்டமைக்கான பிரதான காரணமாகும்.



முதலீடு மற்றும் இராணுவத் தேவைகளுக்காக இலங்கையானது சீனா மீது தங்கியிருப்பது அதிகரித்துள்ளதால் இலங்கை மீதான பொருளாதார மற்றும் கடல் சார் பாதுகாப்பிலும் சீனா தனது செல்வாக்கை அதிகரித்துள்ளது. சீனா தனது பொருளாதார மற்றும் கட்டுமானப் பரிந்துரைகளை இலங்கை நோக்கித் தள்ளுவதில் சீனா ஆர்வமாக உள்ளது.

இலங்கையுடன் உறவுகளைப் பலப்படுத்திக் கொள்வதற்காக இந்தியா தற்போது பொருளாதார ஒத்துழைப்பை மையப்படுத்தி செயற்படுகின்றது. இலங்கை அரசாங்கமும் இந்தியாவுடன் பொருளாதார உறவுகளின் ஊடாகத் தனது நாட்டைக் கட்டியெழுப்புவதில் ஆர்வமாக உள்ளது.

2016 ஒக்டோபர் மாதத்தின் முதல் வாரம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவிற்குப் பயணம் செய்த போது, இவ்வாண்டு இறுதிக்குள் இந்தியாவுடன் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதை இலங்கை எதிர்பார்ப்பதாக தெரிவித்திருந்தார்.

28 உறுப்பினர்களைக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியத்தின பொருளாதார வலயத்திலிருந்து பிரித்தானியா விலகிக் கொள்வதாக தீர்மானித்த போது, இந்தியாவுடன் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கையை விரைந்து மேற்கொள்ள வேண்டியதன் தேவையை விக்கிரம சிங்கவின் கருத்தின் மூலம் அறிய முடிந்தது.

இந்த உடன்படிக்கை யால இந்தியா நன்மை பெறும் என சந்தேகம் அடைந்ததால் இழுபறிநிலையில் உள்ளது. சீனாவிடமிருந்து இலங்கைகக்குக் கிடைக்கும் பாரிய முதலீடுகளை நிறுத்துவதற்கான ஒரு கண்துடைப்பாகவே இந்தியா இந்த உடன்படிக்கையை மேற்கொள்ள முன்வருவதாக இலங்கை கூட்டு எதிர்க்கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

"பொருளாதார மற்றும் தொழில்நுட்ப உடன்படிக்கையை அமுல்படுத்துவதன் மூலம் இந்தியா தனது நாட்டில் நிலவும் வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்க்க முடியும் எனத் தோன்றுகின்றது. இந்த உடன்படிக்கையானது இந்தியர்களுக்கு ஒரு மில்லியன் தொழில்களைப் பெற்றுக் கொள்ள முடியும்" என எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

ஆனால் இந்த உடன்படிக்கைக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் "அரசியல் ரீதியாக உந்தப்பட்டுள்ளன" என தெரிவித்ததன் மூலம் இந்த உடன்படிக்கையில் தனது அரசாங்கம் கைச்சாத்திடும் தீர்மானத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாதுகாத்துள்ளார். (இ-10)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 939

ராகுலன்




விதுர்சா




டிலைக்ஷனா





சங்கர்




மதன்




மாதுரி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# உலகைப் பயமுறுத்தும் உயர் இரத்த அழுத்தம்

உலகை அச்சுறுத்தும் நோய்களில் குறிப்பிடத்தக்கது உயர் இரத்த அழுத்த நோய். இது எச்சரிக்கை அறிகுறிகளை கொடுக்காமல், ஓசையின்றி மனிதனை கொல்லும் நோயாகும். இளம் வயதினர் கூட இந்த நோயால் பாதிக்கப்படுகின்றனர். ஆண்டுதோறும் 70 இலட்சம் பேர் இந்த நோயால் இறக்கிறார்கள். இதய நோய், பக்கவாதம் மற்றும் சிறுநீரக நோயை ஏற்படுத்துவதிலும் உயர் இர்த்த அழுத்தம் முக்கிய காரணியாக செயற்படுகிறது.

★ உயர் இரத்த அழுத்தம் என்றால் என்ன?

இரத்தக் குழாய் மூலம் இதயத்திலிருந்து இரத்தம் செல்லும்போது இரத்தக்குழாய் சுவர்களுக்கு எதிராக அழுத்தத்தை ஏற்படுத்தும். இந்த அழுத்தமே இரத்த அழுத்தம் எனப்படுகிறது. இரத்த அழுத்த அளவானது இதயத்தின் சுருங்கிய இயக்க அழுத்தம், இதயத்தின் விரிந்த இயக்க அழுத்தம் என்னும் இரண்டு அழுத்தங்களை அடிப்படையாகக் கொண்டது.

இயல்பு நிலையில் இதயத்தின் சுருங்கிய அழுத்தம் 120 mm-Hg - ஆகவும், இதயத்தின் விரிந்த இயக்க அழுத்தம் 80 mm-Hg ஆகவும் இருக்க வேண்டும். அதாவது 120/80 mm-Hg என்றிருக்க வேண்டும். ஆனால் 140/90 mm-Hg இற்கு அதிகமாக இரத்த அழுத்த அளவீடு இருக்குமானால் அது உயர் இரத்த அழுத்தமாகும். இதன் மருத்துவப் பெயர் "ஹைப்பர்டென்சன்' என்பதாகும். குறிப்பாக 40 வயதிற்கு மேல் உள்ளவர்கள் இந்த நோயால் பாதிக்கப்படுகின்றனர்.

★ உயர் இரத்த அழுத்தத்தை எவ்வாறு கண்டுபிடிப்பது?

"ஸ்பிக்மோமேனோமீட்டர்" என்னும் இரத்த அழுத்த அளவீட்டுக்கருவியின்மூலம் இரத்த அழுத்தத்தை கண்டுபிடித்து விடலாம். இரத்த அழுத்த அளவு 140/90 mm-Hg ஆக இருந்தால், அந்த நோயாளியை மேற்கொண்டு பரிசோதிக்க வேண்டும். ஆனால் ஒரே ஒருமுறை மட்டும் அதிகமாக இருந்தால் இரத்த அழுத்த நோய் உள்ளதாக எடுத்துக் கொள்ளக்கூடாது. வெவ்வேறு சமயங்களில் மூன்று முறை அடுத்தடுத்த நாட்களில் பரிசோதித்த பிறகும் இரத்த அழுத்தம உயர்வாக இருந்தால் அவரை உயர் இரத்த அழுத்த நோயாளி எனக் கூறலாம்.

★ அறிகுறிகள்

கடுமையான தலைவலி
தலைச்சுற்றல்
காது இரைச்சல்
குமட்டல்
மனக்குழப்பம்
மயக்க உணர்வு

★ இரத்த அழுத்த நோயின் விளைவுகள்:

சிறுநீரக நோய்
மாரடைப்பு
பக்கவாதம்
இதயம் செயலிழத்தல்
விழித்திரை நோய்

★ உயர் இரத்த அழுத்த நோயை உருவாக்கும் முக்கிய காரணிகள்:

உடல் பருமன்
மனஅழுத்தம்
மனஉளைச்சல்
அளவுக்கு அதிகமாக உப்பை உணவில் சேர்த்துக் கொள்ளுதல்
அளவுக்கு அதிகமாக மது அருந்துதல்
புகைப்பிடித்தல்.
நீரிழிவு நோய்.

இது பரம்பரை நோயாகவும் தொடர வாய்ப்புள்ளது.

★ இந்த நோய் வராமல் தவிர்க்க:

அன்றாட உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டிய உப்பின் அளவை வெகுவாக குறைக்க வேண்டும்.

சராசரியாக தினமும் 4 கிராம் உப்பு எடுத்துக் கொள்ளலாம். (1 டீஸ்பூன் 2 கிராம்).

உணவில் அதிக அளவில் காய்கறிகளையும், கீரைகளையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

நார்ச்சத்து நிறைந்த பழங்களை உட்கொள்ள வேண்டும்.

கோதுமை, கம்பு, கேழ்வரகு போன்ற நார்ச்சத்துள்ள தானியங்களை அன்றாட உணவில் அதிகம் சேர்க்க வேண்டும்.

அன்றாடம் 30 நிமிடங்களாவது நடைப்பயிற்சி மேற்கொள்ளுங்கள்.

உடற்பயிற்சி செய்யுங்கள்.

மன உளைச்சல்களை தவிர்த்து மகிழ்ச்சியை உணருங்கள்.

இரத்த அழுத்த அளவையும் முறையாக பரிசோதியுங்கள்.

உயர் இரத்த அழுத்த நோய் இருப்பின் வைத்தியரின் ஆலோசனைப்படி மருந்துகளை தவறாமல் சாப்பிடுங்கள்.

முன்னோர் அல்லது அம்மா-அப்பா எவருக்கேனும் இந்நோய் இருந்தால், வைத்தியரிடம் பரிசோதித்து, முறையான ஆலோசனைகளை பெறுங்கள்.

உயர் இரத்த அழுத்த நோய் இருப்பதாக தெரிந்தால், மாதம் ஒருமுறை தவறாமல் பரிசோதனை மேற்கொண்டு, வைத்தியர்களின் ஆலோசனைப்படி மருந்துகளை உட்கொள்ள வேண்டும்.



**நோயாளிகள் செய்யக்கூடாதவை:**

அப்பளம், சிப்ஸ், கருவாடு போன்ற எண்ணெயில் பொரித்த உணவுப் பொருட்களை உண்ணக் கூடாது.

ரின்களில் அடைக்கப்பட்டு விற்கப்படும் பதப்படுத்திய உணவு வகைகளை அதிக அளவு சாப்பிடக் கூடாது.

துரித உணவுகளை தவிர்த்திடவேண்டும்.

மது, புகை, போதைப் பொருட்களை முற்றிலுமாக தவிர்த்திட வேண்டும்.

கொழுப்புச்சத்து மிகுந்த உணவுப் பொருட்களான இறைச்சி, முட்டை(மஞ்சள் கரு), எண்ணெய், நெய், வனஸ்பதி போன்றவற்றை அதிகமாக உண்ணக் கூடாது.

வேலையிலோ, வாழ்க்கையிலோ அதிக மனஅழுத்தத்தை ஏற்படுத்திக்கொள்ளக்கூடாது.




# குளிர்காலத்தில் கவனிக்க வேண்டிய பாதுகாப்பு அம்சங்கள்

குளிர்காலம் ஆரம்பிக்க இருப்பதால் வீட்டையும் அதில் உள்ள பொருட்களையும் பராமரிப்பது முக்கியம். காரணம், மனிதர்களைப்போல கட்டட அமைப்புகளும் குளிரை உணரும் தன்மை கொண்டவையாக இருக்கின்றன.

அதனால் வீட்டில் உள்ள பொருட்களை அதற்கேற்ப மாற்றி அமைப்பது நல்லது. எதைத் தொட்டாலும் சில்லென்று இருப்பதால் வீட்டிற்குள் வெப்பத்தை நிலைக்கும்படி செய்ய வேண்டியது அவசியமாகிறது.

அதற்காக செயற்கையான வழிகளை தவிர்த்துவிட்டு, இயற்கையான வழிகளை கையாண்டு குளிரை தடுப்பதற்கான குறிப்புகளை இங்கே காணலாம்.

**சரியான திரைகள்**

மழை மற்றும் குளிர் காலங்களில் வீட்டுக்குள் குளிராக இல்லாமல் அறையில் வெதுவெதுப்பான வெப்ப நிலை இருக்கவேண்டுமானால் கச்சிதமான திரைகளை பயன்படுத்துவது அவசியம்.

சூரிய வெளிச்சம் வீட்டுக்குள் எந்தெந்த ஜன்னல்கள் வழியாக வருகிறதோ அவற்றை சரியாக தேர்ந்தெடுத்து, அங்கு மெல்லிய திரைகளை பயன்படுத்தலாம். ஏனைய ஜன்னல்களுக்கு சற்றே கெட்டியான துணிகளால் ஆன திரைகளை பயன்படுத்துவது நல்லது.

**ஜன்னல்கள் கவனம்**

குளிர்கால இரவு நேரங்களில் சுற்றுப்புற வெப்ப நிலை குறைவாக இருப்பதோடு, குளிர் காற்றின் தாக்கம் எல்லா இடங்களிலும் பரவலாக இருக்கும். அதனால் மாலை நேரத்திலேயே ஜன்னல்களை மூடி வைத்துவிடுவதுதான் பாதுகாப்பான வழியாக இருக்கும். அதன் மூலம் குளிர் காற்று உள்ளே வருவது தடுக்கப்படுவதோடு, அறைகளுக்குள் நிலவும் வெப்பமும் வெளியேறாமல் இருக்கும். வெளிப்புற வெப்பநிலை குறையும்போது அறையின் வெப்ப நிலையை பாதுகாக்க வெளிக்காற்று உள்ளே துளியும் வராதவாறு அழுத்தமாக ஜன்னல்களை மூடி வைக்க வேண்டும். கதவுகளை அடிக்கடி திறந்து மூடுவதாலும் வெளிப்புற காற்று அறைகளுக்குள் வரும் வாய்ப்பு இருப்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.



**தளபாடங்களை நகர்த்தவும்**

ஜன்னல்கள் மற்றும் கதவுகளுக்கு அருகில் உள்ள தளபாடங்களை சற்று நகர்த்தி வைக்க வேண்டும். ஏனென்னில் பகல் நேரங்களில் அறைக்குள் வரும் வெப்பமான காற்று தடுக்கப்படாமல் இருக்க வேண்டும். மேலும், இரவில் குளிர்ந்த காற்றின் காரணமாக அவை குளிர்ச்சி அடைந்து விடுவதோடு அறைக்குள்ளும் குளிர்ச்சியை உண்டாக்கும். அதனால் தளபாட வகைகள் எவ்வகையாக இருந்தாலும் ஈரமான மூலைகளில் இருந்து நகர்த்தி வைக்கப்படவேண்டும்.

**தரைவிரிப்புகள் கவனம்**

பனிக்காலங்களில் அறைகளுக்குள் வெறும் கால்களால் நடக்காமல் வீட்டுக்குள் உபயோகப்படுத்தும் 'ஸ்லிப்பர்' வகை செருப்புகளை பயன்படுத்தலாம். அதன் காரணமாக தரையின் குளிர்ச்சியானது சுலபமாக உடலுக்குள் கடத்தாமல் தடுக்கப்படும். மேலும் அறைகளுக்கு கச்சிதமாகவும் சரியான வண்ணத்துடனும் இருப்பது போன்று கெட்டியான கம்பளம் அல்லது தென்னை நாரால் செய்யப்பட்ட 'புளோர் மேட்' ஆகியவற்றை பயன்படுத்தலாம். குடும்ப உறுப்பினர்கள் அடிக்கடி புழங்கும் அறைகளிலும் கெட்டியான 'மேட்' விரித்து வைக்கலாம்.

அவ்வாறு செய்யும்போது உடல் வெப்பத்தை தரைத்தளம் உறிஞ்சி விடாமல் பாதுகாக்கப்படுகிறது.

**உறைகள் அவசியம்**

ஹோல் உள்ளிட்ட மற்ற அறைகளின 'தளபாடங்கள்' மற்றும் 'சோபா செட்கள்' ஆகியவற்றுக்கு கம்பளி அல்லது அழுத்தமான 'கொட்டன்' துணியால் தயாரிக்கப்பட்ட மேல் உறைகளை பயன்படுத்தி மூடி வைக்க வேண்டும். அதன் மூலம் அவற்றை ஒவ்வொரு முறையும் பயன்படுத்தும்போது வெதுவெதுப்பாக இருக்கும்.

**மெழுகுவர்த்திகள் ஏற்றலாம்**

அதிக குளிராக உணரும் சமயங்களில் படுக்கையறை உள்ளிட்ட ஏனைய அறைகளில் பெரிய அளவிலான மெழுகுவர்த்தியை ஏற்றி வைக்கலாம்.

அதனால் குளிர்காலத்தில் ஏற்படும் மந்தமான சூழ்நிலை தவிர்க்கப்படுவதோடு, அறை வெளிச்சமும வெப்பமும் கூடிய இடமாக இருக்கும். இம்முறை இயற்கையாக இருப்பதோடு அதிக செலவும் ஆகாத வழியாக இருப்பதால் சுலபமாக எல்லோருமே இந்த முறையை கையாண்டு குளிரை விரட்டியடிக்கலாம்.

# புகைபடர்ந்த வட இலங்கை
# புது வழிகாட்டப் புறப்பட்டிருக்கும் க



கட்டுக்கரை என்ற இடம் வட இலங்கையில் மன்னார் மாவட்டத்தில் இருந்து வடகிழக்கே 26 கி.மீ. தொலைவில் வட்டக்கண்டல் பிரதேசத்திற்கு அண்மையில் அமைந்துள்ள சிறிய கிராமமாகும். குளத்தை மையப்படுத்தி தோன்றிய இக்கிராமதின் பெயர் சிங்களத்தில் யோதவேவா எனவும் தமிழில் கட்டுக்கரைக்குளம் எனவும் அழைக்கப்படுகிறது.

ஆயினும் இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் இக்குளம் உட்பட அதைச் சுற்றியமைந்த சில கிராமங்கள் பாலப்பெருமாள்கட்டு என அழைக்கப்பட்டு வந்ததாகத் தெரியவருகிறது. இலங்கையின் வரலாற்றுப்பழைமைவாய்ந்த பெருங்குளங்களில் ஒன்றான இக்குளத்திற்கு தொன்மையான, தொடர்ச்சியான வரலாறு உண்டு.

இந்த உண்மையை கட்டுக்கரைக் குளத்திற்கு உள்ளேயும், அதன் வடக்குப் பக்க அணைக்கட்டை ஒட்டிய காட்டுப் பிரதேசத்தில் பரந்த அளவில் காணப்படும் புராதன குடியிருப்புக்களுக்குரிய தொல்லியற் சான்றுகளும் உறுதிசெய்கினறன. அண்மைக்காலத்தில் மக்கள் இடப்பெயர்வால் தற்போது இவ்விடம் வனப் பிரதேசமாக மாறியிருந்தாலும் முன்னொரு காலத்தில் மக்கள் பரந்து வாழ்ந்த பூர்வீக இடங்கள் என்பதை இங்கு கிடைத்து வரும் தொன்மைச் சான்றுகள் அடையாளப்படுத்திக் காட்டுகின்றன.

இக்குள அணைக்கட்டின் வடக்குப் பக்கமாக நீர் வெளியேறும் குருவில்



என்ற இடத்தில் ஒதுங்கிவரும் சிலவகை மட்பாண்டங்களின் வரலாற்றுப் பெறுமதியை உணர்ந்த அப்பிரதேசத்தில் வாழும் ஆசிரியர் டேவிட் , அது பற்றிய செய்தியை தொல்லியல் இறுதி வருட மாணவன் எஸ். கிரிசாந்தனுக்கு தெரியப்படுத்தியதன் மூலம் கடந்த ஆறு மாதங்களாக தொல்லியல் சிறப்புக்கலை மாணவர்களுடன் இணைந்து அங்கு தொல்லியல் ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் தொல்லியல் மேலாய்வின் போது கற்காலம் தொட்டு பதின்மூன்றாம் நூற்றாண்டு வரையான பல்வேறு காலகட்டத்தைச் சேர்ந்த பலவகை தொல்லியற் சின்னங்களைக் கண்டுபிடிக்க முடிந்தது. அவற்றுள் சிலவகை கற்கருவிகள், பெருங்கற்கால மட்பாண்டங்கள், கல்மணிகள், கைவளையல்கள், இரும்புக்கருவிகள், இப்பண்பாடு நிலவிய காலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட கல்மணி, மட்பாண்டங்கள், சங்கு என்பவற்றின் தொழில்கூடங்களுக்கான சான்றாதாரங்கள் என்பன கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முன்னரே நாகரிக நிலையை அடைந்த இப்பிரதேச மக்கள் இந்தியா, மத்திய ஆசியா, சீனா முதலான நாடுகளுடன் நெருங்கிய வணிக உறவுகளைக் கொண்டிருந்ததை இறக்குமதி செய்யப்பட்ட மட்பாண்டங்கள், விலையுயர்ந்த கல்மணிகள், கண்ணாடிப் பொருட்



கள், வெளிநாட்டு நாணயங்கள் என்பன உறுதிசெய்கின்றன. இங்கு கிடைத்த உள்ளூர் நாணயங்களுள் 13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நாணயங்கள் குறிப்பாக ஸ்ரீசாவகன் பெயர் பொறித்த நாணயம் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. 1262ஆம் ஆண்டைச் சேர்ந்த பாண்டியரது கல்வெட்டு யாழ்ப்பாண இராசதானிக்கு முற்பட்ட சாவகன் அரசு வட இலங்கையில் இருந்தது பற்றிக் கூறுகிறது.

சமகாலப் பாளி, சிங்கள இலக்கியங்கள் சாவகனின் அரச ஆதிக்க மையங்கள் மன்னார், மன்னாரப்பட்டினம், மாதோட்டம், குருந்தி முதலான இடங்களில் இருந்ததாகக் கூறுகின்றன. இந்நிலையில் சாவகன் கால நாணயங்கள் இங்கிருக்கும் குருவில் என்ற இடத்தில் கிடைத்திருப்பது குருந்தி என்ற இடம் பாளி சிங்கள இலக்கியங்களில் குறிப்பிடப்படும் குருவிலாக இருக்கலாம். இவற்றுக்கான விடைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட இருக்கும் ஆய்வுகளால் தெரிய வரலாம்.

**2000 ஆண்டுகளுக்கு முந்திய இந்துமதச் சின்னங்கள் கண்டுபிடிப்பு**

எமது தொல்லியல் ஆய்வின் போது கண்டுபிடிக்கப்பட்ட ஆதாரங்களுள் இந்து மதத்தின் தொன்மையை எடுத்துக்காட்டும் சின்னங்கள் பலரின் கவனத்தை கட்டுக்கரையின் பக்கம் திரும்பிப்பார்க்க வைத்துள்ளது எனலாம். நன்கு திட்டமிடப்பட்ட முறையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வில் இச்சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது ஈழத்து இந்து மதத்தின் தோற்றம் பற்றிய முன்னைய கருத்துக்களை, முடிவுகளை எதிர்காலத்தில் மீள்வாசிப்பிற்கு உட்படுத்தத்தூண்டலாம். இந்த அகழ்வாய்வு மூன்று மீற்றர் நீள அகலம் கொண்ட ஐந்து ஆய்வுக் குழிகளில் அவற்றின் இயற்கை மண் அடையாளம் காணப்படும் வரை மேற்கொள்ளப்பட்டது. மூன்று வேறுபட்ட காலத்திற்குரிய கலாசார மண் அடுக்குகளைக் கொண்ட இவ்வாய்வுக் குழிகளின் மூன்றாவது கலாசார மண் அடுக்கில் செங்கட்டிகளாலான அத்திபாரம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இக்கட்டடம் அமைந்த நிலப்பகுதி அருவியாற்றின் அதிக நீர்வருகை காரணமாக கட்டுக்கரைக்குளத்தின் நீர்மட்டம் உயர்ந்து அதன் அலையின் தாக்கத்திற்கு உட்பட்டதால் இவ் அத்திபாரத்தின் மேலமைந்த செங்கட்டிச் சுவர்கள் அழிவடைந்து அவற்றின் பாகங்கள் பெருமளவுக்கு குளப்பகுதியில் மண்ணில் புதையுண்டு காணப்படுகின்றன. இவ் அத்திபாரத்தை ஒட்டியதாகவே சுடுமண் சிற்பங்கள், சிலைகள், மணிகள், தெய்வ வாகனங்களின் பாகங்கள், அகல் விளக்குகள், தீபங்கள், சமயச் சின்னங்கள், இலட்சனைகள், குறியீடுகள் என்பன பொறிக்கப்பட்ட சுடுமண் பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வாதாரங்களை வைத்து நோக்கும் போது இங்கு கண்டுபிடிக்கப்பட்ட கட்டட அழிபாடுகள் ஒரு ஆலயமாக அல்லது சமயச் சடங்குகள் நடைபெற்ற இடமாக இருந்திருக்கலாம் எனக் கூறமுடியும்.


தென்னிந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் இந்து மதம் சார்ந்த கலைவடிவங்கள் இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட பெருங்கற்காலப் பண்பாட்டிலிருந்து பயன்படுத்தப்பட்டதற்கு நம்பகரமான ஆதாரங்கள் காணப்படுகின்றன. ஆயினும் இக்கலை வடிவங்களும், பிற்காலத்தில் தோன்றிய ஆலயங்களும் கி.பி. ஆறாம் நூற்றாண்டுக்கு முன்னர் அழியக்கூடிய மரம், மண், சுதை என்பவற்றாலேயே ஆக்கப்பட்டன. இதைச் சமகாலத் தமிழ் இலக்கியங்களும் கல்வெட்டுக்களும் உறுதிசெய்கின்றன.

இம்மரபே சமகால இலங்கையிலும் பின்பற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதற்கு கட்டுக்கரை அகழ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட சமயச் சின்னங்கள் சிறந்த சான்றுகளாகும். இங்கு கண்டுபிடிக்கப்பட்ட சமயம் சார்ந்த கலைவடிவங்கள் களிமண் அல்லது களிமண்ணுடன் குருமணல், நெல் உமி அல்லது வைக்கோல் என்பன கலந்து உருவாக்கப்பட்டு பின்னர் அவை சுடப்பட்டவையாகும்.

இவற்றின் கலை மரபுகள் சில தென்னிந்தியாவிலும் தென்னிலங்கையிலும் கண்டுபிடிக்கப்பட்ட சுடுமண் உருவங்களை ஒத்திருந்தாலும் பல சுடுமண் உருவங்கள் இப்பிரதேச மக்களுக்கேயுரிய தனித்துவமான கலைமரபாகவும், தொழில்நுட்பத் திறனாகவும் காணப்படுகின்றன.


இங்கு கண்டெடுக்கப்பட்ட சில சமயச் சின்னங்கள் இலங்கையின் ஏனைய பிராந்தியங்களிலோ அல்லது தமிழகத்திலோ இதுவரை கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அவை கட்டுக்கரையிலேயே புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டதனால் அவற்றிற்கு விளக்கம் கூறுவதில் அறிஞர்களிடையே மாறுபட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன.

இங்கு பலதரப்பட்ட தெய்வ வழிபாட்டை நினைவுபடுத்தும் உருவங்கள் மற்றும் சின்னங்கள் கிடைத்துள்ளன. அவற்றுள் ஆவுடையுடன் கூடிய இலிங்கம், இலிங்க வடிவங்கள், நந்தி, நந்தியின் பாகங்கள், முத்தலைச் சூலங்கள், பிறைச் சந்திரன்



என்பன சிவனுடன் தொடர்புடையவையாக உள்ளன. சில பெண் உருவங்கள் சத்தியுடன் தொடர்புபடுத்தக் கூடியவை. வேல், மயில் சின்னங்கள் முருகனை நினைவுபடுத்துகின்றன. நாகவடிவங்கள் இங்கு நாக வழிபாடு இருந்திருக்கலாம் என்பதைக் காட்டுகின்றன. சிறிய கலசங்களின் வாயிற்பகுதியில் இருந்து வெளிவரும் உருவங்கள் குறுமுனி என அழைக்கப்படும் அகத்தியர் வழிபாட்டை நினைவுபடுத்துவதாக உள்ளன. அதிக எண்ணிக்கையில் கண்டுபிடிக்கப்பட்ட விநாயகக் கடவுளைப் பிரதிபலிக்கும் உருவங்கள் விநாயகரே பிரதான தெய்வமாக இருந்திருக்கலாம் எனச் சிந்திக்க வைக்கிறது.


ஆயினும் ஆலயம் அல்லது சமயச் சடங்குகள் நடைபெற்ற இவ்விடத்தில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட அதிக எண்ணிக்கையில் கிடைத்த ஆதாரங்களையும், அதன் அருகே கட்டுக்கரைக் குளம்



# கயின் பூர்வீக வரலாற்றிற்கு கட்டுக்கரைத் தொல்லியல் ஆய்வுகள்

அமைந்திருக்கும் வரலாற்றுப் பின்னணியையும் நோக்கும் போது இவ்விடத்தின் முதன்மைத் தெய்வமாக ஐயனாரே இருந்திருப்பார் எனக் கூற முடிகிறது.

தென்தமிழகத்திலும், இலங்கையிலும் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தோன்றிய குளக்குடியிருப்பில் ஐயனாரை பொருளாதாரச் செழிப்பிற்காகவும் இயற்கை அனர்த்தங்களில் இருந்து காக்கவும் கொடிய மிருகங்களில் இருந்து பாதுகாக்கவும் குளம் அல்லது நீர்நிலைகளுக்கு அருகில் ஐயனாரை வைத்து வழிபடும் மரபு மிகத் தொன்மையானது. இதற்கு தமிழகத்தில் மதுரை



மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மிகத் தொன்மையான ஐயனார் வழிபாட்டுக்குரிய ஆலயங்கள் சிறந்த சான்றாகும்.

வன்னியிலும் பண்டுதொட்டு ஐயனார் ஒரு முக்கிய தெய்வமாக வழிபடப்பட்டு வருவதற்குப் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. கட்டுக்கரை அகழ்வாய்வுகளிலும் ஐயனார் கடவுளை அடையாளப்படுத்தும் சான்றுகளே பெருமளவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஐயனாரின் முக்கிய வாகனமாக இருந்து வரும் யானை, குதிரை என்பவற்றின் நூற்றுக்கணக்கான உடற்பாகங்கள், குதிரை, யானை என்பவற்றின் தலைப்பகுதிகள், தும்பிக்கைகள், 75 மேற்பட்ட யானைத் தந்தங்கள், யானை, குதிரை, நந்தி முதலான வாகனங்களில் கழுத்தில் அணியப்பட்டிருந்த 50 இற்கு மேற்பட்ட மணிகள் என்பன சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. இவ்வாதாரங்களிடையே கிடைத்த இன்னொரு அற்புதமான சான்றாக யானை அல்லது குதிரையின் மேல் இருந்த பீடத்தில் தெய்வீக கோலத்தில் இரு கால்களையும் கீழே தொங்க விட்ட நிலையில் இருக்கும் இரு பெண் தெய்வத்தின் சிற்பங்களாகும். இவை ஐயனாரின் இரு தேவியர்களையும் குறிப்பதாக இருக்கலாம். இவ்வாதாரங்கள் நீர்நிலைத் தெய்வமான ஐயனார் முக்கிய தெய்வமாக இவ்விடத்தில் வழிபடப்பட்டதை எடுத்துக்காட்டுகின்றன.


அதேவேளை இந்து மதத்தின் ஏனைய தெய்வங்களை வழிபட்டுவந்த மக்கள் தமது பொருளாதார வளம், பாதுகாப்பு என்பவற்றை வேண்டி ஐயனாரை வழிபட்டபோது தமது குல தெய்வமான சிவன், அம்மன், முருகன், விநாயகர் முதலான தெய்வ உருவங்களை மண்ணிலே செய்து காணிக்கையாக இவ்விடத்தில் வழங்கியிருக்கலாம் அல்லது அவ்விடத்தில் வைத்து வழிபட்டிருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

ஐயனார் தெய்வத்திற்குரிய தொன்மைச் சான்றுகள் தமிழகத்திலும் இலங்கையிலும் கண்டுபிடிக்கப்பட்டிருந்தாலும் கட்டுக்கரைத் தொல்லியல் ஆய்வில் கிடைத்த ஆதாரங்கள் பலவகையிலும் முக்கியத்துவம் வாய்ந்தவை என்பது தமிழக இலங்கை அறிஞர்களின் பொதுவான கருத்தாகும். தமிழகத்தில் ஐயனார் வழிபாட்டிற்குரிய தொன்மை ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டாலும் அவை அரிதாகவே இதுவரை கிடைத்துள்ளன. ஆனால் கட்டுக்கரைத் தொல்லியல் அகழ்வாய்வில் மிகக் குறுகிய ஆய்வுக் குழிக்குள் பலதரப்பட்ட ஆதாரங்கள் ஒன்றாகக் கிடைத்திருப்பது முக்கிய அம்சமாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. இற்றைக்கு 75 ஆண்டுகளுக்கு முன்னர் கொடக்கும்பற என்ற அறிஞர் கிளிநொச்சி மாவட்டத்தில் உருத்திரபுரத்தில் கிடைத்த சுடுமண் உருவங்களை இலங்கையின் சிவன் சக்தி வழிபாட்டிற்குரிய தொன்மைச் சான்றுகள் எனக் குறிப்பிட்டிருந்தார்.

இச்சின்னங்கள் கட்டுக்கரை அகழ்வாய்வுகளில் கிடைத்திருந்தாலும் முதன் முதலாக சுடுமண்ணாலான ஆவுடையுடன் கூடிய சிவலிங்கம் இங்கு மட்டும் கிடைத்திருப்பது இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது. தெய்வ வாகனங்களின் கழுத்தில் அணியப்பட்டதொன்மையான மணிகள் சமகாலத்தில் தமிழகத்திலோ அல்லது இலங்கையிலோ பயன்பாட்டில் இருந்ததற்கு ஆதாரங்கள் இல்லையென தமிழக மற்றும் இலங்கை அறிஞர்கள் சுட்டிக்காட்டுவது இங்கு குறிப்பிடத்தக்கது. அறிஞர்களில் ஒருசாரார் இலங்கையில் உள்ள இந்து ஆலயங்களில் பயன்படுத்தப்படும் ஆலய மணிகள் கிறிஸ்தவ மதத்தின்



செல்வாக்கால் ஏற்பட்டதெனக் கூறுகின்றனர். ஆனால் அதே வடிவிலான மணிகள் கட்டுக்கரை அகழ்வாய்வில் அதிக எண்ணிக்கையில் கிடைத்திருப்பது அதன் கலைமரபிற்கு இலங்கையில் தொன்மையான வரலாறு இருப்பதைக் காட்டுகிறது. கட்டுக்கரை அகழ்வாய்வுகளின் போது பல்வேறு அளவுகளில் பல வடிவங்களில் பயன்படுத்தப்பட்ட அகல்விளக்குகள், தீபத் தட்டுக்கள், பீடங்கள் கிடைத்துள்ளன. இவை இப்பிரதேசத்தில் வாழ்ந்த மக்களின் சுதேச கலைமரபிற்கும், தொழில்நுட்பத்திறனுக்கும் ஒரு சான்றாகச் சுட்டிக் காட்டப்படுகிறது. இங்கு கண்டுபிடிக்கப்பட்ட சமயச் சின்னங்களுள் மிகச் சிறிய கல



சங்கள் (சிறிய பானை அல்லது கடம்) சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன.

இக்கலசங்களின் வாய்ப்பகுதியில் இருந்து தெய்வ உருவங்கள் வெளிவருவது போன்ற தோற்றப்பாடுகள் காணப்படுகின்றன. இவை குறுமுனி என அழைக்கப்படும் அகத்தியர் வழிபாடு பற்றிய மரபை பண்டைய காலத்திலேயே கட்டுக்கரை மக்கள் அறிந்திருந்தமைக்கு அரிய சான்றுகளாக இருக்கலாம்.

கட்டுக்கரையில் கிடைத்த சமயச் சின்னங்களின் காலத்தை திடமாகக் கூறுவதற்கு மேலும் ஆய்வுகள் செய்யப்பட வேண்டியுள்ளன.

ஆயினும் மட்பாண்ட விளிம்புகளை அடிப்படையாகக் கொண்டு காலம் கணிப்பதில் புலமையுடைய கலாநிதி புஷ்பகுமார, பாலித்த போன்ற அறிஞர்கள் கட்டுக்கரை அகழ்வில் கிடைத்த மட்பாண்டங்களை 1400 ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இருக்கலாம் எனக் கூறுகின்றனர்.

கலாநிதி இரகுபதி இவற்றை மேலும் ஒரு நூற்றாண்டுக்கு முந்தியதாகக் கொள்ளலாம் எனக் குறிப்பிடுகிறார்.

ஆனால் தமிழகத் தொல்லியலாளரான பேராசிரியர்கள் இராசன், செல்வகுமார், இராசவேலு போன்றவர்கள் இவற்றின் காலத்தை 2000 ஆண்டுகளுக்கு முந்தியவையாக அதாவது பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தொடர்புடையவை எனக் கூறுகின்றனர்.

இந்த இடத்தில் காலத்தை நிச்சயப்படுத்தக்கூடிய நாணயங்கள் சில கட்டுக்கரை அகழ்வுக்குழிகளுக்கு மிக அருகில் கிடைத்துள்ளன. அவற்றுள் இரு நாணயங்கள் 2200 ஆண்டுகளுக்கு முற்பட்டவை. அவற்றுள் அச்சுக்குத்தப்பட்ட வெள்ளி முத்திரை நாணயம் இந்தியாவில் இற்றைக்கு 2300 ஆண்டுகளுக்கு முன்னர் முதன்முதலாக வெளியிடப்பட்ட நாணயமாகும். இந்நாணயம் கட்டுக்கரையில் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதன் மூலம் சமகாலத்தில் கட்டுக்கரைப் பிரதேசத்தில் மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பது மட்டுமல்ல, இந்தியாவுடன் வணிகத் தொடர்பை ஏற்படுத்தும் அளவிற்கு அவர்கள் நாகரீகத்தில் முன்னேறியிருந்தனர் என்பதும் உறுதியாகத் தெரிகிறது.

தெற்காசியாவில் உலோகத்தில் நாணயங்கள் வெளியிடுவதற்கு முன்னர் சுடுமண் நாணயங்கள் (Terracotta Coins) பயன்படுத்தப்பட்டமைக்கு பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. கட்டுக்கரையில் இவ்வகை நாணயங்கள் களவாய்வில் மட்டுமன்றி சமயச் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்ட அகழ்வுக்குழிகளில் இருந்தும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.




இவ்வாதாரங்கள் கட்டுக்கரைச் சமயச் சின்னங்களின் தோற்றகாலத்தை மேலும் பின்னோக்கி ஆராயத் தூண்டுகின்றன. அது தொடர்ந்து மேற்கொள்ளப்படும் ஆய்வுகளால் துலக்கம் பெறலாம்.

இவ்விடத்தில் கட்டுக்கரையில் அகழ்வு மேற்கொள்ள அனுமதி வழங்கிய இலங்கைத் தொல்லியற் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திற்கும் வவுனியா மாவட்ட... [illegible] ங்கு பாதுகாப்பு திணைக்களத்திற்கும் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கும் ஆய்வுக்கு வேண்டிய அனுமதியையும் நிதியையும் வழங்கிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கும் துணைவேந்தருக்கும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம்.

இவ்வகழ்வாய்வின் போது கண்டுபிடிக்கப்பட்ட சின்னங்களைப் பார்வையிட பலர் விரும்பிய நிலையில் அவற்றை ஒன்றுசேரப் பார்வையிடுவதற்காக எதிர்வரும் 29.12.2016 வியாழக்கிழமை காலை 9:30 மணிக்கு துணைவேந்தரால் பல்கலைக்கழக தொல்லியல் அருங்காட்சியகத்தில் கட்டுக்கரைத் தொல்லியல் கண்காட்சி ஆரம்பித்து வைக்கப்படும்.



பேராசிரியர் ப. புஷ்பரட்ணம்
தொல்லியல் இணைப்பாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.




# முதியோர் இல்லத்திலிருந்து இராட்சத மலைப்பாம்பு மீட்பு



(கொழும்பு)

கதிர்காமத்தில் உள்ள முதியோர் இல்லம் ஒன்றில் இராட்சத மலைப்பாம்பு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இல்லத்தை நடத்திச் செல்லும் முகாமையாளரின் அறையில் இருந்து பாம்பு கண்டுபிடிக்கப்பட்டது.

ஒன்பது அடி நீளமான பாம்பு, அறையில் சுருண்டிருந்த நிலையில் முகாமையாளரால் அடையாளம் காணப்பட்டது.

வனவிலங்கு அதிகாரிகள் வருகை தருவதற்கு முன்னர் குறித்த இராட்சத மலைப்பாம்பை தொழிலாளர்களின் உதவியுடன் குறித்த முகாமையாளர் இரும்பு கூண்டினுள் அடைத்துள்ளார்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த வனவிலங்கு அதிகாரிகள், குறித்த இராட்சத பாம்பினை மீட்டு, பாதுகாப்பாக காட்டில் விட்டனர். (இ-10)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 100 | 50 | 60 | 40 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 90 | 120 | 110 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 140 | 100 | 100 | 120 | 100 | 160 | 100 |
| தக்காளி | 120 | 100 | 80 | 100 | 80 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 80 | 60 | 60 | 60 | 60 | 60 |
| கோவா | 30 | 80 | 20 | 30 | 40 | 60 | 25 |
| கரட் | 120 | 80 | 80 | 80-140 | 80 | 160 | 100 |
| பூசணி | 50 | 80 | 35 | 50 | 40 | 60 | 50 |
| புடோல் | 80 | 80 | 40 | 70 | 60 | 80 | 80 |
| வாழைக்காய் | 50 | 80 | 40 | 40 | 60 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 80 | 100 | 90 | 120 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 100 | 100 | 120 | 100 |
| பாகற்காய் | 300 | 400 | 200 | 300 | 250 | 300 | 300 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 70 | 80 | 60 | 120 | 100 |
| கருணைக்கிழங்கு | 50 | 100 | 50 | 50 | 60 | 80 | 50 |
| பயற்றங்காய் | 160 | 100 | 150 | 120 | 120 | 160 | 180 |
| லீக்ஸ் | 100 | 100 | 80 | 100 | 100 | 120 | 120 |
| பீற்றூட் | 60 | 100 | 50 | 60 | 60 | 100 | 70 |
| கறிமிளகாய் | 250 | 100 | 150 | 200 | 140 | 200 | 120 |
| முருங்கைக்காய் | 400 | — | 300 | — | 400 | 400 | — |
| போஞ்சி | 140 | 100 | 80 | 120 | 100 | 120 | 120 |
| கத்தரிதம்புள்ள | 20 | 20 | 20 | 40 | 30 | 40 | 40 |
| கீரை - 1பிடி | 30 | 40 | 30 | 30 | 30 | 30 | 40 |
| தேசிக்காய் | 300 | 250 | 250 | 300 | 300 | 500 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 50 | 20-40 | 50 | 30 | 40-50 | 50 |
| இராசவள்ளி | 300 | 300 | 150 | 250 | 250 | 250 | 400 |
| வெங்காயப்பூ | 250 | 200 | — | — | 240 | — | 200 |
| முள்ளங்கி | 80 | 100 | 40 | 60 | 40 | 80 | 60 |
| பொன்னாங்காணி | 35 | 60 | 15 | 30 | 30 | 40 | 30 |
| வல்லாரை | 10 | 20 | 15 | 20 | 15 | 20 | 25 |
| சுரப்பவா | 80 | 120 | 50 | 60 | 60 | 100 | 70 |

# இருட்டறையில் எனது வாழ்வு

## 25 வருடங்கள் சிறையிலிருக்கும் நளினியின் வலிகளைச் சுமந்த நெடுந்தொடர்..... 21

"என் கணவரும் சாந்தனும் செய்த குற்றத்தை ஒப்புக்கொள்வதற்காகவும் தாங்கள் தவறாக வழி நடத்தப்பட்டவர்கள் என்றும் ஈழப்போராட்டம் ஒரு பயங்கரவாதப் போராட்டம் என்பது உட்பட இன்னும் என்னென்னவோ எழுதப்பட்டிருக்கிறது. என் கணவருக்குப் படிக்கப் படிக்க ஒரே அதிர்ச்சி. நம்மவர்கள்தானே கொடுக்கிறார்கள் என நம்பி படித்துப் பார்க்காமல் கையொப்பம் இட்டிருந்தால் எவ்வளவு பெரிய இழுக்காக மாறியிருக்கும்"



...எனக்கெதிராக இப்படி எல்லாம் பிரசாரம் செய்யாமல் விட்டிருந்தால் ஒருவேளை என் விடுதலை 2008இற்கு முன்பே சாத்தியமாகி இருக்கலாம். அப்படி நடந்திருந்தால் இன்று மற்ற ஆறு பேரின் விடுதலைக்குமாக நான் உண்மையான குரலோடு பிரசாரம் செய்திருப்பேன். என் ஒருத்திக்கு எதிராக உருவாக்கப்படும் பிரசாரங்கள் மற்ற அறுவருக்கும் எதிராக வந்து நிற்கிறது என்ற உண்மையை ஒரு தரப்பு உணரானார்கள். இன்று நாங்கள் குல தெய்வமாக வரிந்து கொண்டிருக்கும் மகள் செங்கொடி தீக்குளித்தாள். மகள் செங்கொடியை இழந்த வேதனையில் இருந்தே மீளமுடியாமல் இருந்த எங்களுக்கு இப்படியான தம்பிகளின் உயிர்த்தியாக முனைப்பு உலுக்கி எடுத்தது.

இந்தக் களேபரத்துக்கு மத்தியில் ஒரு பச்சைத் துரோகமும் நடந்தது. என் கணவரையும் சாந்தனையும் வாழ்வின் கடைகாசம் கொடுக்கக்கூடாது என்பதில் திட்டமிட்டே தெளிவாகக் காய் நகர்த்தினார்கள். இவ்வளவு அவசரப்படுத்துவது ஏன் என யோசித்த என் கணவருக்கு ஏதோ சந்தேகம் வந்திருக்கிறது.

படித்துப் பார்க்காமல் கையொப்பம் போட முடியாது, முழுதும் வாசித்து விட்டு போடுகிறேன் என்று கூறி 25 பக்கங்கள் அடங்கிய அந்த மனுவை வாங்கி வந்து இரவெல்லாம் படித்துப்



மறுக்கிறது. இந்தப் போக்கு, ஒற்றுமையின்மை எல்லாம் எதிரிகளுக்குத்தான் வாய்ப்பாக முடியும் என்பதையும் அறிய மறுக்கிறார்கள். அதனால்தான், என் விரல்களைக் கொண்டு என் கண்களைக் குத்திக்கொள்ள வைத்து விட்டார்கள் என்று சொல்கிறேன்.

இன்னொரு விடயம். 2011இல் மூவரின் கருணை மனுவை ஜனாதிபதி நிராகரித்தார். உடனே அந்த மூவருக்கான தூக்குத்தண்டனை திகதி குறிக்கப்பட்டது. தமிழக மக்கள் கொந்தளித்தார்கள். ஆங்காங்கே போராட்டம் வெடித்தது. சட்டக்கல்லூரி, அறிவியல் மற்றும் கலைக் கல்லூரி மாணவர்கள் எல்லாம் போராடிசிக்காலத்துக்கும் மட்டுமல்ல, இறந்த பிறகும் அவர்களை பழிச்சொல்லுக்கு ஆளாக்கும் ஒரு துரோகம் அது. அந்தப் பரபரப்பு சூழ்நிலையில் ஜனாதிபதிக்கு அவசர அவசரமாக மீண்டும் ஒரு கருணை மனு அனுப்ப வேண்டும் என வேலை செய்தார்கள். அப்படியான மனு கணவர் இருக்கும் சிறைக்குள் சென்று மூன்று தினங்கள் ஆகியிருந்தது.

கடைசிநாள் அன்று மாலையில்தான், 'நாளை காலையில் இந்த மனு நீதிமன்றத்தில் சமர்ப்பித்தாக வேண்டும். உடனடியாக கையெழுத்தைப் போடுங்கள்' என்று கூறி சாந்தனிடமும் என் கணவரிடமும் வழங்கப்பட்டிருந்தது. படித்துப் பார்க்கக்கூட அவபார்த்திருக்கிறார். ஆங்கிலத்தில் தட்டச்சு செய்யப்பட்ட அந்த மனுவில், என் கணவரும் சாந்தனும் செய்த குற்றத்தை ஒப்புக் கொள்வதாகவும் தாங்கள் தவறாக வழிநடத்தப்பட்டவர்கள் என்றும், ஈழப்போராட்டம் ஒரு பயங்கரவாதப் போராட்டம் என்பது உட்பட இன்னும் என்னென்னவோ எழுதப்பட்டிருக்கிறது. என் கணவருக்குப் படிக்கப் படிக்க ஒரே அதிர்ச்சி.

நம்மவர்கள்தானே கொடுக்கிறார்கள் என நம்பி படித்துப் பார்க்காமல் கையொப்பம் இட்டிருந்தால் எவ்வளவு பெரிய இழுக்காக மாறியிருக்கும்.

(வலிகள் தொடரும்...)

# அதிகாரப் பகிர்வுக்கு முட்டுக்கட்டை போடும் அஸ்கிரிய, மல்வத்தை மகா நாயக்கர்கள்

(கொழும்பு)

**மாகாணங்களுக்கு அதிகாரங்களை பகிர்வது நாட்டுக்கு நல்லதல்ல என்றும், காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு பகர்ந்தளிககாமல் இருப்பதில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் அஸ்கிரிய, மல்வத்தை பீடங்களின் மகாநாயக்கரகள் பிரதமர் ரணிலிடம் வலியுறுத்தியுள்ளனர்.**

இதேவேளை புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தின் போது, இலங்கையின் இறைமை தேசிய பாதுகாப்பு உள்ளிட்ட விவகாரங்களில கவனம் செலுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த சனிக்கிழமை கண்டியில் அஸ்கிர்ய மற்றும் மல்வத்தை பீடங்களின் மகாநாயக்க தேரர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது, அஸ்கிரிய, மல்வத்தை பீடங்களின் மகாநாயக்க தேரர்களினால் தனித்தனியாக இரண்டு கடிதங்கள் பிரதமரிடம் கையளிக்கப்பட்டன.

அந்தக் கடிதங்களில், புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பான தமது கருத்துக்களையும் நாட்டின் இறைமை மற்றும் பௌத்த மதத்துக்கான முன்னுரிமை தொடர்பான விடயங்கள் குறித்த எதிர்பார்ப்புக்களையும் மகாநாயக்கர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

தேசிய கொள்கை தொடர்பான முடிவுகளை எடுக்கும் அதிகாரம் மத்திய அரசாங்கத்திடமே இருக்க வேண்டும் என்று மல்வத்தை மகாநாயக்கர் தெரிவித்தார்.

நாட்டின் இறைமையை மீறும் வகையில் சில உப குழுக்களால் முன்வைக்கப்பட்டுள்ள அரசியலமைப்புத் திருத்த யோசனைகள் குறித்து பரவும் வதந்திகள் குறித்து தெளிவுபடுத்தப்பட வேணடும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

காடுகளை அழித்து குடியேற்றங்களை மேற்கொள்வதை நிறுத்த வேண்டும் என்றும் வடக்கு, கிழக்கில் பௌத்த வழிபாட்டு இடங்களைப் பாதுகாக்க வேண்டும் என்றும் மல்வத்தை பீட மகாநாயக்கர் தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

அதேவேளை, இலங்கையின் ஒற்றையாட்சிக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய, 13ஆவது திருத்தச்சட்டத்தின் சில பகுதிகளில் திருத்தங்களை மேற்கொள்வதில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் வலியுறுத்தியுள்ளார்.

மாகாணங்களுக்கு அதிகாரங்களை அளிப்பது நாட்டுக்கு நல்லதல்ல என்றும், காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு பகிர்ந்தளிக்காமல் இருப்பதில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். (இ-10)

# அமைச்சர்களுக்கு ஒருவித புதிய நோய் ஏற்பட்டுள்ளது

## ராவணா பலய கண்டுபிடிப்பு



அரசாங்கத்திலுள்ள அமைச்சர்களுக்கு ஒரே விதமாக வசனம் பேச முடியாத ஒரு நோய் ஏற்பட்டுள்ளதாக ராவணா பலய அமைப்பின் செயலாளர் இத்தேகந்தே சத்தாதிஸ்ஸ தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே தேரர் இவ்வாறு தெரிவித்தார்.

அம்பாந்தோட்டையில் சீனாவுக்கு கொடுக்கப் போகும் காணியின் அளவு குறித்து ஒவ்வொரு அமைச்சரும் ஒவ்வொரு விதமாக கருத்துத் தெரிவிக்கின்றனர்.

அமைச்சரவையில் உள்ள அமைச்சர்களுக்காகவாவது ஒரே கருத்து கிடையாது, அவர்கள் எவ்வளவு காணியைக் கொடுத்தாலும் பரவாயில்லை.

எல்லோரும் ஒரே கணக்கை சரியாக கூற வேணடும் எனவும் தேரர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# ஈழத்தமிழர்களில் இருவரின் நிலை கவலைக்கிடம் நான்காவது நாளாக உண்ணாவிரதப் போராட்டம்

திருச்சி விசேட முகாமில் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டு வரும் ஈழத் தமிழர்களில் இருவரின் நிலை கவலைக்கிடமாக மாறியுள்ளது.

ஈழத் தமிழர்கள் 4 ஆவது நாளாக உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்ற நிலையில், மேலும் 2 ஈழத் தமிழர்கள் தங்களுடைய உண்ணாவிரதப் போராட்டத்தை நேற்று ஆரம்பித்துள்ளனர்.

இந்தியாவிற்கு சுற்றுலா விசாவில் சென்ற போது கைது செய்யப்பட்ட ஈழத் தமிழர்களும் அகதி முகாமிலுள்ள ஈழத்தமிழர்களும் தம்மை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி நேற்று நான்காவது நாளாக திருச்சி விசேட முகாமில உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டனர்.

இவர்களில் நடனசபாபதி பிரபாகரன் மற்றும் நாகராஜன் குணசீலன் ஆகிய இருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த இருவரையும் பொலிஸார் வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல முற்பட்ட போது, தங்களுடைய கோரிக்கை நிறைவேறும் வரை வைத்தியசாலைக்கு செல்லமாட்டோம் என பாதிக்கப்பட்டவர்கள் மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, ஈழத்தமிழர்கள் 4 ஆவது நாளாக உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்ற நிலையில், நமசிவாயம் தயாநந்தன், கறுப்பண்ணத்தேவர் அருளின்பத்தேவர் ஆகிய இருவரும் நேற்று உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இந்தியாவிற்கு ஆலய தரிசனத்திற்காக சென்றிருந்த போது, விடுதியொன்றில் தங்கியிருந்த தம்மை கியூ பிரிவு பொலிஸார் கைது செய்ததாகவும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவித்தனர்.

விசாரணையொன்று உளளதாக தெரிவித்து கியூ பிரிவு பொலிஸார் தம்மை அழைத்துச் சென்றதாகவும் தம் மீது பொய்யான குற்றச்சாட்டுக்களை அவர்கள் பதிவு செய்துள்ளதாகவும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஈழத்தமிழர்கள் தெரிவித்தனர்.

இவர்களில் மூவர் நீண்ட நாட்களுக்கு முன்னர் இந்தியாவிற்கு அகதிகளாக சென்றவர்கள் எனவும் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா செல்ல முற்பட்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் அவர்களுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கும் ஈழத் தமிழர்கள், தாம் முன்வைத்த கோரிக்கை நிறைவேற்றப்படும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிடப் போவதில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

தம்மை விடுதலை செய்து தாயகத்துக்கு மீள அனுப்புமாறும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

நடனசபாபதி பிரபாகரன், சுதாகரன் சுதர்சன், பேரின்பநாயகம் கோபிநாத், கிருஷ்ணபிள்ளை தயாகரன், உமாகாந்தன் குருவிந்தன், ஜெகதீபன் தர்ஷன், கந்தசாமி சத்தியசீலன், சகாயநாதன் றொபின்பிரசாத், சிவசுப்ரமணியம் காந்தரூபன், நாகராஜன் குணசீலன், ரகுநாதன் யோககுமார் மற்றும் அருளின்பத்தேவர் ஆகியோரே இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

# இன்று ஒரு தகவல்

## ஏன் செய்யக் கூடாது?

என் நண்பருடைய நண்பரின் எதிர் வீட்டுக்காரர் என்னை ஓர் உதவி விடயமாக அணுகினார். என்னைப் பொறுத்தவரை எளிதில் செய்து தரக் கூடிய சாதாரண அறிமுக உதவி அது.

பக்கத்திலிருந்த என்னுடைய உறவினர் ஒருவர். என்னது? நண்பருக்கு... நண்பரோட... எதிர் வீட்டுக்காரரா?...என்று இழுத்துக் கேலியுடன் சொல்லி அவருக்கா உதவப் போகிறாய்? என்று குறுக்கே விழுந்து படுத்துக் கொள்ளப்பார்த்தார்.

நான் இதமாக எடுத்துச் சொன்னேன். இந்த உதவியைச் செய்வதன் மூலம் நான் காசு பணம் எதையும் இழக்கப் போவதில்லை. வெறும் வாய் உதவி தான். அவர் என்னுடைய வட்டத்திலிருந்து இரண்டு வட்டம் தள்ளியிருக்கலாம். ஆனால் மனிதருக்கு மனிதர் செய்யக் கூடிய சாதாரண உதவி இது. இதற்கு மாமனாகவோ மச்சானாகவோ தான் இருக்க வேண்டும் என்பது இல்லை என்றேன்.

ஒருவருடைய சித்தப்பா மகனின் மைத்துனரின் மைத்துனர், விமான நிலையத்தில் இறங்கிக் கொள்கிறேன்; ரைவருடன் வாகனம் அனுப்ப முடியுமா? என்று ஒருவரிடம் கேட்டார். வாகன உரிமையாளரும் வாகனத்தை அனுப்பினார். வீட்டில் தாய், தாரம் எல்லாரும் வசை பாடினார்கள். சித்தப்பா மகனோட...என்று இழுத்து ரொம்ப நெருங்கிய சொந்தம்னு நினைச்சு வண்டியை ஓசி குடுத்தியோ? எனக் காதுக்கோர் ஆளாய் நின்று கொண்டு கத்தினார்கள்.

சொந்தம்னு பார்த்தா ரொம்பவும் தூரத்துச் சொந்தம் தான். அல்லது சொந்தமே இல்லைன்னு கூட வச்சுக்குங்க. அதென்ன கணக்கு? அறிமுகன்னு இருந்தாத்தான் உதவணுமா? அறிமுகன்னு இருந்தால் போதாதா? ஏன்- அந்த ஆளை ஒரு நண்பன்னு எடுத்துக்கக் கூடாதா? அறிமுகம் அதிகம் இல்லாத நண்பனுக்கு இவ்வளவு பெரிய உதவியா என்பீங்க! நல்ல அறிமுகங்கிறது இப்படிப்பட்ட உதவிகளால் தானே வளர முடியும்? என்று தாக்கத்துடன் வாதிட தாயும், தாரமும் கப் சிப்!

உதவி செய்வதற்கு நெருங்கிய நண்பர்களாகவும் நெருங்கிய உறவினர்களாகவும்தான் இருக்க வேண்டும் என்பதில்லை. நம்மைப் பாதிக்காத பட்சத்தில் அறிமுகம் இல்லாதவர்களுக்கே உதவலாம். தவறில்லை. தெரிந்தவர்களே கூட நம்மிடம் உதவி கேட்டு வருகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அவர்களுக்கு அவசியம் உதவ வேண்டும் என்கிற கட்டாயம் ஏதும் நமக்கு இல்லாமலிருக்கலாம். உதவி செய்யத் தான் வேண்டும் என்பதற்கும் நியாயங்கள் ஏதும் இல்லாமலிருக்கலாம். இவரால் நமக்கு என்ன ஆகப் போகிறது என்கிற வழியில் கூடச் சிலர் சிந்திக்கலாம்.

இந்தக் கோணத்தில் பார்ப்பதை நிறுத்திக் கொண்டு இவருக்கு நாம் ஏன் செய்யக் கூடாது? என்கிற கோணத்தில் சிந்திக்க வேண்டும்.

இவருக்கு உதவவே கூடாது என நாம் முடிவுக்கு வருவதனால் அதற்கு நியாயமான காரணங்கள் நிறைய இருக்க வேண்டும். ஆனால் உதவுவதற்கும் பெரிய காரணங்கள் ஏதும் இருக்க வேண்டும் என்கிற அவசியமில்லை.

நம்மைப் பெரிதும் பாதித்து விடாத உதவிகளைச் செய்து நம் நட்பு மற்றும் உறவு வட்டத்தை விரிவுபடுத்திக் கொள்வதன் மூலம்தான் புதிய அறிமுகங்கள் ஏற்படும். அந்த அறிமுகங்கள் நம்மை நிச்சயம் உயர்த்தப் போகின்றன.

**லேனா தமிழ்வாணன்**

# சிரியாவில் உள்நாட்டுப் போரை முடிவுக்கு கொண்டு வாருங்கள்

## போப் பிரான்ஸிஸ் வலியுறுத்து

(வாடிகன்சிட்டி)

**சிரியாவில் கடந்த ஆறு ஆண்டுகளாக நடந்து வரும உள்நாட்டு போரை முடிவுக்கு கொண்டு வாருங்கள் என போப் பிரான்சிஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார.**

வாடிகன் நகரில் உள்ள செயின்பீட்டர் சதுக்கத்தில் போப் ஆண்டவர் பிரான்சிஸ் நேற்று முன்தினம் கிறிஸ்மஸ் சிறப்பு பிரார்த்தனை நடத்தினார். அதில் இலட்சக்கணக்கானோர் கலந்து கொண்டனர. அவர்கள் மத்தியில் போப ஆண்டவர் பிரான்சிஸ் உரை நிகழ்த்தினார். அப்போது அவர் கூறியதாவது,

சிரியாவில் கடந்த 5 ஆண்டுகளாக உள்நாட்டு போர் நடந்து வருகிறது. சர்வதேச நாடுகள் தலையிட்டு பேச்வார்த்தை மூலம் போரை முடிவுக்கு கொண்டு வர வேண்டும்.

இஸ்ரேலியர்களும், பாலஸ்தீனியர்களும் ஒன்றிணைந்து புதிய வரலாறு எழுத வேண்டும். பாலஸ்தீனத்தில் இஸ்ரேல் கையகப்படுத்திய பகுதியில் குடியிருப்புகள் அமைத்து இருப்பதற்கு ஐ.நா. கண்டனம் தெரிவித்துள்ளதால் ஏற்பட்டுள்ள பதற்றத்தை தணிக்க வேண்டும்.

உலக அளவில் பல நாடுகள் மற்றும் நகரங்களில் தீவிரவாதம் தலையெடுத்துள்ளது. அங்கு வாழும் மக்கள் மனதில் அச்சமும், மரண பயமும் விதைக்கப்பட்டுள்ளது. அது கண்டிக்கத்தக்கது என்றார்.

ஜேர்மன் தலைநகர் பெர்லினில் லொறி ஏற்றி பலர் கொலலப்பட்டனர். அதைத் தொடர்ந்து வாடிகனில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. ரோம் நகருக்குள் வான்கள், லொறிகள் நுழைய தடை விதிக்கப்பட்டிருந்தது. வாடிகனை சுற்றி இராணுவ ஜீப்கள் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தன.(இ-10)



## ஜேர்மனியில் 50000 மக்கள் வெளியேற்றம்

### இரண்டாம் உலகப் போரில் வெடிக்காத குண்டு செயலிழப்பு



ஜேர்மனியில் 50 ஆயிரம் மக்கள் வெளியேற்றப்பட்டு, இரண்டாம் உலகப்போரில் வெடிக்காத குண்டுகள் செயல் இழப்பு செய்யப்பட்டது.

இரண்டாம் உலகப் போரின் போது கடந்த 1944ஆம் ஆண்டில் ஜேர்மனி மீது இங்கிலாந்து வெடிகுண்டு வீசி தாக்கியது. அதில் வெடிக்காத ஒரு மிகப்பெரிய வெடிகுண்டு ஜேர்மனியின் ஆக்ஸ்பர்க் நகரில் கட்டடம் கட்டுவதற்கான பணி நடைபெற்ற போது கடந்த வாரம் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த வெடிகுண்டு ஒரு தொன்னுக்கும் அதிகமான எடை கொண்டதாக தென்பட்டது. இதனையடுத்து இதனை செயல் இழக்க செய்யும் பணி தொடங்கியது. வெடிகுண்டை செயல் இழக்க செய்யும் பணியை கிறிஸ்மஸ் தினத்தில் முன்னெடுக்க முடிவு செய்யப்பட்டது.

விடுமுறை நாளான அன்று மக்கள் நடமாட்டம் குறைவாக இருக்கும் என்பதால் அன்றைய தினம் தேர்வு செய்யப்பட்டது' என்று அதிகாரிகள் தரப்பு தெரிவித்து' உள்ளது. எனவே, கிறிஸ்மஸ் நாளில் ஆக்ஸ்பர்க் நகரில் வசிக்கும் 50 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் அங்கிருந்து காலை வெளியேற்றப்பட்டனர். அவர்கள் ஆக்ஸ்பர்க் நகருக்கு வெளியே புறநகரில் உள்ள பாடசாலைகள் மற்றும் விளையாட்டு மையங்களில் பாதுகாப்பாக தங்க வைக்கப் பட்டனர். அதன் பின்னர் தலா 1.8 தொன் எடையுள்ள வெடிக்காத வெடிகுண்டை பாதுகாப்பு படை அதிகாரிகள் வெற்றிகரமாக செயலிழக்க செய்தனர்.

ஜேர்மனியில் இரண்டாம் உலகப்போரில் பயன்படுத்தப்பட்ட வெடிகுண்டுகள் கண்டுபிடிக்கப்படுவது ஒன்றும் புதியது கிடையாது. கடந்த 1944ஆம் ஆண்டு 25-26 ஆம் திகதி களில வரலாற்று பழைமை வாய்ந்த ஆக்ஸ்பர்க் நகரில் அமெரிக்கா மற்றும் பிரிட்டன் இராணுவம் சரமாரியாக வெடிகுண்டுகளை வீசயது. இதனால் நகரம் பெரும் சீரழிவை சந்தித்தது.(இ-10)

## சிலியில் பயங்கர நிலநடுக்கம்

### சுனாமி எச்சரிக்கையால் மக்கள் பீதி





சிலி நாட்டில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இது ரிக்டர் அளவு கோலில் 7.7 ஆக பதிவா கியுள்ளது. இந்த பயங்கர நிலநடுக்கத்தை தொடர்ந்து சுனாமி எச்சரிக்கையும் விடுக்கப்பட்டதால் மக்கள் பீதி அடைந்துள்ளனர.

தெற்கு சிலியில் உள்ள பியூர்டோ மான்ட்டுக்கு தென் மேற்கே 1240 மைல் தூரத்தில் இந்த நிலநடுக்கத்தின் மையம் கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலநடுக்கத்தின் மையம் இருந்த இந்த பகுதிக்கு அருகில் உள்ள குல்லான் என்ற நகரம் தான் பெரும் பாதிப்பைச் சந்தித்துள்ளதாக தெரிகிறது.

பூமிக்குக் கீழே 15 கிலோ மீற்றர் ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டதாகவும் அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சுனாமி எச்சரிக்கை விடுகப்பட்டதால் லாஸ்லாகோஸ் பகுதி முழுவதும் கடலோரத்தில் வசித்து வரும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கம் காரணமாக 3 மீற்றர் அளவிலான சுனாமி அலைகள் எழும்பக்கூடும் என்று பசுபிக் சுனாமி எச்சரிக்கை மையம் தெரிவித்துள்ளது. (இ-10)

## ட்ரம்ப் அறக்கட்டளையைக் கலைக்கப் போவதாக அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி திடீர் அறிவிப்பு



முறைகேடு புகார்களை அடுத்து விசாரணை நடத்தப்பட்டு வரும்நிலையில் தனது பெயரிலான அறக்கட்டளையை கலைக்கப் போவதாக அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள குடியரசு கட்சி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்ப், எதிர்வரும் ஜனவரி மாதம் 20 ஆம திகதி பதவி ஏற்கவுள்ளார்.

பெரும் கோடீஸ்வரரான இவர் 'டொனால்ட் ஜே. ட்ரம்ப் பவுண்டேஷன்' என்ற பெயரில் அறக்கட்டளை ஒன்றை நடத்தி வருகிறார்.

உள்நாட்டு வருவாய் சட்டத்தை மீறிய வகையிலும், வரி ஏய்ப்பு செய்யும் நோக்கத்திலும் சில முறைகேடுகளில் இந்த அறக்கட்டளை ஈடுபட்டதாக 'வொஷிங்டன் போஸ்ட்' என்ற இணையத்தளம் ஆதாரத்துடன் தகவல்களை வெளியிட்டது. புளோரிடா மாநில அட்டர்னி ஜெனரல் பாம் பான்ட்டி என்பவருடன் தொடர்புடைய ஒரு குழுவுக்கு இந்த அறக்கட்டளை நன்கொடைகள் தந்ததாகவும் சர்ச்சை எழுந்துள்ளது.

இந்தப் புகார்கள் தொடர்பாக நியூயோர்க் அட்டர்னி ஜெனரலின் தலைமையில் விசாரணை நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், தனது பெயரில் இயங்கிவரும் அறக்கட்டளையை கலைத்து விடப்போவதாக அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார். (இ)

## சுவிஸில் இலங்கை தமிழருக்கு 15ஆண்டுகள் சிறைத்தண்டனை

சுவிட்சர்லாந்தில் காதலியை கொலை செய்த இலங்கையர் ஒருவருக்கு 15 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து அந்நாட்டு நீதிமன்றம் தீர்ப்பளிதுள்ளது. கடந்த 2000 ஆம ஆண்டு இடம்பெற்ற கொலைச சம்பவம் தொடர்பிலேயே குறித்த நபருக்கு சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

23 வயதான தன் காதலியை கொடூரமான முறையில் கொலை செய்த நிலையில், சுவிட்சர்லாந்தில் இருந்து வெளியேறிய குறித்த சந்தேகநபர் போலி ஆவணங்களை தயார் செய்து நியூசிலாந்தில் குடியேறியுள்ளார்.

பின்னர் 2004ஆம் ஆண்டு அந்நாட்டு குடியுரிமையை பெற்றுக்கொண்டு. Auckland நகரில் குடியேறிய அவர வேறு ஒரு திருமணம் செய்து கொண்டு வாழ்ந்து வந்துள்ளார்.

எனினும், கடந்த 2014 ஆம் ஆண்டு கொலை செய்யப்பட்ட காதலியின் உடலில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மரபணு மூலம் குறித்த தமிழர் தான் கொலையாளி என தெரியவந்துள்ளது.

இதனையடுத்து 2015ஆம் ஆண்டு நியூசிலாந்து அரசின் அனுமதியுடன் சுவிட்சர்லாந்துக்கு அழைத்துவரப்பட்ட சந்தேகநபரிடம் விசாரணைகள் இடம்பெற்று வந்தன.

இந்நிலையில் அவர் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்ட நிலையில், 15 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து அந்நாட்டு நீதிமன்றம் கடந்த வெள்ளிக் கிழமை தீர்ப்பளித்துள்ளதாக அந்நாட்டு பிரதான செய்தித் தாள் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. (இ)

# போயஸ் கார்டனில் வருமான வரித்துறையினர் இரண்டு அறைகளுக்கு சீல்! பதற்றத்தில் சசிகலா

(டில்லி)

மறைந்த முன்னாள் தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் போயஸ் கார்டன் பங்களாவில் வருமான வரித்துறையினர் சோதனையின் முன்னோட்டமாக, அங்குள்ள இரண்டு அறைகளுக்கு அதிரடியாக சீல் வைத்துள்ளதாக பரபரப்பு தகவல் வெளியாகியுள்ளது.

அண்மைகாலமாகவே வருமானவரித் துறையினர் தமிழகத்தில் உள்ள முக்கிய அமைச்சர்கள் மற்றும் பலருடைய வீடுகள், அலுவலகங்களில் அதிரடி சோதனையில் ஈடுபட்டனர்.

இதில் தலைமைச் செயலாளர் ராமமோகன் ராவ் அடங்குவார். இதனால் அவர எந்த நேரமும் கைது செய்யப்படலாம் என்று கூறப்படுகிறது.

இந்நிலையில் முக்கிய தலைவர்களின் வீடுகள் மற்றும் அலுவலகங்களில் சோதனை நடத்துவதற்காக 90 பேர்கள்கொண்ட குழுவை வருமானவரித் துறையினர் களத்தில் இறக்கியுள்ளதாகவும் அதுமட்டுமன்றி துணை இராணுவமும் குவிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகின.

இதைத் தொடர்ந்து கடந்த 24 ஆம் திகதி காலை ஜெயலலிதாவுக்கு சொந்தமானதும், தற்போது சசிகலா வசித்து வரும் போயஸ் கார்டன் பங்களாவுக்குள் அதிரடியாக வருமான வரித்துறையினர் உள்ளே சென்றதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

அங்கு சென்ற அவர்கள் குறிப்பிட்ட 2 அறைகளைப் பாரவையிட்டதாகவும், அதன பின்னர் திடீரென்று யாரும் திறக்கக்கூடாது என்பதற்காக சீல் வைத்துவிட்டு சென்றுவிட்டதாகவும் கூறப்படுகிறது.

சீல் வைக்கப்பட்ட அந்த அறையில் அதிமுக கட்சி தொடர்பான ஆவணங்கள் அல்லது அமைச்சர்கள் தொடர்பான பைல்கள் இருக்கலாம் என அதிமுக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதனால் சசிகலா மற்றும் அவரது மன்னார்குடி குடும்பத்தினர் அதிர்ச்சியில் இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ-10)

## மோடி அரசின் நாணயத்தாள் நீக்க நடவடிக்கைக்கு எதிராக

# சோனியா காந்தி தலைமையில் 16 கட்சிகள் இன்று ஆலோசனை



மத்திய அரசின் நாணயத்தாள் நீக்க நடவடிக்கை தொடர்பாக காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி தலைமையில் 16 கட்சிகள் டில்லியில் இன்று முக்கிய ஆலோசனை நடத்துகின்றன.

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரின்போது பண மதிப்பு நடவடிக்கை தொடர்பாக எதிர்க்கட்சிகள் ஓரணியில் இணைந்து மத்திய அரசை எதிர்த்தன. இதனால் நாடாளுமன்றம் முடங்கியது.

இதைத்தொடர்ந்து அடுத்த கட்ட போராட்டம் தொடர்பாக ஆலோசிக்க காங்கிரஸ், சமாஜ் வாதி, பகுஜன் சமாஜ், கம்யூனிஸ்ட் உட்பட 16 கட்சிகளின் முக்கிய ஆலோசனைக் கூட்டம் டில்லியில் இன்று நடைபெறுகிறது.

இந்த கூட்டத்துக்கு காங்கிரஸ் தலைவர் சோனியா தலைமை தாங்குகிறார். இதில் பண மதிப்பு நீக்க நடவடிக்கைக்கு எதிராக நாடு தழுவிய போராட்டங்களை நடத்துவது தொடர்பாக முடிவு எடுக்கப்படும் என்று தெரிகிறது.

ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் டில்லியில் முகாமிட்டு வருகின்றனர். மேற்கு வங்க முதல்வரும் திரிணாமூல் காங்கிரஸ் தலைவருமான மம்தா பானர்ஜி டில்லி புறப்படுவார் என்று அந்த கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அவர் டில்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவாலை தனிப்பட்ட முறையில் சந்தித்துப் பேசுவார் என்றும் தெரியவருகிறது. (இ-10)

# ராஜீவ் காந்தி கொலை வழக்கு; மோடிக்கு முக்கிய சாட்சி கடிதம்



ராஜீவ்காந்தி கொலையின் பின்னணி குறித்து விசாரித்து அறிய அமைக்கப்பட்ட ஜெயின் கமிஷன் முன்னிலையில் ஆஜரான முக்கிய சாட்சி ஒருவர் பிரதமர் நரேந்திர மோடிக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்ட பேரறிவாளன், 'சென்னை தடா நீதிமன்ற உத்தரவிட்டபடி, ராஜீவ கொலையின் சதி பற்றி சி.பி.ஐயின் சிறப்பு புலனாய்வு குழுவோ, பலதுறை கண்காணிப்பு முகாமையோ விசாரணை நடத்தவில்லை என கூறி உச்ச நீதிமன்றில் மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவின்மீது பதில அளிக்குமாறு மத்திய அரசுக்கும் சி.பி.ஐக்கும் நோட்டீஸ் அனுப்புமாறு உச்ச நீதிமன்றம் கடந்த 14ஆம் திகதி உத்தரவிட்டது.

இந்த நிலையில், ராஜீவ் காந்தி கொலையின் பின்னணி குறித்து விசாரித்து அறிய அமைக்கப்பட்ட ஜெயின கமிஷன் முன்னிலையில் ஆஜரான முக்கிய சாட்சியான, ரமேஷ் தலால் என்பவர் பிரதமர் நரேந்திர மோடிக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார்.

அதில் அவர், நான் ஏப்ரல் 19ஆம் திகதியிட்டு எழுதிய கடிதத்தின் உள்ளடக்கத்தினை கருத்தில் கொண்டு, சி.பி.ஐ.ஒரு கூடுதல் குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்ய காத்திருக்கிறது.

இதில், சி.பி.ஐ. பதில் அளிக்க உச்ச நீதிமன்று கோரி உள்ளது. இந்த வழக்கில் தர்க்கரீதியிலான முடிவு ஏற்படும் வகையில், விசாரணை நேர்மையாகவும், சுதந்திரமாகவும் நடைபெறுவதை உறுதி செய்வதில், நீங்கள் தனிப்பட்ட முறையில் தலையிட வேண்டும் என கூறியுள்ளார். ரமேஷ்தலால், ஏப்ரல் 19 ஆம் திகதி மத்திய உள்துறை செயலாளர் ராஜீவ் மகிரிஷிக்கும், சி.பி.ஐ. இயக்குநர் அனில் சின் காவுக்கும் ஒரு கடிதம் எழுதினார்.

அதில் அவர் ராஜீவ் கொலை வழக்கு விசாரணையில் சில குறிப்பிட்ட குறைபாடுகளை சுட்டிக்காட்டியதுடன், அதன் அடிப்படையில் விசாரணை நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

# சசிகலாவை வெளியே துரத்த வேண்டும் டிராபிக் ராமசாமி எடுத்த அதிரடி முடிவு



சசிகலாவை எதிர்த்து சமூக ஆர்வலரான டிராபிக் ராமசாமி சாகும் வரை உண்ணாவிரப் போராட்டத்தை தொடங்கியுள்ளார். சமூக ஆர்வலரான டிரா பிக் ராமசாமி தமிழக முதல்வராக இருந்த ஜெயலலிதாவை பல விடயங்களில் எதிர்த்தவர்.

அவருக்கு எதிராகவே ஆர். கே. நகரில் போட்டியிட்டவர். அவருக்கு வைக்கப்பட்ட பனர்களை கிழித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்.

மேலும், பல பொது நல வழக்குகளை போட்டு உயர் நீதிமன்றத்தில் தொடர்ந்து போராடி வருபவர். அண்மையில் அவர் உடல் நலமில்லாமல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அந்த நிலையிலேயே அவர் சசிகலாவிற்கு எதிராக ஒரு வழக்கையும் நீதிமன்றத்தில் தொடர்ந்திருந்தார்.


இந்நிலையில் வீட்டிற்கு திரும்பிவிட்ட அவர், சசிகலாவிற்கு எதிராக சாகும் வரை உண்ணாவிரதத்தை மேற்கொண்டுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், தமிழகத்தின் முன்னாள் தலைமை செயலாளர் ராமமோகன் ராவ் வீட்டில் வருமானவரிச் சோதனை நடைபெற்றுள்ளது. இதே போன்று ஜெயலலிதா வீட்டிலும் சோதனை நடத்தி சீல் வைத்து சசிகலாவை வெளியே துரத்த வேண்டும்.

இந்தக் கோரிக்கையை முன்வைத்துத்தான் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்க தொடங்கி இருக்கிறேன் என்று தெரிவித்தார். (இ-10)

# அழிந்து போனதாக கருதப்பட்ட வானர மனிதர்கள் அமேசனில்





பிரேசில் நாட்டின் அமேசன் வனப் பகுதியில் ஆய்வுக்கு உட்படுத்தப்படாத பகுதி ஒன்றில் இதுவரை அடையாளம் காணப்படாத பழங்குடியினர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

பிரதேசத்தில் விமானம் மூலம் கண்காணிப்பில் ஈடுபட சென்றிருந்த விஞ்ஞானிகள் குழு ஹெலிகொப்டரில் இருந்தவாறு இந்த பழங்குடியினரை கண்காணித்துள்ளனர்.

தற்போதைய நவநாகரீக மனிதனின் கலாசாரத்தை அறியாது, ஆடை அணியாது 20 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த மனிதரகளை போல் இவர்கள் காணப்படுவதாக ஆய்வுடன் தொடர்புடைய புகைப்படப் பிடிப்பாளர் ரிக்கார்டோ ஸ்டக்கேர்ட் தெரிவித்துள்ளார். இந்த பழங்குடி மக்களில் சிலர் மனிதர்களுக்கு இணையாக இருப்பதுடன் மேலும் சிலர் வானர மனிதனுக்கு இணையானவர்களாக காணப்படுகின்றனர் என ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

தென் அமெரிக்க கண்டத்தில் உள்ள பல நாடுகளுடன் இணைந்து காணப்படும் அமேசன்வனமானது இலங்கையை போன்று 100 மடங்கு பரப்பளவை கொண்ட மிகப் பெரிய வனமாகும். இந்த வனத்தில் 10 வீதத்திற்கும் குறைவான பகுதிகளே ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. காட்டின் மற்றைய பகுதிகளில் உலகில் அழிந்து போனதாக கருதப்படும் பிராக் மனித இனத்தவர்கள் வாழக்கூடும் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

ஆய்வை மேற்கொண்ட குழுவினர் பயணித்த ஹெலிகொப்டர் மீது பண்டைய கால ஆயுதங்களை பயன்படுத்தியே பழங்குடியினர் தாக்குதல் நடத்தியுள்ளனர். (இ-10)

# மைசூர் முதல் '81 போயஸ் கார்டன்' வரை...

# ஜெயலலிதா டயரி குறிப்புக்கள்




"அன்பும், தனிமையும் ஒருவரை வதைக்கும் போது... ஆன்மாவின் வெற்



றிடத்தை அகங்காரம் நிரப்பும்." - இது கேரளாவில் நான் சந்தித்த பழங்குடி சொல்லியது. "நான் வாழ்க்கையில் என்றுமே நிபந்தனையற்ற அன்பை உணர்ந்ததே இல்லை" - இது ஜெயலலிதா சில ஆண்டுகளுக்கு முன் அளித்த பேட்டியில் கூறியது. இந்த இரண்டு வரிகளையும் பொருத்திப் பாருங்கள்... ஏன் ஜெயலலிதா, " என் தலைமையிலான, என்னால், நான்..." என்ற வாசகங்களை தன் பேச்சில் அதிகம் பயன்படுத்தி இருக்கிறார் என்று புரியும். இந்த அகங்காரம், அவர் அரசியலுக்கு வந்த பிறகு, அதிகாரத்தின் சுவையைக் கண்ட பிறகு உண்டானது இல்லை. அவர் நடிகையாக இருந்தபோதும் இவ்வாறாகத்தான் இருந்திருக்கிறார்.

எழுபதுகளில் ஒரு வார இதழ், திரைப்பட பிரபலங்களை தாழ்வாக பறக்கும் சிறு ரக விமானத்தில் அழைத்துச் சென்று, அவர்களின் அனுபவங்களைத் தொடராக எழுதத் திட்டமிட்டது. அவர்கள் முதலில் ஜெயலலிதாவை அணுகி இருக்கிறார்கள். ஜெயலலிதாவும் சந்தோஷமாக சம்மதித்து இருக்கிறார். ஆனால், கடைசி நேரத்தில் அவரால் வர இயலாமல் போய் விட்டது. அதனால் நடிகர் சுருளியையும், மனோரமாவையும் அழைத்துச் சென்று, முதல் வாரத் தொடரை எழுதி இருக்கிறார்கள். இரண்டாம் வாரம்தான் ஜெயலலிதா சென்றிருக்கிறார். ஆனால், அவருக்கு முதல்வாரத்தில் இன்னொருவரை அழைத்து சென்றது தெரியாது. பின்னர், இதழ் வந்தவுடன் கோபமாக , அந்த பத்திரிக்கையாளரிடம் "முதல் பயணம் என்னுடையதாகத் தான் இருக்க வேண்டும் என்று நினைத்தேன். ஆனால், முதல் பகுதியில் வேறொருவரை வைத்து எழுதி இருக்கிறீர்களே... இதை ஏன் என்னிடம் சொல்லவில்லை..?" என்று கோபமாக கூறியிருக்கிறார்.

இதை மேலோட்டமாக பார்த்தால், இது சாதாரணமானது தானே...? எப்போதும் பிரபலங்களிடம் இருக்கும் ஈகோ தானே என்று தோன்றும். ஆனால, ஜெயலலிதா எந்த ஒரு சிறு விடயத்திலும் ஈகோவுடன் இருந்ததற்கு, அன்புக்காக ஏங்கிய அவரின் தனிமையும் கூட காரணமாக இருந்திருக்கலாம்...!

**நிலைகுலைந்த ஜெ...!**

இப்போது அசாத்திய முடிவுகளை எடுக்கும் ஜெயலலிதா... திரைப்படத்தில் நடிக்கத் தொடங்கியபோது, ஒரு புடைவையைத் தேர்ந்தெடுக்கக் கூட அவ்வளவு திணறியிருக்கிறார். இதை அவரே சொல்லியிருக்கிறார். "எந்தப் பொது நிகழ்ச்சியிலும் கலந்து கொள்வதற்குப் புறப்பட என்ணும் நான், எந்தப் புடைவையைக் கட்டிக் கொள்ளலாம் என்று அலமாரியில் உள்ள அத்தனை புடைவைகளையும் வைத்துக் கொண்டு பரிதவிப்பேன். 'அம்மு, ஏன் இப்படி உட்கார்ந்து கொண்டிருக்கிறாய்...? ஒரு சிறு காரியத்தில் கூடக் கவனம் செலுத்த முடியாத நீ, எப்படி பெரிய காரியங்களைக் கவனிக்கப் போகிறாய்' என்று செல்லமாகக் கடிந்து கொண்டு, அவரே ஒரு புடவையை எடுத்து தருவார். ஆம், அவருக்கு எல்லாம் அம்மாவாகத்தான் இருந்திருக்கிறார்.

கொஞ்சம் கற்பனை செய்து பாருங்கள். உங்கள் வாழ்க்கையில் எல்லா முடிவுகளையும் இன்னொருவர் எடுக்கிறார்... நீங்கள் அணியும் ஆடையைக் கூட உங்களால் தேர்வு செய்ய முடியவில்லை. அந்த சமயத்தில் உங்களுக்கான முடிவுகளை எடுப்பவர் இறந்து போகிறார். உங்களுக்கு எப்படி இருக்கும்? நிலைகுலைந்துதானே போவீர்கள்... ஆம், ஜெயலலிதா தன்னுடைய 23ஆவது வயதில், தன் அம்மாவை இழந்தவுடன்வெறுமை அவரை கவ்வியது... திசைவழி தெரியாமல் தான் நின்றார்...!

"அம்மா தான் எனக்கு எல்லாம். அவர் தான் எனக்காக எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டார்.



எனக்கு அந்த சமயத்தில் எதுவுமே தெரியாது... என் வங்கிக் கணக்கு, என் சம்பளம், கால்ஷீட், காசோலை கையெழுத்து, வருமான வரி எவ்வளவு கட்ட வேண்டும்... வீட்டில் பணியாளர்கள் எவ்வளவு என எதுவும் தெரியாது.... கையறு சூழலில் நின்றேன். ஒரு குழந்தையைக் கண்ணைக் கட்டி காட்டுக்குள் விட்டது போல இருந்தது..." என்று அவரே ஒரு பேட்டியில் பகிர்ந்து இருக்கிறார்.

இருள் பூசிய இந்தத் தனிமையிலிருந்து தம்மை மீட்பார்கள்... அம்மாவின் பேரன்பு கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை... குறைந்தபட்சம் அன்பாவது தனக்கு கிடைக்கும் என்று அவர் நம்பிய உறவினர்களும் அவருக்குக் காயத்தைத்தான பரிசாகத் தந்தனர். ஆம், ஒரு நெருக்கடி சமயத்தில், அவர்களுக்கு ஜெயாவின் நலனைவிட... அவரின் சொத்து மீது தான் முழுக்கவனமும் இருந்திருக்கிறது.

**மயங்கிய ஜெ...**
**பதறிய எம்.ஜி.ஆர்...!**

சென்ற அத்தியாயத்தில், அடிமைப்பெண் படப்பிடிப்பின் போது, வெயிலில் இருந்து ஜெவை காக்க எம்.ஜி.ஆர். அவரைத் தூக்கிச் சென்றார் என்று பார்த்தோம்தானே...? அது போல, இன்னொரு சம்பவமும் நிகழ்ந்து இருக்கிறது. ஆம், ஜெயலலிதா ஒரு சமயம் கடுமையான டயட்டில் இருந்தார். அதன் பின் விளைவாக, வீட்டில் புத்தகம் படித்துக் கொண்டிருக்கும்போதே மயங்கி விழுந்து விட்டார். வீட்டில் உள்ள வேலையாட்கள், உறவினர்கள் என்னென்னவோ செய்து பார்த்தும் அவர் எழவே இல்லை. அவர்களுக்குப் பதற்றமாகிவிட்டது... என்ன செய்வது என்று தெரியவில்லை. ஜெயலலிதாவின் மனேஜருக்கு தகவல் போகிறது...

அவர் உடனடியாக எம்.ஜி. ஆருக்கு தகவல் தெரிவிக்கிறார். எம்.ஜி. ஆர். உடனடியாக ஜெயலலிதாவின் வீட்டுக்கு வந்து, அவரை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லும் ஏற்பாடுகளை



செய்தார்.

இந்த பதற்றமான சூழலிலும் ஜெயலலிதாவின் உறவினர்கள் சிலர், வீட்டில் உள்ள முக்கிய பீரோ சாவியை யார் வைத்துக் கொள்வது என்று தங்களுக்குள் சண்டையிட்டு இருக்கிறார்கள். இதில் தலையிட்ட எம்.ஜி.ஆர், சாவியை தான் கைப்பற்றி, ஜெயலலிதா குணமடைந்த பின் அவரிடம் ஒப்படைத்து இருக்கிறார். நடந்த சம்பவங்களைக் கேட்ட ஜெயலலிதா நொந்துதான் போய் விட்டார்...!

இந்தச் சம்பவம் தான், ஜெயலலிதா, எம்.ஜி.ஆரை முழுமையாக நம்பியதற்கும், தன் உறவினர்களைத் தள்ளி வைத்ததற்கும் முதல் காரணமாக இருந்திருக்க வேண்டும்...!

படப்பிடிப்புத் தளத்திலும் சரி. எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா மீது அதிக அக்கறையாக இருந்திருக்கிறார். அதை ஜெயலலிதாவே, தான் அளித்த பேட்டி ஒன்றில் பகிர்ந்திருக்கிறார்.

ஜெயலலிதா வார்த்தைகளிலிருந்தே, " 'கண்ணன் என காதலன்' படப்பிடிப்பின போது ஒரு நாள் காலை அவருக்கான காட்சிகள் முடிவடைந்து விட்டதால், காரில் ஏறப்போனவர் (எம்.ஜி. ஆர்.), "மத்தியானம் என்னஎடுக்கப்போகிறீர்கள்?" என்று கேட்டார்.

"ஜெயலலிதா மாடிப் படியில், சக்கர நாற்காலியில் உருண்டு விழும் காட்சி...!" என்றார் இயக்குநர். உடனே எம்.ஜி.ஆர். காரை விட்டு இறங்கிவிட்டார். "அதை எடுக்கும் போது, நானும் இருக்கிறேன், அது கொஞ்சம் ரிஸ்கானது...! அந்த பெண் விழுந்து விட்டால்...?" என்று சொல்லிக்கொண்டே அன்று எங்களுக்கு உதவி செய்ய வந்துவிட்டார். அன்று முழுவதும், படப்பிடிப்பு முடியும் வரை எங்களுடனேயே இருந்தார்..."

அன்புக்காக ஏங்கிய ஜெயலலிதாவின் ஆன்மாவுக்கு, உண்மையில் இந்த அக்கறை அளவற்ற சந்தோசத்தை தந்திருக்க வேண்டும்.

இதனால்தான் பின் தான் அளித்த ஒரு பேட்டியில் ஜெயலலிதா இவ்வாறாக சொன்னார், "அவர் (எம்.ஜி.ஆர்) தான் எனக்கு எல்லாம். அவர் தான் என் தந்தை, என் தாய், என் நண்பர், என் வழிகாட்டி, என் ஆசான்... எல்லாம் அவர் தான்" என்று.

ஆனால், அதே எம்.ஜி. ஆர். தான், பின் ஜெயலலிதா போயஸ்கார்டன் வீட்டுக்கு குடியேறிய போது, அந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ளாமல் தவிர்த்தார். ஆம், எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா வீட்டு கிரகப்பிரவேசத்தில் கலந்து கொள்ளவில்லை, அவர் அளித்த பரிசுப் பொருள் மட்டும் தான் சென்றது...!

(தொடரும்...)

# ஆக்ரோஷமாக எழுந்து உலகையே உலுக்கிய ஆழிப்பேரலையின் 12 ஆவது நினைவு தினம்

12 வருடத்திற்கு முன்னர் கோரமுகத்துடன் எழுந்து சற்றும் எதிர்பார்க்காத தருணத்தில் அனைத்து உயிர்களையும் உள்வாங்கிச் சென்ற சுனாமி எனும் ஆழிப்பேரலையை நினைத்துப் பார்த்தாலே உள்ளம் பதறுகிறது.

கடற்கரை என்பது அனைவருக்கும் பிடித்த ஒரு அற்புதமான இடமே. எவ்வளவு மனக் கஷ்டத்தில் இருந்தாலும் அங்கு சென்று சிறிது நேரம் நின்றிருந்தால் போதும் அனைத்து கவலைகளும் பறந்தோடிவிடும்.

அப்படிப்பட்ட கடற்கரையும் ஆபத்து நிறைந்தது என்பதை நமக்கு உணர்த்திய தினம் 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் 26 தான்.

ஆம், அன்று காலை சாதாரணமாகத்தான் விடியல் ஏற்பட்டது. ஆனால் மிகுந்த கவலையுடன் அன்றைய தினம் கழியும் என்பதை யாரும் அறிந்திருக்கவில்லை.

2004 டிசெம்பர் 26 அன்று இந்தோனேஷியாவின் சுமத்ரா தீவுப் பகுதியில், கடலுக்கு அடியில் உருவான பயங்கர நிலநடுக்கத்தின் விளைவால், பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, மலேசியா, இலங்கை, இந்தியா உள்ளிட்ட ஆசிய நாடுகள் சுனாமி என்ற இயற்கை சீற்றத்திற்கு ஆளாகின.

அதனால் சுனாமி எனும் ஆழிப்பேரலை விஸ்வரூபம் எடுத்து, பயங்கர வேகத்துடன் கடலோர நகரம், கிராமம் என்று வித்தியாசம் பாராமல் உள்ளே புகுந்தது.

கடற்கரையில் இருந்த கடலோர மக்கள் மட்டுமின்றி, பொழுதுபோக்கிற்காக கூடியிருந்தவர்களையும் நடக்கப்போகும் விபரீதம் அறியாமல் நடைபயிற்சி மேற்கொண்டவர்களையும்கண்ணிமைக்கும் நேரத்திற்குள் வாரி சுருட்டிக் கொண்டு கடலுக்குள் இழுத்துச் சென்று விட்டாள் அந்த கடல்மாதா.

கண்ணிமைக்கும் நேரத்துக்குள் நடந்து முடிந்து விட்ட விபரீதம். என்ன நடந்தது என்பதை உணரும் முன்பாகவே உயிரற்ற உடல்கள் கரையொதுங்கின.

குவியல் குவியலாக கிடந்த சடலங்கள் ஒரே குழிக்குள் போட்டு புதைக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது.

அன்று கேட்ட மரண ஓலம் 12 ஆண்டுகளுக்கு பிறகும் கடற்கரையோர கிராமங்களில் இன்னும் ஒலித்துக் கொண்டு அனைவரையும் மிகுந்த சங்கடத்தில் ஆழ்த்தி வருகிறது.

எத்தனையோ ஆசைகளுடன் அன்று கரைந்து போனவர்களின், மிச்ச மீதி குடும்பங்களின் இன்றைய நிலை தான் என்ன? சேதமடைந்த இடங்கள் கூட, சுனாமி ஏற்படுத்திய சுவடு தெரியாமல் மீண்டும் உயிர் பெற்றுவிட்டன.



ஆனால், உயிர்களை பலிகொடுத்த மக்கள் உள்ளங்களில் ரணமாக இருக்கும்காயம்மட்டும்இன்னும்ஆறாமல் அப்படியேதான் இருக்கிறது. அதற்கான மருந்து காலத்திடம் தான் உள்ளது.

காலம் கடந்து போகப் போக... இந்தக் காயமும் ஆறட்டும் என்று இறைவனை பிரார்த்திப்போம். இனியும் இதுபோல் இயற்கை பேரிடர் ஒன்றும் ஏற்பட வேணடாம் என்றும் ஆண்டவனை வேண்டிக் கொள்வோம்.

இந்நிலையில், சுனாமி எனும் ஆழிப்பேரலையில் பெற்றோரை இழந்த சிறுவன் ஒருவன், கண்ணீருடன் வடித்த கவிதை ஒன்றை படித்தது நினைவுக்கு வந்தது. அதை உங்களிடம் பகிர்ந்து கொள்கிறேன்.





உன்னை எவ்வளவு அழகாய்
ரசித்து வந்தோம்...
ஆனால் அந்த நினைவுகள் சிறிதும் இல்லாமல்
எங்களை சீரழித்து விட்டாயே...
அமைதியாக தானே இருந்தாய்
பிறகு ஏன் இவ்வளவு ஆக்ரோஷம்..
உன் அவசரத்தினால் என் குடும்பங்கள் அனைத்தையும் நான் இழந்து விட்டேனே...
தற்போது மன்னிப்பு கேட்டு என்ன பயன்...
இனி எத்தனை முறை காலை வருடி மன்னிப்பு கேட்டாலும்
உன்னை மன்னிக்க மாட்டேன்.....

சஞ்சை

# அ.தி.மு.க. பொதுச் செயலாளர் சசிகலா தான்! முதல்வராகவும் பதவியேற்பார் - தீரன் பேட்டி

சென்னையில் நாளை மறுதினம் 29 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுக்குழுவில், அ.தி.மு.கவின் பொதுச் செயலராக சசிகலா தேர்ந்தெடுக்கப்படுவார் என்று அ.தி.மு.க. செய்தித் தொடர்பாளர் தீரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, பிபிசி தமிழுக்கு பேட்டியளித்த தீரன், "29 ஆம் திகதி காலையில் நடைபெறும் செயற்குழுக் கூட்டத்தில், சசிகலா பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்க வேண்டும் என்ற வேண்டுகோள், தீர்மானமாக வைக்கபடும்.

அதன்பிறகு பொதுக்குழு கூடும். செயற்குழுவில் நிறைவேற்றப்படும் தீர்மானத்துக்கு அதில் ஒப்புதல் அளிக்கப்படும். அன்றே, சசிகலா கட்சியின் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்படுவார். அது தெளிவாகத் தெரிகிறது" என்றார் தீரன்.

முதலமைச்சர் பொறுப்பையும் சசிகலா ஏற்க வேண்டும் என்ற கோரிக்கை சிலரால் முன வைக்கப்பட்டுள்ள நிலையில், கட்சியில் அதற்கு ஆதரவிருக்கிறதா? என்ற கேள்விக்கு பதிலளித்த தீரன், பொதுக்குழு முடிவெடுத்தால் யாராக இருந்தாலும் அதற்குக் கட்டுப்பட வேண்டும் என்றார்.

"முதலமைச்சராக இருக்கும் ஓ.பி.எஸ்., ஜெயலலிதா சில நேரங்களில் வழக்கு தொடர்பான சிக்கல்களைச் சந்தித்தபோது, முதலமைச்சர் பொறுப்பை வகித்து, ஜெயலலிதா நான்கு மாதம், 6 மாதங்களில் திரும்ப வந்த போது, அந்தப் பொறுப்பை மீண்டும் அவரிடமே திரும்ப அளித்து, கட்சியின் விதிகளுக்கு உட்பட்டிருக்கிறார்.

எனவே, பொதுக்குழு, செயற்குழு பெரும்பான்மையாக என்ன முடிவு எடுக்கிறதோ, அதற்கு ஓ.பி.எஸ். உட்பட நாங்கள் உட்பட சசிகலா உட்பட அனைவரும் கட்டுப்பட்டுத்தான் ஆக வேண்டும். சசிகலா எனக்கு வேண்டாம் என ஒதுங்க முடியாது.

பொதுக்குழுவின் விருப்பத்தை அவர் நிறைவேற்றித் தான்தர வேண்டும் அதேபோல, பொதுக்குழு பெரும்பான்மையாக விரும்புகிறது என்றால், முதலமைச்சராவதற்குக் கூட, ஓ.பி.எஸ். வழிவிட்டுத்தான் தீர வேண்டும்" என்றார் தீரன்.

அரசுக்கும் கட்சிக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் நிலவுவதாக வெளியாகும் செய்திகள் குறித்துக் கருத்துத் தெரிவித்த அவர், எம்.ஜி.ஆர். மறைந்தபோது ஏற்படுத்தியதுபோல இப்போதும் ஊடகங்கள், குழப்பத்தை ஏற்படுத்த நினைக்கின்றன என்றார்.

"ஜெயலலிதா உயிரோடு இருக்கும்போதே வாரிசு அரசியலை விரும்பாததால் குடும்பத்தாரைக்கொண்டுவரவில்லை. அவர் குடும்ப அரசியலை விரும்பவில்லை. ஜெயலலிதாவின் உறவினர்களை மதிக்கிறோம்.

தீபாவின் கருத்துக்களுக்கு அவரது அண்ணன் ஜெயகுமார் மகன் தீபக்கே பதில் சொல்லியிருக்கிறார். நாங்கள் சொல்லத்தேவையில்லை. கட்சியைக் குழப்பி மீன் பிடிக்கலாம் என நினைப்பவர்களின் வாயில் மண்தான் விழும். அந்த அளவு, கட்சியினர் உறுதியாக, உண்மையாக, விசுவாசமாக இருக்கிறார்கள்" என்றார் தீரன்.

மத்திய அரசு, பாரதீய ஜனதா ஆளும் மாநிலங்களிலும் கூட்டணிக் கட்சி ஆளும் மாநிலங்களிலும் ஒரு விதமாகவும், மற்றக் கட்சிகள் ஆளும் மாநிலங்களில் வேறு மாதிரியாகவும் பாரபட்சமாக நடந்து கொள்வதாக தீரன் குற்றம் சாட்டினார்.

முன்னாள் தலைமைச் செயலர் ராம மோகனராவின் வீட்டில் வருமானவரி சோதனை நடத்தியதை தாங்கள் எதிர்க்கவில்லை என்றும், ஆனால், தலைமைச் செயலகத்தில் உள்ள அவரது அலுவலகத்தில் அரசுக்குத் தகவல் தெரிவிக்காமல் சோதனை நடத்தியது மாநில இறையாண்மை மீது நடத்தப்பட்ட தாக்குதல் என்றும் தீரன் கண்டனம் தெரிவித்தார்.

அதைவிட, துணை இராணுவத்தின் உதவியுடன் சோதனை நடத்தியது, கூட்டாட்சித் தத்துவத்துக்கு விடுக்கப்பட்ட சவால என்று தீரன் தெரிவித்தார்.

மாநில அரசுக்கு நெருக்கடி கொடுத்து, நாடாளுமன்றத்தல் அ.தி.மு.கவின் 50 எம்.பிகளின் ஆதரவை பல்வேறு பிரச்சினைகளில் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கையாகக் கூட இருக்கலாம் என்றார் தீரன். (இ-10)





# சிறுவர் அரங்கம்

# அறிவாளி

விஜயபுரத்தை மன்னன் ஒருவன் ஆண்டு வந்தான். அவன் பெயர் மதிவதனர். அவனுடைய அரசவையில் இருந்த மூத்த அமைச்சர்களில் ஒருவர் திடீரென மரணம் அடைந்தார். எனவே, அந்தப் பதவி காலியாகவே இருந்தது.

அதற்கு தகுதி வாய்ந்த இளைஞன் ஒருவனை நியமிக்க வேண்டும் என்று மன்னன் விரும்பினான். ஆயினும் அதை வெளிப்படையாகச் சொல்லாமல், அமைச்சர் சபையைக் கூட்டி, "நம்முடைய நாட்டில் மிகவும் அறிவாளியான இளைஞர்கள் உள்ளார்களா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அதற்காக நாளை ஒரு போட்டிக்கு அறிவிப்பு செய்ய உள்ளேன்.

அறிவும், திறமையும் உள்ளவர்கள் கலந்து கொள்ளட்டும்!" என்று தன் அபிப்ராயத்தைத் தெரிவித்தான். அமைச்சர்கள் அதற்கு சம்மதித்தனர்.

மறுநாள் தண்டோரா மூலம் அந்த அறிவிப்பு வெளியானது.

"நாட்டில் அறிவும், திறமையும் உள்ள இளைஞர்களுக்காக ஒரு போட்டி நடைபெறுகிறது. தங்கள் அறிவின் மேலும், திறமையின் மேலும் நம்பிக்கையுள்ளவர்கள் இந்தப் போட்டியில் கலந்து கொள்ளலாம். கலந்து கொண்டு வெற்றி பெற்றால் அதற்குத் தக்க பலன்களை அடையலாம்" என்று அறிவித்தான்.

மறுநாள் ஆர்வம் மிக்க இளைஞர்கள் பலர் ஒன்று கூடினர். என்ன போட்டியை அரசர் வைக்கப் போகிறார்? பொது அறிவுக் கேள்விக்கான விடைகளா, வலிமையைச் சோதிக்கும் போராட்டமான, புத்திக் கூர்மையை எடுத்துக் காட்டக் கூடிய விவேகமான விஷயங்களா? என்று தெரியாமலேயே இளைஞர்கள் கூடினர்.

"போட்டிக்கு வந்த போட்டியாளர்கள் மட்டும் தனியே பிரிந்து நிற்கட்டும்!" என்று அமைச்சர்களில் ஒருவர் முழங்கினார்.

பதினைந்து வாலிபர்கள் மட்டும் கூட்டத்திலிருந்து பிரிந்து வந்தனர. அவர்களிடம் அரசன் பேசினான்.

அன்பார்ந்த இளைஞர்களே, இதோ எனக்கு அருகில் நிற்கக் கூடிய இந்த இரண்டு வீரர்களைப் பாருங்கள். இவர்களில் ஒருவன்




உண்மையான வீரன் மற்றொருவன் அவனைப் போன்ற போலி.

நீங்கள் செய்ய வேண்டியது என்னவென்றால் இதில் அசல் வீரன் யார்? போலி வீரன் யார்?" என்று கண்டுபிடிக்க வேண்டியதே!

"இதற்காக நீங்கள் அவர்களுக்கு அருகே சென்று பார்க்கக் கூடாது. ஒரு அடி இடைவெளியில் நின்றுதான் பார்க்க வேண்டும். நீங்கள் உண்மையான வீரனைச் சோதிப்பதாகக் கூறிக் கொண்டு அவர்களைத் தொட முயற்சிப்பதோ, பொருட்களைத் தூக்கி எறிந்து காயமுண்டாகும்படி செய்வதோ கூடாது.

ஆனால், உங்களுக்கென்று ஒரு சலுகை தரப்பட்டுள்ளது. உண்மையை நீங்கள் உணர்ந்து கொள்ளுவதன் பொருட்டு வீரர்களைத் தொடாமல் ஏதாவது ஒரு பொருளைக் கொண்டு அறிய முயற்சிக்கலாம். அவ்வளவுதான் நிபந்தனைகள்!"என்றார்.

"இளைஞர்களே இப்போது வீரர்களுக்கு ஓரடி இடைவெளியில் ஒவ்வொருவரும் வந்து முயற்சி செய்யலாம்!"

இளைஞர்கள் அந்த இரண்டு வீரர்களையும் தங்கள் கண்களாலேயே அளவெடுத்தனர்.

இருவரும் ஒரே நிறத்தில், உடைகள் அணிந்திருந்தனர். ஒரே மாதிரி ஆயுதங்களை ஏந்தி இருந்தனர். அவர்களின் மெல்லிய புன்முறுவல், கண்கள் எல்லாமே ஒன்றாகவே இருந்தன.

முதலாவது இளைஞன் முன் சென்று நின்றான். வீரர்களை உற்று நோக்கினான். அவனுக்கு யார் உண்மை, யார் போலி என்று தெரியவே இல்லை. தொங்கிய முகத்துடன் திரும்பினான்.

சிலர் கை தட்டி ஓசை எழுப்பிப் பார்த்தனர். சிலர் வீரன் முன்னால் வந்து நின்று அவனை மிரட்டும் தொனியில் குரல் எழுப்பினர்.

சிலர் நகைச்சுவையான விஷயங்களைக் கூறிச் சிரிக்க வைக்க முயன்றனர்.

வேறு சிலர் ஒரு வீரனின் கண்களைக் குறி வைத்து அவை அசைகின்றனவா இல்லையா என்று நோட்டமிட்டனர். ஆனால், இருவருமே நிலை குத்திய பார்வையுடன் காணப்பட்டனர். ஒருவனுக்கும் உண்மையைக் கண்டறியும் சக்தி இல்லை.

கடைசியாகப் பதினைந்தாவது இளைஞன் முன்வந்தான். அவன் நீண்ட நேரம் வீரர்கள் இருவரையும் தூரத்திலிருந்தே பார்த்துக் கொண்டிருப்பதால், தனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தவுடன் சிறிது நேரம் கூட வீணாக்காமல் அருகில் நின்றிருந்த அமைச்சர் ஒருவரிடம் கேட்டான்.

"அமைச்சர் அவர்களே, எனக்கு ஒரு தீப்பந்தம் தந்து உதவ வேண்டும்!" என்றான்.

அமைச்சர், மன்னனைப் பார்க்க, மன்னன் தலையசைத்தான். சிறிது நேரத்தில், அவனுக்கு ஒரு தீப்பந்தம் தரப்பட்டது. அவன் அந்தத் தீப்பந்தத்தைப் பெற்றுக் கொண்டவனாய், அந்த வீரர்களின் வலது பக்கத்துக்குச் சென்றான்.

வீரர்களுக்கு ஓரடி இடைவெளியில் நின்று கொண்டான். பின் தனக்கு வலது பக்கம் உள்ள வீரனின் முன் அந்தத் தீப்பந்தத்தை நீட்டிப் பிடித்தான். அரண்மனை எங்கும் நிசப்தம் சூழ்ந்தது.

சிறிது நேரத்தில் அவன் நீட்டிய பக்கத்திலிருந்து வீரன் மெல்ல மெல்லக் கரைந்து உருக ஆரம்பித்தான். ஐந்து, பத்து நிமிடங்களுக்குள் அவன் தலை, தோல் ஆகியவை கருகி இரண்டு கைகளும் பிடிப்பற்றுக் கீழே விழுந்தன.

அந்த வீரன் மெழுகினால் செய்யப்பட்ட உருவப் பொம்மை என்று இப்போது அனைவருக்கும் புரிந்தது.

இப்போது இளைஞன் தீப்பந்தத்தை அணைத்துவிட்டு, "அரசே, நான் உருக்கிய வீரன் மெழுகுப் பொம்மையினால் செய்யப்பட்டவன். அருகில் எனக்கு இடது கைப்பக்கமாக நிற்கும் வீரன் உண்மையான மனிதன்!" என்று கூறினான்.

"சபாஷ்!" என்று பாராட்டினான் அரசன்.

"உன்னுடைய உற்று நோக்கும் திறன், சிந்திக்கும் தன்மை, நீ செயல்பட்ட விதம் ஆகியவை உன்னை அறிவாளி என்று ஏற்க வைத்துவிட்டது. நீயே இந்நாட்டு அமைச்சர்களில் ஒருவன். இறந்த அமைச்சரின் பதவியை நிரப்ப வந்த தேர்ந்த அறிவாளி. வாழ்க நீ!" என்றான் மன்னன்.

12.2016
27

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 537 - ஹேகியா சோபியா கட்டி முடிக்கப்பட்டது.
- 1831 - சார்ல்ஸ் டார்வின் உயிரினங்களின் படிவளர்ச்சிக் கொள்கை பற்றிய ஆய்வுக்காக தென்னமெரிக்கா நோக்கிப் புறப்பட்டார்.
- 1836 - இங்கிலாந்தின் வரலாற்றில் மிக மோசமான புயல் சசெக்ஸ் நகரில் இடம் பெற்றது. 8 பேர் கொல்லப்பட்டனர்.
- 1845 - பிள்ளைப் பேறுக்கு ஈதர் மயக்க மருந்தாக முதற் தடவையாக ஐக்கிய அமெரிக்காவில் ஜோர்ஜியாவில் பயன்படுத்தப்பட்டது.
- 1864 - இலங்கையில் முதலாவது தொடருந்து சேவை கொழும்புக்கும், அம்பேபுசைக்கும் இடையில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1911 - இந்தியாவின் தேசியப் பண் ஜன கண மன முதன் முதலில் கல்கத்தா நகரில் இசைக்கப்பட்டது.
- 1915 - யாழ்ப்பாணத்தின் முதல் பொது நூலகம் "நகுலேசுவரா நூல்நிலையம்" கீரிமலையில் திறக்கப்பட்டது.
- 1918 - ஜேர்மனியருக்கெதிரான பெரும் எழுச்சி போலந்தில் ஆரம்பமானது.
- 1922 - ஜப்பானின் ஹோஷோ உலகின் முதலாவது விமானம் தாங்கிக் கப்பலாக பாவிக்கப்பட்டது.
- 1923 - ஜப்பானிய மாணவன் ஒருவன் இளவரசர் ஹிரோஹிட்டோவைக் கொல்ல முயற்சித்தான்.
- 1934 - பேர்சியா ஈரான் என்ற பெயரைப் பெற்றது.
- 1939 - துருக்கியில் ஏர்சின்கன் நகரில் நிலநடுக்கம் ஏற்பட்டதில் 30,000 பேர் கொல்லப்பட்டனர்.
- 1945 - 28 நாடுகளின் ஒப்புதலுடன் உலக வங்கி உருவாக்கப்பட்டது.
- 1949 - இந்தோனீசியா ஒன்றுபட்ட விடுதலை பெற்ற நாடாக நெதர்லாந்து அறிவித்தது.
- 1956 - தமிழ்நாட்டில் தமிழ் ஆட்சி மொழிச் சட்டம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.
- 1978 - ஸ்பெயின் 40வருட கால சர்வாதிகார ஆட்சியின் பின்னர் ஜனநாயக நாடானது.
- 1979 - சோவியத் ஒன்றியம் ஆப்கானிஸ்தானைக் கைப்பற்றியது. அதிபர் ஹபிசுல்லா அமீன் சுட்டுக் கொல்லப்பட்டு பப்ராக் கர்மால் தலைவரானார்.
- 1985 - ரோம் மற்றும் வியன்னா விமான நிலையங்களில் பாலஸ்தீன தீவிரவாதிகள் நடத்திய தாக்குதல்களில் 18 பேர் கொல்லப்பட்டனர்.
- 1996 - தலிபான் படைகள் ஆப்கானிஸ்தானில் பக்ராம் வான்படைத் தளத்தைக் மீளக் கைப்பற்றினர்.
- 1997 - வடக்கு அயர்லாந்தில் புரட்டஸ்தாந்து துணை இராணுவக்குழுத் தலைவர் பில்லி ரைட் சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 2000 - யாழ்ப்பாணம், தென்மராட்சி மிருசுவிலில் தமது வீடுகளைப் பார்வையிடச் சென்ற எட்டு பொதுமக்கள் இலங்கைப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.
- 2002 - செச்சினியாவில் மாஸ்கோ சார்பு அரச தலைமையகத்தில் இரண்டு குண்டுகள் வெடித்ததில் 72 பேர் கொல்லப்பட்டு 200 பேர் காயமடைந்தனர்.
- 2007 - பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனசீர் பூட்டோ ராவல்பிண்டியில் தற்கொலைக் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டார்.

**பிறப்புகள்**

- 1571 - ஜொஹான்னெஸ் கெப்லர், ஜேர்மானிய அறிவியலாளர் . (இ. 1630).
- 1654 - ஜேக்கப் பெர்னோலி, சுவிஸ் கணிதவியலாளர் . (இ. 1705).
- 1796 - மிர்சா காலிப், உருதுக் கவிஞர். (இ.1869).
- 1822 - லூயி பாஸ்டர், பிரெஞ்சு அறிவியலாளர். (இ. 1895).
- 1901 - மர்லீன் டீட்ரிக், அமெரிக்க நடிகை, பாடகி . (இ. 1992)
- 1945 - டேவிட் ராஜேந்திரன், ஈழத்து வானொலி, மேடை நாடகக் கலைஞர் . (இ. 2013)
- 1965 - சல்மான் கான், இந்தி நடிகர்.

**இறப்புகள்**

- 1922 - தாமஸ் வில்லியம் ரைஸ் டேவிட்ஸ், பாளி அறிஞர். (பி. 1843)
- 1923 - அலெக்சாந்தர் கஸ்டவ் ஈபல், பிரெஞ்சுப் பொறியியலாளர் . (பி. 1832)
- 1979 - ஹஃபிசுல்லா அமீன், ஆப்கானிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி. (பி. 1929)
- 2007 - பெனசீர் பூட்டோ, பாகிஸ்தான் முன்னாள் பிரதமர். (பி. 1953)

வாழ்வின் வெற்றி என்பது ஒருமனிதன் பின்பற்றும் சத்தியத்தைப் பொறுத்தது.
– ஸ்ரீ அன்னை

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சம்பந்தர் ஐயா சொல்லுங்கள் தமிழர்களை நட்டாற்றில் விடவா போகிறீர்கள்?

ஒற்றையாட்சிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் சம்மதம் தெரிவித்து விட்டார். சமஷ்டியைக் கைவிட்டுவிட்டார் என மீன்பிடித் துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தெரிவித்தது அமைச்சர் அமரவீர மட்டுமல்ல ஏற்கெனவே, இரண்டு அமைச்சர்கள் சம்பந்தர் சமஷ்டியைக் கைவிட்டு விட்டார் என வெளிப்படையாகக் கூறியுள்ளனர்.

கூடவே பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்குவதற்கும் சம்பந்தர் சம்மதம் தெரிவித்துள்ளதாகவும் அமைச்சர் அமரவீரவின் வாக்குமூலம் கூறுகிறது.

யார் என்ன கூறினாலும் இரா.சம்பந்தன் அவர்கள் மௌனமாகவே இருப்பார் என்பதும் உண்மை.

இது ஒரு புறம் இருக்க, விடுதலைப் புலிகளின் ஆசியுடன் ஆரம்பிக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற அடிப்படையில் தமிழ் மக்கள் கூட்டமைப்புக்கு வாக்களிக்க, அவர்கள் பாராளுமன்ற ஆசனங்களைப் பெற்றுக் கொண்டனர்.

பாராளுமன்ற ஆசனங்களைப் பெற்றதும் கூட்டமைப்பு என்ற அமைப்பை மெல்லக் கைவிட்டு இலங்கைத் தமிழரசுக் கட்சி என்பதாக கள நிலைமை மாற்றப்பட்டது.

இப்போது இலங்கைத் தமிழரசுக் கட்சி என்பதையும் கடந்து இரண்டு பேர் தீர்மானித்தல் என்ற நிலைமைக்கு தமிழ் அரசியல் தலைமை உள்ளது.

தமிழ் மக்கள் எமக்கு வாக்களித்தால் நாம் எதையும் தீர்மானிக்க முடியும் என்ற நிலைப்பாட்டில் இரா.சம்பந்தர் தரப்பு இருப்பதுதான் மிகப்பெரும் அபத்தம்.

தமிழ் மக்களின் வாக்களிப்பு என்பது தேர்தல் காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்த தேர்தல் விஞ்ஞாபனத்தின் அடிப்படையில் நடைபெற்றது.

எனவே தமிழ் மக்களின் வாக்குகள் மூலம் பாராளுமன்ற ஆசனத்தை பெற்றவர்கள் தேர்தலின் போது தாம் வழங்கிய தேர்தல் விஞ்ஞாபனத்தின் அடிப்படையிலேயே செயற்பட வேண்டும்.

இருந்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொழும்புத் தலைமை தேர்தல் விஞ்ஞாபனத்தை எல்லாம் மறந்து ஒற்றையாட்சிக்கு இணக்கம் தெரிவித்ததுடன் பௌத்த மதத்தை முன்னுரிமைப்படுத்துவதற்கும் உடன்பட்டுள்ளது என அமைச்சர்களால் கூறப்படுகிறது.

இதனடிப்படையிலேயே இரா.சம்பந்தன் சிறந்ததொரு ஜனநாயகவாதி என்றும் சம்பந்தர் போன்ற தலைவர் இருக்கும் போது இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டுவிட வேண்டும் என்றும் ஆட்சியாளர்கள் கூறிவருகின்றனர்.

ஆக, இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது தமிழ் மக்களுக்கு எந்த உரிமையையும் தராமல் வெறும் சப்புச்சவலையாக அமையப் போவது உறுதி.

தன்னுடைய காலத்தில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டு விடவேண்டும் என்பதற்காக எல்லாவற்றையும் விட்டுக்கொடுத்து விட்டால் தமிழ் மக்களின் எதிர்காலம் என்னவாகும் என்பதை சம்பந்தர் ஒருகணம் சிந்திக்க வேண்டும்.

தவிர, எத்தனையோ தியாகங்களை தந்து போன எங்கள் பிள்ளைகளின் எதிர்பார்ப்புகளுக்கு நாம் சமாதி கட்டுவோமாயின் அது அவர்களுக்கானதல்ல நமக்கானது என்பதையும் புரிதல் அவசியம்.

எதுவாயினும் தமிழ் மக்களுக்கான உரிமை என்பதில் தனித்து, சம்பந்தர் மட்டும் முடிவு செய்வதென்பது ஒரு போதும் சாத்தியப்படாத விடயம்.

தமக்கான தீர்வு என்ன என்பதை தமிழ் மக்களே தீர்மானிக்க வேண்டும். ஆகையால் தமிழ்மக்களின் கருத்துக்கள் அறியாமல் அவர்களின் ஆலோசனைப் பெறாமல் ஒற்றையாட்சி என்றும் பௌத்த மதத்திற்கு முன்னுரிமை என்றும் சம்பந்தர் உடன்படுவது தமிழ் மக்களை நட்டாற்றில் விடும் செயலாகும்.

இது தொடர்பில் தமிழ்மக்கள் விழிப்புடன் இருப்பது என்பது மிகமிக அவசியம்.

# சுனாமியால் உயிரிழந்தவர்களுக்கு மகிந்த மற்றும் நாமல் இரங்கல்

(கொழும்பு)

ஆயிரக்கணக்கான உயிரகளை காவுகொண்ட சுனாமி, பேரழிவு இடம்பெற்று 12 வருடங்கள் ஆகிவிட்டன. 2004ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி சுனாமி பேரலை ஏற்பட்டது.

வரலாற்றில் இந்து சமுத்திரத்தில் தோன்றிய மிகப் பெரிய இயற்கை பேரழிவாக சுனாமி பதிவாகியது. தாய்லாந்து, இந்தோனேசியா, இந்தியா மற்றும் இலங்கையை சுனாமி தாக்கியது.

இந்த நிலையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் தங்கள் இரங்கல்களையும் அஞ்சலிகளையும் தெரிவித்துள்ளனர்.

தங்களது உத்தியோக பூர்வ டுவிட்டர் கணக்கிலேயே குறித்த இரங்கல் செய்தியை பதிவேற்றம் செய்துள்ளனர்.

இலங்கை 12 வருடங்களுக்கு முன்னர் மோசமான பேரழிவு ஒன்றை எதிர்நோக்கியது.

ஆசியாவில் சுனாமி காரணமாக உயிரிழந்தவர்களை நேற்றைய தினம் அனைவரும் நினைவு கூறினர்.

உயிரிழந்த அனைவரினதும் ஆத்மாக்கள் அமைதியடைய வேண்டும் என தாம் பிரார்த்திப்பதாக அவர்கள் இருவரும் தெரிவித்துள்ளனர். (இ-10)

# தாஜுடீனின் சகோதரரிடம் வாக்குமூலம்பெற அனுமதி

(கொழும்பு)

ரக்பி விளையாட்டு வீரர் வசிம் தாஜுடீனின் கொலை வழக்கு தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர சேனநாயக்க மற்றும் நாரஹேன்பிட்டி பொலிஸ் குற்றப் பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரி சுமித் பெரேரா ஆகியோர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி, குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வேளை, கொழும்பு நீதவான் நீதிமன்றம் சந்தேக நபர்களை எதிர்வரும் 6ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பித்துள்ளது.

மேலும், இதன்போது நீதிமன்றத்தில் தகவலளித்த குற்றப் புலனாய்வுப் பிரிவினர், இந்தக் கொலை தொடர்பாக இன்னும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் கூறியுள்ளனர்.

இதேவேளை, சம்பவம் இடம்பெற்ற காலப் பகுதியில் சந்தேகநபரான சுமித் பெரேராவால் வசிம் தாஜுடீனின் சகோதரருக்கு அழுத்தம் கொடுத்ததாக கூறப்படும் விடயம் தொடர்பிலும், குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இதன்போது தகவல் வழங்கினர்.

இதற்கிணங்க இது பற்றி தாஜுடீனின் சகோதரரிடம் வாக்குமூலம் பெறவும் அவர்கள் அனுமதி கோரிய நிலையில் நீதவானும் அதற்கு அனுமதியளித்துள்ளார். (இ-10)

## இளம்தாய் உயிரிழப்பு

குழந்தை பிறந்த பின்னர் நலமாக இருந்த இளம் தாய் ஒருவர் ஏழு நாட்களின் பின்னர் திடீரென கடந்த 24 ஆம் திகதி யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

பாண்டவெட்டை சுழிபுரம் பகுதியை சேர்ந்த பிரசாந்த ரசித்தா (வயது--23) என்ற இளம் தாய் ஒருவரே உயிரிழந்தவராவார்.

பெண்ணுக்கு கடந்த 16 ஆம் திகதி பிரசவ வலி ஏற்பட்டதன் காரணமாக சங்கானை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அன்றையதினம் இரவு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு கடந்த 17 ஆம் திகதி சத்திர சிகிச்சையின் மூலம் பெண் குழந்தை பிறந்துள்ளது. குழந்தை பிறந்து 3 நாட்களாக தாய் நலமாக இருந்துள்ளார். பின்னர் 20 ஆம் திகதி தொடக்கம் கோமா நிலையில் இருந்து கடந்த 24 ஆம் திகதி இரவு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இப்பெண்ணுக்கு இது முதல்பிரசவம் ஆகும். மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் மேற்கொண்டதன் பின்னர் சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (இ-9)

## ஒளிவிழா

(கரணவாய்)

இலங்கையில் மெதடிஸ்த திருச்சபையின் மந்திகை சிற்றாலயத்தின் ஒளிவிழாவின் விடுதிச் சந்திப்பு வழிபாடும் இன்று நடைபெறும்.

பிற்பகல் 3 மணிக்கு விடுதிச் சந்திப்பும் மாலை 4 மணிக்கு கிறிஸ்து பிறப்பு வழிபாடும் இடம்பெறும். (இ-6)

## பரிசில் தினவிழா

(கரணவாய்)

கரவெட்டி மத்தொனி கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் நடத்தப்படும் சிறந்த கல்வியில் பெறுபேற்றைப் பெற்ற மாணவர்களுக்கான பரிசில் தின விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தியாலயத்தில் மத்தொனி கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் அ.ஸ்ரீகரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சிவசிறியும் சிறப்பு விருந்தினர்களாக கரவெட்டி பிரதேச சபைச் செயலாளர் ஆ.வினோராஜ் உம் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.காந்திகுமாரும் கலந்து கொள்வர். (இ-60)

## இல்லமெய்வல்லுநர் போட்டி குறித்து கல்வி அமைச்சு விசேட அறிவிப்பு

(கொழும்பு)

பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டிகளை எதிர்வரும் பெப்ரவரி 15ஆம் திகதிக்கு முன்னர் நிறைவு செய்யுமாறு கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் வலய விளையாட்டுப் போட்டிகளை ஏப்ரல் மாதம் 10ஆம் திகதிக்கு முன்னரும், மாகாண நிலையான போட்டிகளை ஜூன்மாதம் 22 ஆம் திகதிக்கு முன்னரும் நடத்தி முடிக்கப்பட வேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளது.

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி ஒக்டோபர் மாதம் முதலாம் திகதியில் இருந்து 15ஆம் திகதியுடன் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-ப)

## விண்ணப்பங்கள் ஏற்கப்படாது

வருட நிறைவுப் பணிகளை முன்னிட்டு நாளை மறுதினம் வியாழக்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமை ஆகிய இரு தினங்களும் யாழ்ப்பாண காணி மாவட்டப் பதிவகத்தில் விவாக, பிறப்பு, இறப்பு சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளல், மொழிபெயர்ப்பு செயற்பாடுகள் மற்றும் காணி ஆவணங்கள் தொடர்பான கருமபீடங்களில் விண்ணப்பங்கள் எவையும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

அத்துடன் 02.01.2017 தொடக்கம் காணி மாவட்டப் பதிவகத்தின் அனைத்துப் பணிகளும் வழமை போல நடைபெறும் என யாழ். மாவட்ட மேலதிக காணிப் பதிவாளர் அறிவித்துள்ளார். (தூ)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ இந்தியாவின் எழுச்சி என்ற சக்கரம் மீண்டும் ஒருமுறை சுழல ஆரம்பித்துவிட்டது. மீண்டும் இந்தியாவிலிருந்து குரல் ஒலிக்க ஆரம்பித்திருக்கிறது. இந்தக் குரல் விரைவில் உலகின் எல்லாப் பகுதிகளிலும் கேட்டே ஆக வேண்டும்.

❖ நம்புங்கள்; உறுதியாக நம்புங்கள். இந்தியா கண்விழித்து எழுந்திருக்கவேண்டும் என்ற ஆண்டவனின் கட்டளை பிறந்துவிட்டது. இந்தியா எழுச்சி பெற்று முன்னேற்றப் பாதையில்தான் செல்ல வேண்டும் என்று இறைவன் ஆணை பிறப்பித்துவிட்டான். பாமரர்களான இந்தியாவின் ஏழை எளிய மக்கள் நல்வாழ்வு பெறப்போகிறார்கள்.

❖ மிருகபலத்தால் அல்லாமல் ஆன்மீக பலத்தால் மட்டுமே எழுச்சி பெறப்போகிறது. அழிவு முறையின் மூலமாக அதன் எழுச்சி உண்டாகப் போவதில்லை. மாறாக அமைதி, அன்பு ஆகிய முறைகளின் மூலமாகத்தான் இந்தப் பணி நடைபெறும்.

# யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்கம் நடத்திய

# பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான போட்டி

## ஆவரங்கால் இந்து இளைஞர் சம்பியன்








ESP நாகரத்தினத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்கம் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையில் நடத்திய கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டிகள் 24.12.2016 சனிக்கிழமை அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்றது. முதலாவதாக நடைபெற்ற பெண்களுக்கான இறுதிப்போட்டியில் காங்கேசன்துறை ஐக்கியம், கோப்பாய் KMV கரீஸ் வி.கழ கத்தினை 25:10,25:12,25:17 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற B பிரிவுக்கான போட்டியில் உடுப்பிட்டி நவ ஜீவன்ஸ் புத்தூர் வளர்மதியை 25:23,25:18,25:19 எனவும் வெற்றி பெற்றது. A பிரிவு இறுதிப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞன் அணி இளவாலை மத்திய வி.க அணியை 25:19,22:25,25:21 எனவும் வென்று சம்பியனாகியது.

பிரதம விருந்தினராக E.S.P நிறுவன உரிமையாளர் நாகரத்தினம், சிறப்பு விருந்தினர் மாவட்ட விளையாட்டு அதிகாரி க.வி ஜிதரனும் கௌரவ விருந்தினராக அரியாலை ச.ச.மி. தலைவர் நா.குகதாஸ் கலந்து சிறப்பித்தனர். (கு)

# ஆஸி ஓபன் டென்னிஸ்; டெல்போட்ரோ விலகல்



அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் இருந்து ஆர்ஜென்டீனா வீரர் டெல்போட்ரோ விலகியுள்ளார்.

அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி அடுத்த மாதம் மெல்பேர்ன் நகரில் நடக்கவுள்ளது. இந்நிலையில் இந்த போட்டியில் இருந்து விலகுவதாக ஆர்ஜெனடீனா வீரர் டெல்போட்ரோ அறிவித்துள்ளார். உடல்நிலை பாதிக்கப் பட்டுள்ளதால் இந்த தொடரில் இருந்து விலகுவதாக அவர் அறிவித்துள்ளார்.

டெல்போட்ரோவைத் தொடர்ந்து அமெரிக்க டென்னிஸ் வீராங்கனையான மாடிசன் கீஸ்ும் அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் இருந்து விலகியுள்ளார்.

டென்னிஸ் தரவரிசைப்பட்டியலில் இவர் 8ஆவது இடத்தில் உள்ளார்.

கையில் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டதன் காரணமாக அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் இருந்து விலகுவதாக டுவிட்டரில் வெளியிட்டுள்ள பதிவில் இவர் குறிப்பிட்டுள்ளார். 2017ஆம் ஆண்டு முதல் முன்னாள் டென்னிஸ் வீராங்கனையான லிண்ட்ஸே டெவன்போர்ட் தனக்கு பயிற்சியளிப்பார் என்றும் டுவிட்டர் தளத்தில் இவர் குறிப்பிட்டுள்ளார். (க)

# அதிகமாக தேடப்படும் வீரர்களில் பி.வி.சிந்து முதலிடத்திலுள்ளார்



2016 ஆம் ஆண்டு கூகுளில் இந்திய அளவில் அதிகமாக தேடப்பட்ட விளையாட்டு வீரர்களில் ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற பி.வி சிந்து முதலிடத்தில் உள்ளார்.

கூகுள் நிறுவனம் வருடா வருடம் உலகளவில் அதிகமாக கூகுளில் தேடப்பட்டவர்கள் பட்டியல் வெளியிட்டுள்ளது.

அதில் இந்திய அளவில் அதிகமாக தேடப்பட்ட விளையாட்டு வீரர்களில் ரியோ ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் வென்ற இந்திய பட்மின்டன் வீராங்களை பி.வி. சிந்து. தல டோனி , தளபதி கோலி , கிரிக்கெட்டின் கடவுள் என அழைக்கப்படும் சச்சின் ஆகியோரை பின்னுக்கு தள்ளி பட்மின்டன் வீராங்கனை பி.வி.சிந்து முதலிடம் பிடித்துள்ளார்.

மேலும், உலகளவில் அதிகமாக கூகுளில் தேடப்பட்டவர்கள் பட்டியலில் அமெரிக்க ஜனாதிபதியாக தேர்தெடுக்கப்பட்ட டொனால்டு ட்ரம்ப் முதல் இடமும் பி.வி.சிந்து இரணர்டாம் இடத்தையும் பிடித்துள்ளதாக கூகுள் நிறுவனம் தெரிவிததுள்ளது. (க)

# மணற்காடு சென்.அன்ரனிசை வீழ்த்தி அரையிறுதிக்குள் நுழைந்தது யங்கம்பன்ஸ்




அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ். மாவட்ட ரீதியிலான அணிக்கு 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட தொடரில் 24.12.2016 அன்று வி.கழக மைதானத்தில் இடம்பெற்ற சுப்பர் 8 போட்டியில் மணற்காடு சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்து யங்கம்பன்ஸ் அணி மோதிக்கொண்டது.

முதல் பாதியாட்டத்தில் 12 ஆவது நிமிடத்தில் யங்கம்பன்ஸ் அணி வீரர் கமலீஸ்வரன் கோல் போட்டார். முதல் பாதியாட்டம் 01:00 என்ற அடிப்படையில் நிறைவுற்றது. இரண்டாவது பாதியாட்டத்தில் 43 ஆவது நிமிடத்தில் நிறோஜன் அணியின் வெற்றியை உறுதிப்படுத்தினார்.

அடுத்த 47 ஆவது நிமிடத்தில் அன்ரனிஸ் வீரர் தமது அணியின் முதல் கோலை பதிவு செய்தார். இறுதியாட்ட நேர முடிவில் 02:01 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியதன் மூலம் அரையிறுதி வாய்ப்பை தக்க வைத்தது யங்கம்பன்ஸ்.

யங்கம்பன்ஸ் அணி சார்பாக கமலீஸ்வரன், நிறோஜன் தலா 01 கோல் போட்டனர். (கு)

## இன்றைய போட்டிகள்

ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்று போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் கச்சாய் லொலிக்கின்ஸ் விளை யாட்டுக்கழகத்தை எதிர்த்து கெருடாவில் விவேகானந்தா விளையாட்டுக்க ழகமும் இரவு 7.15 மணிக்கு நடைபெறும் போட்டியில் புத்தூர் தமிழ்மதி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அம்பாள் வழக்கம்பிறை விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது.

++++++++++++

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட மாமனிதர் குமார் பொன்னம்பலம் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று நடைபெறும் போட்டியில் கலைமதி(பு) விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மயுலையூர் கண்ணகி விளையாட்டுக்கழகமும் தொடர்ந்து நடைபெறும் போட்டியில் பருத்தித்துறை ஏ விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அண்ணா சிலை யடி விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.(கு)

## 3 1/2 கிலோ கஞ்சா...

ள்ளது இதன் அடிப்படையில் களமிறங்கிய பொலிஸார் பிற்பகல் 4.00 மணியளவில் வவுனியா பஸ்தரிப்பு நிலையத்தில் பை ஒன்றுடன் சந்தேகத்துக்கிடமாக நின்றிருந்த கலாவ பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய நபரை விசாரணை செய்துள்ளனர். அப்போது அவர் வைத்திருந்த பைக்குள் 3 1/2 கிலோக்கி ராம் கஞ்சா வைத்திருந்தமை தெரியவந்த நிலையில் அவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து எடுத்துவரப்பட்ட கஞ்சாப் பொதியினை வவுனியா பஸ்தரிப்பு நிலையத்தில் வைத்து இடமாற்ற முற்பட்ட போதே இவர் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸாரின் முதற்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (செ -60)

## கீரிமலைக் கடலில்...

(வயது 36) என்பவரே இதில் உயிரிழந்த வராவார்.

இவர் கீரிமலைக்கும் மாதகலுக்கும் இடைப்பட்டகடற்பகுதியில் குளிப்பதற்காக நேற்றைய தினம் சென்றுள்ளார். அப்போது பிற்பகல் 2.30 மணியளவில் கடலில் நீந்திக் கொண்டிருந்த போது திடீரென உருவான சுழியில் அகப்பட்டு மூச்சுத்திணறி உயிரிழந்துள்ளளார்.

இவரது சடலம் மீட்கப்பட்டு தெல்லிப்பழை வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் இளவாலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ -9 )

## யாழ்.பண்ணை...

பதற்றம் ஏற்பட்டிருந்தது. எனினும் பெண்ணொருவருக்கு காயம் ஏற்பட்டதனை தவிர பெரிதளவிலான உயிர் சேதங்கள் எவையும் இடம்பெறாமையினால் பதற்றநிலை தணிந்திருந்தது. பண்ணைப் பகுதியில் உள்ள ஸ்ரீ லங்கா ரெலிக்கொம் தொலைத தொடர்பு சேவை நிறுவனத்திற்கு சொந்தமான தொலைத் தொடர்பு கோபுரமே இவ்வாறு சரிந்து விழுந்துள்ளது.

நேற்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெற்ற இந்த சம்பவத்தினால் தீவகத்திற்கான போக்குவரத்து மாற்று வழிபாதையினூடாக இடம்பெற்றிருந்தது. 2006ஆம் ஆண்டு காலப் பகுதியில் அமைக்கப்பட்ட மிக உயரமான கோபுரமான குறித்த கோபுரம் யுத்தத்திற்கு பின்னர் பயன்பாடு இன்றி காணப்பட்டது. எனினும் வருடத்திற்கு ஒரு தடவை பராமரிப்பு வேலைகள் இடம்பெற்று வந்துள்ளன. இந்த நிலையில் கடந்த ஆறு மாத காலமாக குறித்த தொலைத்தொடர்பு கோபுரத்தை கழற்றுவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று கொண்டிருந்துள்ளன.

குறித்த தொலைத்தொடர்பு கோபுரம் 180 மீற்றர் உயரம் கொண்டதாக நிர்மாணிக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த சில வாரங்களாக 100 மீற்றர் உயரம் வரையிலான பகுதி கழற்றப்பட்டுள்ளது. மிகுதி 80 மீற்றர் உயரமான கோபுரமே அங்கு இருந்துள்ளது. கோபுரம் பகுதி பகுதியாக கழற்றப்பட்டும் போது, கோபுரத்தை சுற்றி எட்டு திசைகளுக்கும் இழுத்து பூட்டப்பட்டுள்ள கேபிள்களும் ஒவ்வொன்றாக கழற்றப்பட்டுள்ளன. நேற்றைய தினமும் குறித்த பணிகள் இடம்பெற்று கொண்டிருந்த நிலையில்.

சில பணியாளர்களும் கோபுரத்தின் மேலும், கீழும் நின்றுள்ளனர். நேரம் ஆகிய தால் தேநீர் குடிப்பதற்காக அனைவரும் அங்கிருந்து சென்று அருகில் நின்றுள்ளனர். இந்த நேரத்தில் தொலைத்தொடர்பு கோபுரத்தை ஒரேயொரு கேபிளே தாங்கி கொண்டிருந்துள்ளது. குறித்த கேபிள் பிணைக்கப்பட்டிருந்த பகுதி உக்கல் அடைந்திருந்த காரணத்தினால் அறுத்து கொண்டு பாரிய சத்தத்துடன் கீழே விழுந்துள்ளது. இவ்வாறு கோபுரம் விழும் போது ஒரு தென்னை மற்றும் அருகில் இருந்த அரச திணைக்களம் ஒன்றின் வாகன தரிப்பிடம் ஆகியனவும், அதில் நின்ற மோட்டார் சைக்கிள் ஒன்றும் பாரிய சேதங்களுக்கு உள்ளாகியுள்ளன.

அத்தோடு குறித்த திணைக்களத்திற்கு வந்திருந்த பெண்ணொருவருக்கு கேபிள் கழுத்து பகுதியில் அடித்தமையினால் காயம் ஏற்பட்டுள்ளது. அவர் உடனடியாகவே யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். இதனை விட பெரிதளவிலான சேதங்கள் எவையும் ஏற்படவில்லை. மாறாக அருகில் இருந்த திணைக்களம், அல்லது வீதியில் பயணித்த பயணிகள் பேருந்து மீது விழுந்திருந்தால் பாரிய உயிர் சேதங்க[illegible] என அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் குறித்து கருத்து தெரிவித்த ரெலிக்கொம் நிறுவனத்தினர், தொலைத்தொடர்பு கோபுரத்தின் நிலை கருதியே அதனை அகற்றுவதற்கான வேலைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. கோபுரத்தின் மேல்பகுதியில் இருந்த அனைத்து பாகங்களும் கழற்றப்பட்டு விட்டன. அடிப்பகுதியே எஞ்சியிருந்தது. துரதிர்ஷ்ட வசமாக எஞ்சிய பகுதி சரிந்து விழுந்து விட்டது. எனினும் இவ் விபத்து நடைபெற்றதால் தொலைத்தொடர்பு சேவை மற்றும் இணைய சேவைகள் எவையும் பாதிப்படையவில்லை என அவர்கள் வலம்புரியிடம் தெரிவித்துள்ளனர். தொலைத் தொடர்பு கோபுரம் சரிந்து வீழ்ந்ததனை பெருமளவிலானோர் அங்கு வருகை தந்து பார்வையிட்டு கொண்டிருந்தனர்.

இன்னும் சிலர் அங்கு வந்து செல்பியும் எடுத்து சென்றதனை காண முடிந்தது. சம்பவ இடத்திற்கு பொலிசார் வரவழைக்கப் பட்டு வீதிக்கு குறுக்கே வீழ்ந்திருந்த தொலைத் தொடர்பு கோபுரத்தை கழற்றும் பணியில் நிறுவன ஊழியர்கள் நேற்று இரவு முழுவதும் ஈடுபட்டனர்.

மேற்படி விபத்து தொடர்பில் சம்பவ இடத்திற்கு வந்த யாழ்ப்பாண பொலிஸார் தமது முதற்கட்ட விசாரணைகளை அங்கு மேற்கொண்டிருந்ததுடன் மேலதிக விசாரணைகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

இலங்கையில் நிறுவப்பட்டுள்ள தொலைத் தொடர்பு கோபுரங்களில் நிலமட்டத்திலிருந்து அதி உயரமாக நிறுவப்பட்ட கோபுரமாக மேற்படி தொலைத்தொடர்பு கோபுரம் அடையாளப்பட்டிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது. (செ-4)

## பொலிஸ்மா...

சல் ஊடாக அனுப்பும் செயற்பாட்டை இடைநிறுத்துமாறு பொலிஸ்மா அதிபர் பு.ஜித் ஜயசுந்தர உத்தரவிட்டுள்ளதாக வெளியான செய்தியை பொலிஸ் ஊடகப் பிரிவு மறுத்துள்ளது.

இது குறித்து பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் வெளியிட்டுளள அறிக்கையில், பொலிஸ்மா அதிபரிடமிருந்து தமக்கு அவ்வாறானதொரு உத்தரவு கிடைக்கவில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-10)

## மகிந்த விட்ட ...

ரபியா மத்ரஸாவின் இரண்டாவது பட்டமளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் றிசாத் பதியுதீன் இதனை தெரிவித்தார்.

உலகில் எந்தவொரு மூலையில் குண்டு வெடிப்புகளோ, கொலைகளோ இடம்பெற்றாலும் அதற்கு முஸ்லிம்களே சூத்திரதாரிகளென மேற்குலகமும் ஊடக மாபியாக்களும் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றன.

இரத்தக் களரிகளையும், படுகொலைகளையும் கண்டு முஸ்லிம் மக்கள் வேதனைப்படுகின்றார்கள். ஆனால் அவர்கள் எம்மை நோககியே தங்கள் சுட்டு விரலை நீட்டிக் கொண்டிருக்கின்றனர்.

சுதந்திரத்திற்குப் பின்னர் நமது நாட்டில் முஸ்லிம்கள், சிங்கள மக்களுடன் முரண்பாடுகளைக் கொண்டிருக்கவில்லை.

ஆனால் அண்மைக் காலமாக சிங்கள மக்களுடன் முஸ்லிம்களை மோத வைதது இரத்தக் களரியை உருவாக்க ஒரு சதிகாரக் கூட்டம் அலைந்து திரிவதாக அவர் தெரிவித்தார். (இ-10)

## சு.க பொதுச்...

க்கப்பட்டுள்ளதாக கட்சி வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

இதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பச்சைக்கொடி காட்டும் பட்சத்தில் எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில், சுதந்திரக் கட்சியின் சின்னத்திலேயே மகிந்த ராஜபக்ஷ அணியும் களமிறங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால், இது விடயம் குறித்து ஜனாதிபதி இன்னும் எவ்வித அறிவிப்பையும் விடுக்கவில்லை.

அதேவேளை, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் பதவி சாமல் ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டால், அது மீண்டும் ராஜபக்ஷக்களை பலப்படுத்துவதற்கு வழங்கப்படும் சந்தர்ப்பமாகவே அமையும் என்று அக்கட்சியிலுள்ள முக்கிய சில உறுப்பினர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஆனால், சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் தொடர்ந்து அங்கத்துவம் வகிக்கும் சாமல் ராஜபக்ஷ நடுநிலைமையாக செயற்படக்கூடிய அரசியல்வாதி என்பதால், இந்த யோசனை குறித்து சாதகமாக பரீசிலிக்கலாம் என மற்றும் சில உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தற்போதைய பொதுச்செயலாளராக அமைச்சர் துமிந்த திஸாநாயக்க பதவி வகிக்கின்றார். இவரது குடும்பம் மகிந்த ராஜபக்ஷவுடன் நெருங்கிய தொடர்பை பேணிவந்தது.

துமிந்தவின் தந்தையான அமரர் பேர்ட்டி பிரேம்லாலுக்கு வடமத்திய மாகாண முதல்வர் பதவி வழங்கப்படாததால், மகிந்த ராஜபக்ஷ மீது அவரும் அவரது தந்தையும் கடும் சீற்றத்தில் இருந்தனர்.

இந்நிலையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து மகிந்த ராஜபக்ஷ அரசிலிருந்து துமிந்த திஸாநாயக்க வெளியேறினார்.

இதனையடுத்து ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின்னர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் பதவி துமிந்த திஸாநாயக்கவின் கைகளுக்குள் சென்றது. அமரர் பேர்ட்டி பிரேம் லாலுக்கு நன்றிக்கடன் செலுத்தும் முகமாகவும், இரண்டாம் அணித் தலைமையை உருவாக்கும் வகையிலேயே அந்தப் பதவியை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கியிருந்தார். எனவே, துமிந்த திஸாநாயக்க விடமிருந்த அந்தப் பதவியை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பறிப்பாரா என்ற வினா எழுந்துள்ளது.

அதேவேளை, இவ்வருடம் முடிவதற்கு முன்னர் முக்கிய சில முடிவுகளை எடுப்பதற்காக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு இவ்வாரம் கூடவுள்ளது. இதன்போது உள்ளூராட்சி சபைத் தேர்தல், எல்லை நிர்ணய குழுவின் அறிக்கை உட்பட சமகால அரசியல் நிலைவரங்கள் சம்பந்தமாகவும் ஆராயப்படவுள்ளது. (செ-11)

## மக்களிடம்...

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் மாதா மாதம் கூடுவதாக கூறப்பட்டிருந்தது. ஆனால் பல மாதங்களாக கூட்டப்படவில்லை. இந்தக் காலப் பகுதியில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உடனடியாக கவனம் செலுத்த வேண்டியுள்ளது. இதனால் உடனடியாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தை கூட்டுமாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சியான ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளரும், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். அக் கடிதத்தின் விபரம் வருமாறு.

தமிழ் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாம் சில அடிப்படைக் கொள்கைகளை வகுத்து அதற்கான மக்கள் ஆணையையும் பெற்றுக்கொண்டோம். முக்கியமாக வடக்கு-கிழக்கு இணைப்பு, சமஷ்டி அமைப்புமுறை, தமிழ் மக்களின் இறையாண்மை மற்றும் சுயநிர்ணய உரிமை என்பவற்றின் அடிப்படையிலான ஒரு சுயாட்சியே எமக்குத் தீர்வாக அமையும் என்பதை நாம் தெளிவாகக் கூறியிருந்தோம். இதன் அடிப்படையில்

1. த.தே.கூட்டமைப்பின் தலைமையிலான வடக்கு மாகாணசபையினால் முன்வைக்கப்பட்டுள்ள அரசியல் தீர்வுத்திட்ட யோசனைகள்

2. தமிழ் மக்கள் பேரவையினால் முன்வைக்கப்பட்டுள்ள அரசியல் தீர்வுத்திட்ட யோசனைகள் என்பன முன்வைக்கப்பட்டன.

எனினும் இப்பொழுது வடக்கு-கிழக்கு இணைக்கப்படமாட்டாது என்பதை சுமந்திரன் தெரிவித்திருக்கிறார். ஒற்றை யாட்சியில் எந்த மாற்றமும் ஏற்படாது என்பதை ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் மிகத் தெளிவாகக் கூறியுள்ளனர். வடக்கு-கிழக்கு உட்பட முழு இலங்கையிலும் பௌத்தத்திற்கு முதலிடம் என்று கூறப்படுகிறது. இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எத்தகைய பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வேண்டும்? இந்த விடயங்களை எவ்வாறு கையாள்வது கௌரவமான தீர்வினை எவ்வாறு பெற்றுக்கொள்வது போன்ற விடயங்களை கலந்துரையாடுவது அவசியமானது எனக் கருதுகிறோம். ஆகவே உடனடியாக எதுவிதக் காலதாமதமும் இல்லாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தைக் கூட்டி ஆக்கபூர்வமான முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்று கருதுகின்றோம். மிக நீண்டநாட்களாக ஒருங்கிணைப்புக்குழு கூடவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுவதுடன் இன்றைய காலகட்டத்தின் அவசியததைப் புரிந்துகொண்டு இந்தக் கூட்டத்தை மிகவிரைவில் கூட்டுவீர்கள் என்று எதிர்பார்க்கின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-250)

## தாஜுடீன் கொலை...

கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே எதிர்வரும் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேலும், இதன்போது நீதிமன்றத்தில் தகவலளித்த குற்றப் புலனாய்வுப் பிரிவினர், இந்தக் கொலை தொடர்பாக இன்னும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, தாஜுடீனின் சகோதரரிடம் வாக்குமூலம் பெறவும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அனுமதி கோரிய நிலையில் நீதவானும் அதற்கு அனுமதியளித்துள்ளார். (செ-11)

## மருத்துவ பீடத்துக்கு...

மூ ர் த் தி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர்மேலும்தெரிவிக்கையில் மருத்துவ பீட கற்கைநெறிக்கான கட்டடத் தொகுதியானது யாழ்.போதனா வைத்தியசாலையின் மேற்குப் பகுதியில் மருத்துவப் பீடத்திற்கு ஒதுக்கப்பட்ட 4 பரப்பு காணியில் அமைக்கப்படவுள்ளது.

உயர்கல்வி அமைச்சின் 720 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் 8 மாடிகளைக் கொண்டு அமைக்கப்படவுள்ளது. இக்கட்டிடத் தொகுதியில் மருத்துவ பீட கற்கை நெறிகளுக்கான பல்வேறு பிரிவுகளின் காரியாலய அலகுகளும் மாணவர்களுக்கு கற்கை வசதி வழங்கக் கூடிய அலகுகளும் அமையவுள்ளது.

இக்கட்டட அமைப்பு வேலைகள் பூரணமாக யாழ் மருத்துவ பீட நிருவாகத்தின் கீழ் அமையும். எனினும் நோயாளர் சேவை பிரிவுகள் இயங்கும் போது அவை முழுமையாக வைத்தியசாலைப் பணிப்பாளரின் கட்டுப்பாட்டில் இயங்கும்.

இக்கட்டிடத்தின் ஒரு தட்டில் அமைய இருக்கும் சத்திர சிகிச்சைக் கூடமும் மற்றும் ஆய்வு கூட வசதியும் பற்றி கருத்து முரண்பாடு எழுந்தது. இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுடன் கதைத்து சுமுகமான ஓர் முடிவு எட்டப்பட்டுள்ளது. (செ-9)



## குளத்து நீரில்...

மேற்படி சிறுவன் நேற்றைய தினம் தனது நண்பர்களுடன் கந்தரோடை பகுதியில் உள்ள இக்கிராணை குளத்தில் குளிப்பதற்காக சென் றுள்ளார். குளித்துக்கொண்டு இருந்த சமயம் குறித்த சிறுவன் நீரில் மூழ்கி உயிரி ழந்துள்ளதாக தெரியவருகிறது.

சிறுவனின் சடலம் மீட்கப்பட்டு தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற பின்னர் உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ் ,போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. சிறுவனின் மரணம்தொடர்பான மேலதிக விசாரணைகளை தெல்லிப்பழை பொலிஸார மேற்கொண்டு வருகின்றனர்.(செ-9)

**Evershine Education Centre**
No.123, Brown Road, Jaffna.

**ICT - G.C.E (O/L), Grade 10**
**வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன.**

- பல்லூடக நிகழ்த்துகை மூலமான கற்பித்தல்.
- கற்றல் கையேடுகள், மாதிரி பரீட்சை வினாத்தாள்கள் மற்றும் பயிற்சி வினாத்தாள்கள் வழங்கப்படும்.
- ஒவ்வொரு அலகு முடிவிலும் பரீட்சைகள் நடாத்தப்படும்.

அனுமதிக் கட்டணங்கள் கிடையாது.

- தமிழ், ஆங்கில மொழி மூல வகுப்புக்கள் நடைபெறும்.
- ஆங்கில மொழி மூல வகுப்புக்கள் முற்று முழுதாக ஆங்கிலத்தில் இடம்பெறும்.

ஆசிரியர் : S.Gowsigan (B.Tech – Network Tech.)
தொடர்புகளுக்கு: 0773784053
Email : gowsivembadi@gmail.com (7177)

**DCM யாழ்.நகர்**
**A/L 2019**
கலை, வர்த்தகம், தொழில்நுட்பம்
ஆரம்பம் 07.01.2017
சனி காலை 9.00 மணிக்கு

**ICT**

| A/L 2019 | A/L 2018 |
| --- | --- |
| ஆரம்பம் : 01.01.2017 ஞாயிறு காலை 10.30 | ஆரம்பம் : 31.12.2016 சனி காலை 09.30 (அலகு 1 இல் இருந்து கற்பிக்கப்படும்) |

- பல்லூடக நிகழ்த்துகை மூலமான கற்பித்தல்.
- கற்றல் கையேடுகள், மாதிரி பரீட்சை வினாத்தாள்கள் மற்றும் பயிற்சி வினாத்தாள்கள் வழங்கப்படும்.
- ஒவ்வொரு அலகு முடிவிலும் பரீட்சைகள் நடத்தப்படும்.

**Evershine Education Center**
No.123, Brown Road, Jaffna.
S.Gowsigan (B.Tech- Network Tech.)
0773784053
அனுமதிகளை முற்கூட்டியே பெற்றுக்கொள்ளவும் (7176)

**ஆங்கில வகுப்பு**
தரம் 02, 03, 04, 05, 06, 07, 08, 09, 10 ஆம் O/L, A/L மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தொழில் புரிபவர்களுக்குமான English Spoken with Grammar வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு : 0767070069
M.Suren

**NEC**
1. மணிக்கூட்டு வீதி, யாழ்.நகர்
2. பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி.

**A/L 2019**
கலை, வர்த்தகம், தொழில்நுட்பம்
பிரிவு - I :- ஆரம்பம் : 01.01.2017 (Sun - 9.30am)
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
தொ.பே : 0774696695

**ECONOMICS HALL**
நாவலர் வீதி, யாழ் நகர் (புகையிரதகடவை அருகில்)
**A/L 2019**
கலை, வர்த்தகப் பிரிவுகள் ஆரம்பம் (ஞாயிற்றுக்கிழமை)
ஜனவரி 01 காலை 9 மணி (C-7026)
குறிப்பு :- ஜனவரி 31 வரை அனுமதிக் கட்டணம் இலவசம்.
தனித்துவமான ஆசிரியர்குழுவின் அர்ப்பணிப்பான வழிகாட்டல்.

**KINGS ELECTRONICS(PVT) LTD**
**கிங்ஸ் எலக்ரோனிக்ஸ்**



X-mas விசேட விலைக் கழிவு 10-35% OFF

அழகிய, அதிநவீன தரத்தோடு மின் உபகரணங்கள், தளபாடங்கள், மற்றும் குழந்தைகளுக்கான பொருட்கள்

**LED TV'S**

| | |
| --- | --- |
| Samsung 32" | -31900 |
| Hisence 32" | -24900 |
| Sony 40" | -59999 |
| Hisence 24" | -17900 |
| Tcl 32" | -21900 |
| Panasonic 32" | -31500 |

3 YEARS WARRANTY

SAMSUNG R19 REFRIGERATOR 34900/= TEN YEARS WARRANTY

Sony 5.1 Home Theater RS 20,900/= ONE YEAR WARRANTY

INNOVEX WASHING MACHINE FIVE YEARS WARRANTY 34500/=

Furnitures Toys Electronics Baby Care 10% OFF

OPEN 08.00AM TO 08.00PM 365 DAYS

www.mykings.lk
021-4546699
Facebook/kingsjaffna
12A, Point Petro Road, Jaffna (வேம்படிச் சந்திக்கு அருகாமையில்) (செ-7019)

**FALC FRENCH LANGUAGE CENTRE FOR THE BEST FRENCH FOREVER**
**பிரெஞ்சு மொழி வகுப்பு**
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர்க்கான... Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma in French
விரிவுரையாளர் : France இல் ஆசிரியப் பயிற்சி - 2007, DELF A1, A2, B1 இல் 100 % சித்தி. இதுவரை 1173 மாணவர்கள்
No. 40, பலாலி வீதி, அரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 07.01.17 சனி 10 am.
பிரதான வீதி, நெல்லியடி TP: 021 3202971 ஆரம்பம் 09.01.17 திங்கள் 3.30pm.
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1 Classes.
Bus நிலையம் → அரியகுளம் → 300M → பலாலி வீதி → FLCentre (C-6777)

**வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு**
021 221 7603
021 567 1532

**அனைத்து நாடுகளுக்குமான விரைவு பொதிகள் சேவை**
விசேட விலை குறைப்பு
UK - 550/=Kg
DELIVERY IN 3 - 5 DAYS
மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்து பெற்றுக்கொள்ளப்படும்.
தொடர்புகளுக்கு: 0768226243
- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- நெல்லியடி
- வல்வெட்டித்துறை

V2 TRAVELS (C-6845)

**வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை**
பண்டிகைக் காலத்தில் உங்கள் உறவுகளுக்கு பெறுமதியான பொருட்களையும் கடிதங்களையும் விரைவாகவும் குறைந்த விலையிலும் அனுப்பிட
021 221 5656
070 330 5500
அண்ணா & கோ 976, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் (C-7014)

**VCM INSTITUTE**
Near the Manogara Junction, K.K.S Road, Jaffna.
**A/L 2019**
**இணைந்த கணிதம்**
B. ரவீந்திரன் B.Sc
ஆரம்பம் 01.01.2017 ஞாயிறு காலை 9.30 மணி

**கட்டட வேலைகள் செய்து கொடுக்கப்படும்**



கட்டடங்கள் கட்டுதல், வீடு கட்டுதல், பழைய வீடுகளைத் திருத்துதல், சுற்றுமதில் கட்டுதல், குளியலறை கட்டுதல், மாபிள் பதித்தல், தச்சு வேலைகள் என்பவற்றுடன் Plumbing, Painting, Electrical works அனைத்தும் தரமாகவும் குறைந்த விலையிலும் குறித்த காலத்திலும் செய்து கொடுக்கப்படும்.
AXSHAYA CONSTRUCTION, JAFFNA
தொடர்புகளுக்கு:- 0776679564 (J.K.VASAN) E.mail:-axshaya construction@gmail.com (C-6793)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.12.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.